
பஞ்சாமிர்தம்

மலர் 1 இதழ் [illegible]

ஜூன் 1924.

JL
M211,N24Pm
N24.1.2
201646

208 No. M. 1913 அடுத்த மாதச் சீமைக் கடிதத்தில் மட்டும் 12 படங்களுண்டு JUNE 1




9 - JUL 1924

EDITOR
A. MADHAVIAH

## Main Topics

The Juhu Conversations— *T. V. Seshagiri Iyer*, Ex-Judge, High Court 179
Be Fit— *Adapted*— 182
Republics In Ancient India— *O. P. Desikan* 184
Japan and the Japanese— **Illustrated**— *Rev. F. Kingsbury* 197
The Evil of Untouchability- *Prize Essay— V. A. Chidambara Pillay* 207
Village Life—Rao Saheb *M. S. Seshachala Iyer* 213
Extracts from Everywhere 218
Poetical Anthology— *V. P. Subramania Mudaliar*, G.B.V.C., 227
Functions of Government --*Abridged*-[*W. Wilson*] 229
**Padmavati Charitram** Part-III- *A. Madhaviah* 235
Our London Letter— **Illustrated**-*M. Lakshmi Ammal*, Bedford College, London 243
On Parody-*A. Madhaviah* 255
South Indian Games— **Illustrated** *P. V. Jagadesier* 259
Editorial Notes 261
Reviews, Poems, Translations, the World's Scriptures, Puzzles and Prize Competitions, etc.,

சந்தா விகிதம்

| | உள் நாடு | வெளி |
|---|---|---|
| வருஷம் | ரூ 5 0 0 | 6 0 0 |
| மாதம் | ,, 2 12 0 | 3 8 0 |
| தனிப்பிரதி | ,, 0 8 0 | 0 10 0 |

குறிப்பு
பத்திரிகைக்குச் சந்தாதார் சம்பாதிக்கத் தமிழ் நாடெங்கும் [illegible]கர்கள் தேவை.

விளம்பர விகிதம்
பக்கத்துக்கு 10 ரூபா
½ பக்கம் ரூ 5—8—0
நீடித்தகுத்தகைவிகிதம் எழுதி அறிக.

# உள்ளுறை


| விஷயம். | எழுதியவர் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 1. ஜா ஹா சம்பாஷணைகள் | —ஸ்ரீ. T. V. சேஷகிரி ஐயர், B. A., B. L., மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் | 179 |
| 2. இடப் படுவீரே ! | —அமுதகவி | 182 |
| 3. பூர்வீக இந்தியக் குடியரசு நாடுகள்— | ஸ்ரீ. ஓ. ப. தேசிகன் | 184 |
| 4. ஜப்பானும் ஜப்பானியரும்—படங்களுடன் | Rev. F. கிங்ஸ்பெரி, B. A., | 197 |
| 5. பூதேவி திருநாள் | —அமுதகவி | 207 |
| 6. தீண்டாமை என்னும் தீங்கு—சித்திரைப் பரிசு பெற்ற கட்டுரை | —ஸ்ரீ. வே. ஆ. சிதம்பரப் பிள்ளை | 208 |
| 7. கிராமவாசம் | —ராவ் சாகிப் M. S. சேஷாசலையர் | 213 |
| 8. பஞ்சாமிர்தத்தைப் பற்றிய என் மனத் தேற்றம்— | ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை யம்மாள் | 217 |
| 9. பலதுறைப் பொறுக்கு மணிகள் | | 218 |
| 10. இன்கவித் திரட்டு | —ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C., | 226 |
| 11. இராஜாங்கத்தின் கடைமைகள்—சுருக்கம்— | [உட்ரோ உல்ஸன்] | 229 |
| 12. சர்வ சமய சமரச தர்சகி—13–18 | | 234 |
| 13. பத்மாவதி சரித்திரம் மூன்றும் பாகம் | —ஸ்ரீ. அ. மாதவையர் | 23[illegible] |
| 14. நமது சீமைக் கடிதம்—படங்களுடன் | —ஸ்ரீமதி M. லக்ஷ்மி அம்மாள், (B. A., Hons.) லண்டன் | 243 |
| 15. பரிசுகள் | | 251 |
| 16. மதிப்புரை—6 புஸ்தகங்கள்—ப-ம் ப-ர் ; | ஸ்ரீ. வே. நாராயணையர், M. A., M. L., | 252 |
| 17. விகடப்பா | —ஸ்ரீ. அ. மாதவையர் | 255 |
| 18. தென்னிந்திய விளையாட்டுக்கள்—படத்துடன்— | ஸ்ரீ. P. V. ஜகதீசையர் | 259 |
| 19. பத்திராதிபர் குறிப்புக்கள் | | 260 |


குறிப்பு :—இந்தக் காசில் 88 பக்கங்களும் 9 சித்திரப் படங்களும், வேறு பல அலங்காரங்களும் உள்ளன.

# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

9 - JUL 192

நான் ஒரு மானுடன் : நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மாலை—I | ஆனி—1924 | காசு-

## ஜாஹா சம்பாஷணைகள்



மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜ்
ஸ்ரீ. T. V. சேஷகிரி ஐயர், சென்னை

காத்மாஜி, எல்லோரும் எதிர் பார்த்த வண்ணமே, சொல் வஞ்சனை யில்லா மலும் குறிப்பாகவும் பேசி யிருக்கிறார். ஒத்துழையாமை என்ற கொள்கைக்கு, அவர், அக்ஷரத்திலும் உட் கருத் திலும் பொருத்த மாகவே யிருக்கிறார். தடுக்கவோ கெடுக் கவோ உத்தேசித்துச் சட்ட சபைக்குள் புக நினைப்பது, உண்மையில் அஹிம்சைக்கு விரோத மாகும். அதனால் தான், அஹிம்சை யோடு கூடிய ஒத்துழையாமைக்குக் குரு பீடம் போன்ற இவர், சுயராஜ்யக் கட்சிக் காரரது நடவடிக்கையைக் கண்டித் திருக்கிறார். சிலர், காங்கிர ஸுக்குள் சுயராஜ்யக் கட்சிக்காரர் புகுவதையே மகாத்மா முற்றிலும் தடுத் திருக்க வேண்டு மென்றும் ; அவ்வாறு செய்யாது அரை மனதாய்க் கண்டித்தது, அவர் நடக்கை முன் பின் பொருத்த மில்லாத தென்பதைக் காட்டு மென்றும், சொல்லுகிறார்கள். நான் இதை ஒத்துக் கொள்ள வில்லை. அபிப்பிராய பேதங்களை மேன்மை பாராட்டுவது மகாத்மாவின் குண மென்பது பிரபலம். காங்கிரஸின் தீர்மானங்களில் ஏதாயினும் அவர்கள் மனத்

திற்கேற்ற தாக வில்லா விட்டால் ஆக்ஷேபிக்கும் சுதந்திரத்தையும் கொடுத்து, அவர், மிதவாதிகளைக் கூட காங்கிரஸைச் சேரும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் முதலில் தேச பக்தர்; பிறகே காங்கிரஸ் கட்சிக் காரர். அவர் தாராள சிந்தனை யுள்ள மஹா னாதலால், தம்முடன் கண்ணோடு கண்ணாய்ப் பார்க்காதவரைப் பழிப்ப தில்லை. ஒருவன் தனது தேசத்திற்குத் தன்னால் இயன்ற மட்டும் சேவை புரிவா னாகில், அவன் அபிப்பிராயங்களை மகாத்மா ஒத்துக் கொள்ள வில்லை என்ற விஷயத்தை மட்டும் அநுசரித்து, ஒருநாளும் அவனை விரோதியாகப் பாராட்டுகிற தில்லை. பண்டிதர் மதன்மோஹன் மலாவியாவைப் போன்றவர் காங்கிரஸ் மெம்பர்களாக விருப்பது இதற்கு நிதர்சனம். பண்டிதர் காங்கிரஸைச் சேர முடியு மானால், தாஸரும் நேருவும் சேரக் கூடா தென்று அவர் எப்படிச் சொல்ல லாம்? மிஸ்டர் காமத்தின் அக்கிராசனத்தின் கீழ்க் கூடிய 'லிபெரல்' சபைக்கு மகாத்மா அனுப்பிய நற்செய்தியைப் பாருங்கள்: லிபெரல் கூட்டத்தார், ஒத்துழையாமைக்கு நேர் விரோதிகள். அப்படி யிருந்தும், மகாத்மா, அக்கூட்டம் புரியும் தேச சேவை முயற்சிகளை வாழ்த்தி யிருக்கிறார். இந்தியாவின் அரும் பெரும் புதல்வரான மகாத்மாவின் மனோ பாவத்தை ஒருவன் உண்மையில் அறிவா னாகில், அவர் சொல்வதிலும் செய்வதிலும் முக்கியமாக விளங்குவது தேச பக்தி யென்பதைக் காண்பான். மற் றெல்லா நோக்கங்களும் இதற்குக் கீழ்ப் பட்டனவே.

சுயராஜ்யக் கட்சிக்காரரைப் பற்றி அவ்வாறு நான் சொல்ல முடியாது. எலக்ஷன் சமயத்தில் அவர்க ளெழுப்பிய "தடை" என்ற வீரம் நிறைந்த யுத்தத் தொனி, இப்பொழுது, 'துரைத்தன அதிக்கிரமத்தை எதிர்த்தல்' என்று, மெலிந்து விட்டது. மிகவும் விநயத்துடன், இது சற்றும் பொருத்த மில்லாதது என்று, தெரிவித்துக் கொள்கிறேன். ராஜீய விஷயங்களில் முயற்சிக்கும் ஒவ்வொருவனும், அவன் லிபெரலானாலும், தனித் தேசீய உழைப்பாளி (Independent Nationalist) யானாலும், அதிகார தோரணையில் துரைத்தனத்தார் தேச விருத்திக்கு இடையூறுகள் செய்தால், எதிர்க்கக் கடமைப் பட்டிருக்கிறான். ஆகையால், சுய ராஜ்யக் கட்சி... ள்ளவர் களுக்கும் அவனுக்கும் வித்... சமாக ... ன்னம் இருக்

207646



படக்கூடிய போராட்டங்கள் குறைகின்றன. பொது ஜனங்களுடைய சம்மத மின்றி எவ்விதம் அரசியலை நடத்துவது அசாத்தியமோ, அது போலவே பொது



சுதேசமித்திரன் பத்திராசிரியர்
ஸ்ரீமான் A. ரங்கசாமி ஐயங்கார், B.A., B.L., M.L.A.

ஜனங்களிட மிருந்து பொருளும், உதவியும் கிடைத்தாலன்றி அரசாங்கத்தை நடத்தி வருவது அசாத்தியமாதலால், வரவு செலவு விஷயங்களில் முதன் முதலாக இந்த சித்தாந்தம் பிரயோகத்திற்கு வந்தது. அரசியலை நடத்திவர அரசாங்கத்திற்குப் பணம் வேண்டி இருந்தாலும், அந்தப் பணத்தை வரி மூலமாக விதித்து வசூல் செய்யப் போது ஜனங்களுடைய அநுமதி அவசியமாக விருந்தாலும், அரசியல் அது வழியே நடந்துவர ஜனங்கள் விட்டுவைத்திருந்த நிலைமை பல தேசங்களில் மாறுதலடைந்து, அவர்கள் நிர்வாகத்தில் நெருங்கிய சம்பந்தம்

207646

பெறலாயினர். ஒழுங்காக நிர்வாகம் நடந்து வரும் எந்த தேசத்திலும், பொது ஜனங்களிடமிருந்து வரி மூலமாக வசூல் செய்யும் பொருளினை ஜனங்களுக்கு நன்மை பயக்கக் கூடிய காரியங்களுக் காகவே செலவு செய்ய வேண்டு மென்பதுதான் அரசிறையின் முக்கிய தர்மமாகும். நமது தேசத்திலும் மனு காலம் முதல் இந்த தர்மம் அனுஷ்டானத்தி லிருந்து வந்திருப்பதாக, காளிதாஸ மகா கவியின் அடியிற்கண்ட வாக்கியங்களி லிருந்து தெரிகிறது :—

ப்ரஜா நாமேவ பூர்த்யயதம் ஸராஜா பலிமக்ரஹீத்!

மேலே கண்ட இரண்டு சித்தாந்தங்களையும் ஒப்புக்கொண்டாலும், அல்லது அவைகள் எந்த தேசத்திலும் அனுஷ்டானத்தி லிருந்தாலும், அவைகளைத் தொடர்ந்து மற்றொரு தர்மத்தையும் ஒப்புக்கொண்டே யாகவேண்டும். அதாவது, ஜனங்களுடைய நன்மையை உத்தேசித்தே வரிகள் வசூல் செய்யப்படுவதால், வரிகள் மூலமாக எவ்வளவு தொகையை வசூல் செய்ய வேண்டு மென்றும், அந்தத் தொகையை எவ்விதம் உபயோகப் படுத்தவேண்டு மென்றும், எந்த இனங்களில் விதித்து வசூல் செய்ய வேண்டு மென்றும், தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாக நிர்த்தாரணம் செய்ய ஜனங்கள் சுதந்தர முடையவர்களாக விருக்கவேண்டும். அரசராவது அல்லது நிர்வாகிகளாவது ஜனங்களுடைய சம்மதமின்றி, தங்களுடைய இஷ்டம்போல் வரி விதிக்கக் கூடாது. ஜனங்களிடமிருந்து வரிகள் மூலமாகப் பணம் வசூல் செய்யப்படுவதால், அந்த வரிப் பணத்தைச் செலவு செய்யும் விஷயங்களிலும் அவர்கள் அதிகாரமுடையவர்களாக விருக்கவேண்டிய தவசியம். இந்த சுதந்தரம் ஆங்கிலநாட்டு மகாஜனங்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டு மகாசபையில் போராடிய காலங்களில், ஜனங்கள் வரிகளைக் கொடுத்த போதிலும் அதைச் செலவிடும் விஷயங்களில் தலையிடலாகாதென்று அரசர் சொல்லியது, கொள்ளையடிப்பதற்குச் சமானமாக விருக்கிற



தென்று அவர்களுடைய ராஜதந்த்துவ நிபுணர்கள் கண்டித்தார்கள். ஜனங்களுடைய சம்மதத்தின் பேரிலேயே வரிகளை விதிக்கவேண்டு மென்கிறகொள்கை இவ்விதம் முடிவில் ஸ்திர பட்டுவிட்டதால், அரசாங்கத்தின் தேவைகளுக்கும் பொது ஜனங்களுடைய நன்மையைப் பெருக்குவதற்கும் அவசியமான வரிகளை விதித்து, அவைகளை வசூல் செய்ய நிர்வாகிகளுக்கு அனுமதி கொடுக்கும் அதிகாரம் ஜனப் பிரதிநிதிகளுடையதாகிவிட்டது. அரசாங்கத்தை நடத்தி வருவதற்கு அவசியமான பொருளைப் பெறத் தங்களைக் கூட்டிக் கேட்கும் அவசியம் அரசருக்கு ஏற்பட்டதை ஜனப் பிரதிநிதிகள் அங்குரார்ப்பணமாக வைத்துக்கொண்டு, சட்டங்களை இயற்றவும், நிர்வாகிகளின் மீது ஆதிக்கம் செலுத்தவும் அவர்கள் அதிகாரத்தை உண்டுபண்ணிக் கொண்டார்கள். ஜனப் பிரதிநிதிகளை அரசர் அரசியலை நடத்துவதற்காகப் பொருள் கொடுத்துதவும்படி கேட்டுக் கொண்டதும், முந்தின வருஷத்தில் தாங்கள் கொடுத்த பணத்தைக் கொண்டு நடத்திய நிர்வாகத்திலுள்ள ஊழல்களையும், தங்களுடைய குறைகளையும் அவர்கள் வெளியிடலானார்கள். அந்த வழக்கமானது ஸ்திரப்பட்டதின் பலனாக, அரசாங்கத்தை நடத்தி வருவதற்கு வேண்டிய பொருளை அரசர் கோரும்போதெல்லாம், ஜனங்களுக்கு இருந்து வரும் குறைகளை நிவர்த்தி செய்த பிறகே அப்பொருளை வசூலிக்கவும், செலவு செய்யவும் அனுமதிக்க வேண்டு மென்கிற தர்மமானது ஸ்தாபித மாயிற்று. அவ்விதக் குறைகளை மன்னர்பிரானுக்குப் பத்திரங்கள் மூலமாகவும், மனுக்கள் மூலமாகவும், பிரேரணைகள் மூலமாகவும் தெரிவித்துக் கொள்ளும் வழக்கம் முதலில் இருந்து வந்தது. பிறகு அந்த விஷயங்கள் அரசருக்கு மந்திரிகளின் மூலமாகப் பலவழிகளில் தெரிவித்துக் கொள்ளகூடிய வசதிகள் உண்டாயின. நாளடைவில் இந்த மனுக்கள் செய்துகொள்ளும் வழக்கமானது மசோதாக்கள் அல்லது சட்டம் செய்யும் பிரேரணைகளாக மாறின. அவைகளை அரசர் ஒப்புக்கொண்டு அரசாங்கத்தை நடத்துவதற்கு வேண்டிய

பொருளைப்பெற்று வந்தனர். பத்திரம் வாசித்துக் கொடுத்தலும் இதர பிரேரணைகளைக் கொண்டு வருதலும் இராணுவத்திலுள்ள குறைகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுவதற்கு உபயோகப் படுத்தப்பட்டன.

இவ்வாறு ஜனப்பிரதிநிதிகளடங்கிய பார்லிமெண்டு மகாசபைக்கு சட்டங்களை இயற்றவும், நிர்வாகிகள் மீது ஆதிக்கப்படுத்தவும் செலுத்தவும் உரிமை கிடைத்தது, வரவு செலவு விஷயங்களில் அதிகாரம் கிடைத்ததைக் கொண்டே சாத்தியமாயிற்று. வரவு செலவு விஷயங்களில் பரம்பரையான பிரபுக்கள் கையிலதிகார மிருப்பதை விட சாமான்ய ஜனங்களுடைய பிரதிநிதிகளிடம் அதிகார மிருப்பதே உபயோகமாக விருந்ததால், வரி விதித்தல், சட்ட மியற்றுதல், நிர்வாகிகள் மீது அதிகாரம் செலுத்துதல் முதலிய விஷயங்களில், சாமான்ய ஜனங்களின் சபையாகிய காமன்ஸ் சபை மிகுந்த செல்வாக்கடைந்தது. இவ்விதமாக இரண்டு சபைகளிலுமுள்ள ஜனப் பிரதிநிதிகளுடைய சம்மதத்தின் பேரிலேயே அரசர் சட்டமியற்ற வேண்டுமென்றும், செலவுக்கு வேண்டிய பொருளைப் பெறவும், வரிகளை விதிக்கவும் முக்கியமாக காமன்ஸ் சபையின் அனுமதியைப் பெற வேண்டுமென்றும், இரண்டு சித்தாந்தங்கள் ஏற்பட்டன.

பார்லிமெண்டு ஆட்சிக்கு ஆதாரமான இந்த இரண்டு தத்துவங்களும் சுய ஆட்சி தர்மம் என்பதை, அதாவது ஜனங்களுக்காக ஜனங்களே ஜனங்களை ஆட்சி செய்யும் நிலைமையை, முழுதும் ஏற்படுத்தப் போதுமானவைகளாக விருக்கவில்லை. உண்மையான ஜன ஆட்சியானது ராஜாங்கக் காரியங்களில் நிர்வாக அதிகாரிகள் ஜனங்களுடைய இஷ்டத்துக்கு அடங்கினவர்களாக இருக்கவேண்டுமென்பதையும் குறிப்பிடுகிறது. மேனாடுகளின் சுவாதீன ஸ்தாபனங்களின் பலனாக ஏற்பட்ட பார்லிமெண்டுகளும், ஜன சபைகளும், இதனுடன் மற்றொரு மூன்றாவது தத்துவத்தைக் கண்டுபிடித்து வளர்ச்சிப்படுத்தி யிருக்கின்றன. அந்தத் தத்துவத்தின் பிரயோகத்தினால் நிர்வாக அதிகாரிகள் ஜனப் பிரதிநிதிகளுக்குக் கட்டுப் பட்டுப் போகிறார்



கள். அது யாதெனில், ஜனப் பிரதி நிதிகள் கோரிக்கைகளுக்குக் கட்டுப் பட்டு நடக்காவிடில், அரசாங்கச் செலவுக்குப் பணம் கொடுக்க மறுத்தலேயாம். ஸ்டூவர்டு வம்ச அரசர்கள் இங்கிலாந்தில் ஆண்ட காலத்தில், பார்லிமெண்டிடம் செலவுக்குப் போகாமலே கவர்ன்மெண்டார் ஆட்சியை நடத்தப் பார்த்தனர். கவர்ன்மெண்டின் இஷ்டப்படி வரிகளைப் பெருக்கிக் கொள்ளக் கூடிய வருமான மூலங்களை அவர்களுக்கு விட்டுக் கொடுத்து விடுவதால் அப்படி அவர்கள் செய்யக் கூடுமாதலால், அப்படி அவர்கள் செய்யக்கூடாமற் பார்த்துக் கொள்வதற்காக, மேனாடுகளில் இதில் பெரும் போராடி, முடிவில் அநேகமாக எல்லாத் தேசங்களிலும் ஒரே ஒரு வருஷத்துக்கு மட்டும் வரிகளை விதிக்கவும் செலவுகளைச் செய்யவும் அங்கீகாரம் கொடுக்கப்படுகிறது. ஆகையால் வருஷத்துக்கு ஒரு முறையாவது நிர்வாக கவர்ன்மெண்டார் பார்லிமெண்டிடத்தில் போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்பொழுது முதல் பொது ஜனங்களுடைய பணத்தை அவர்கள் எப்படி வசூல் செய்து எப்படிச் செலவு செய்தனர் என்றும், அவர்களுடைய ராஜரீகப் போக்குகளும் நிர்வாகமும் எப்படி இருந்திருக்கின்றன என்றும், ஆராய்ச்சி செய்யப் பார்லிமெண்டுக்குச் சந்தர்ப்ப மேற்பட்டுவிட்டது.

நிர்வாக கவர்ன்மெண்டாரிடத்தில் தங்களுக்குள்ள ஆதிக்கம் பெயரளவினதாக மட்டும் இராமல் காரியத்தில் செல்லுபடியுள்ளதாக விருக்கும்படிச் செய்ய, ஜன சபைகளான பார்லிமெண்டுகள், மேனாடுகளில் வேறு சில உபாயங்களையும் கற்பித்துக் கொண்டிருக்கின்றன: பிரதி வருஷமும் ராணுவ ஒழுங்குச் சட்டத்தைப் பார்லிமெண்டு நிறைவேற்றும்படி செய்வதும்; பல பிரபுக்களாலான சபையே தேசத்தின் மேலான நீதி சபையாதலின், அதன் முன்பாகப் பெரிய ராஜாதிகாரிகள் பேரில் தண்டனையின் பொருட்டுக் கேள்விகள் கேட்பதும், கண்டனத் தீர்மானங்களையும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களையும் கொண்டு வருவதும், மேற்சொன்ன உபாயங்களில் சில. பார்லிமெண்டு சபை குற்றம் சுமத்துவதாகிய முறை

ஒன்றும் முன்னாளில் அநுஷ்டானத்தி லிருந்தது. ஆனால் பண அதிகாரந்தான் முக்கியமானது. வரவு செலவு திட்டம் சம்பந்தமாகச் செய்யப்படும் தீர்மானங்கள் மூலமாகவே பார்லிமெண்டானது நிர்வாக அதிகாரிகளிடத்தில் தனக்குள்ள மேலதிகாரத்தைச் செலுத்தி வந்திருக்கிறது. செலவுக்குப் பணம் கொடுக்கப்பட மாட்டாது என்று பார்லிமெண்டு பய முறுத்திய சமயங்களிலும், செலவுக்குப் பணம் கொடுக்க மறுத்து விட்ட சமயங்களிலும், மந்திரிகள் பார்லிமெண்டுக்குப் பணிந்திருக்கிறார்கள். சில மந்திரி கோஷ்டிகளுடைய இலாக்காக்களின் செலவுகளுக்குப் பணம் கொடுக்கப் பார்லிமெண்டு மறுத்ததன் மேல் தான், அவர்கள் தங்களுடைய உத்தியோகங்களை விட்டு நீங்கவும், சபையிற் பெரும்பாலோருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களை அவர்களுக்குப் பதிலாக அரசர் நியமிக்கவும் நேர்ந்தது. செலவுக்குப் பணம் கொடுக்க மாட்டோமென்று சொல்லிவிட அதிகார மிருப்பதும், சமயம் நேர்ந்தபோதெல்லாம் அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்த திடபுத்தி இருந்திருப்பதுமே, சுய ஆட்சி ஏற்பட முக்கியமான காரணங்களாக இருந்திருக்கின்றன; அப்படிப்பட்ட சுய ஆட்சியில்தான் ஸர்வாதிகாரமுள்ள ஜனங்களின் காரியஸ்தர்களாக நிர்வாக கவர்ன்மெண்டார் இருக்கிறார்கள். ஜனங்களோ பார்லிமெண்டிலுள்ள தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாகத் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள். ஜனங்களுடைய நம்பிக்கையைத் தாங்கள் உடையவர்களாக இருப்பதனாலேயே தாங்கள் உத்தியோகங்களை வகித்திருப்பதாக நிர்வாக அதிகாரிகள் ஒப்புக்கொள்வதன் பலனாக, அவர்களுக்கும் ஜனப் பிரதிநிதிகளுக்குமிருந்து வந்த விரோதம் போய், நிர்வாகிகள் ஜனப் பிரதிநிதிச் சபையின் ஒரு பாகத்தினராகிவிட்டனர். எனவே, முக்கியமான விஷயங்களிலும் முக்கியமல்லாத விஷயங்களிலும், பிரதிநிதிச் சபையின் இஷ்டத்தை நிறைவேற்றி வைக்கும் ஒரு கருவியாக நிர்வாக கவர்ன்மெண்டாகி விட்டது.



ஆகவே, ஜனநாயக ஆட்சி முறையைக் கைக்கொண்டு அநுஷ்டித்து வருகிற பிரிட்டிஷ் தேசங்களில், அரசிறையை மறுத்தல், ராணுவ ஒழுங்கு முறைச் சட்டத்தை நிறைவேற்ற மறுத்தல், இவைபோன்ற கடுமையான முறைகளை அநுஷ்டிக்க வேண்டிய அவசியம் நாளடைவில் இராமல் போய்விட்ட போதிலும், ஆதியில் அடிக்கடி உபயோகித்தே வந்தார்கள். முக்கியமான விஷயங்களைப் பற்றியாவது, கவர்ன்மெண்டின் கொள்கையைப் பற்றியாவது, நிர்வாகிகள் கொண்டுவரும் பிரேரணையை ஆங்கில நாட்டிலாவது பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலாவது பார்லிமெண்டு சபை நிராகரித்துவிட்டால், மந்திரிகள் கட்டாயம் ராஜிநாமாச் செய்ய வேண்டும். இந்தத் தத்துவங்கள் அநுஷ்டானத்திற்கு வந்துக் கொண்டிருக்கும் நிலைமையிலாவது, அல்லது அநுஷ்டானத்திற்கு வரவிருக்கும் நிலைமையிலாவது இருந்து வரும் தேசங்களிலும், குடியேற்ற நாடுகளிலும், எந்த இலாகாக்களின் நிர்வாகத்தை நடத்தி வருவதற்காகப் பொருள் கேட்கப் படுகிறதோ, அந்த இலாக்காவின் நிர்வாகத்திலிருந்து வரும் குறையை அகற்றுவதற்காவது, அல்லது பார்லிமெண்டு ஆட்சி முறையில் சுய ஆட்சி முறைத் தத்துவத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்காவது, அரசிறையை மறுத்தல் முற்றிலும் நியாயமான முறையென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் சரித்திரங்களில், 1830-ம் வருஷம் முதல் 1870-ம் வருஷம் வரை, இதற்குப் பல உதாரணங்கள் காணக் கிடக்கின்றன. சமீப காலமாகிய 1907-ம் வருஷத்தில் கூட, நமது மாஜி ராஜப் பிரதிநிதியாகிய லார்டு செம்ஸ்போர்டு (Lord Chelmsford), க்வீன்ஸ் லாண்ட் (Queensland) கவர்னராகவிருந்த காலத்தில், ஜனப் பிரதிநிதிகளடங்கிய சபையே முக்கியமான சட்டங்களை இயற்றும் விஷயத்தில் செல்வாக்குடையதாக விருக்கவேண்டுமென்றும், கவர்ன்மெண்டால் பூராவாக நியமிக்கப் பட்டோ அல்லது அரைகுறையாக நியமிக்கப் பட்டோவுள்ள இரண்டாவது சபையானது (Upper House), சட்ட சபையைக் கலைத்ததால்,

பொது ஜன ஆதரவானது ஜனப் பிரதிநிதி சபையிலுள்ளவர்களுக்கு கிடைக்ககாம் லிருந்தாலன்றி, பிரதிநிதி சபையின் அபிப்பிராயத்திற்கு இரண்டாவது சபை கட்டுப்பட்டே தீரவேண்டுமென்று கட்டாயப் படுத்த வேண்டுமென்றும் ஸ்தாபிதம் செய்வதற்காக, ஜனப் பிரதிநிதிகள் அரசிறையை மறுத்து விட்டனர்.

ஆகவே, நம் நாட்டில், இந்தியா சட்ட சபையிலும், இதர சில மாகாண சட்ட சபைகளிலும், சென்ற மார்ச்சு மாதத்தில் அரசிறை மறுக்கப் பட்டிருக்கும் விஷயத்தை, மேலே குறிப்பிட்ட தத்துவங்களை மனத்திலிருத்தி ஆராய்ச்சி செய்ய வேண்டும். இந்தத் தத்துவங்களை ஓரளவே நமது தேசத்தில் பலர் ஒப்புக்கொள்வதால், இந்த தேசத்தின் நிலைமை சிக்கலானதே. அரசிறையை மறுக்கச் சட்ட சபைக்கு உரிமை யுண்டென்பதை ஸர் மால்கம் ஹெயிலீ ஒப்புக் கொண்டிருந்த போதிலும், அரசியல் முறையைத் திருத்துவதற்காக இந்தக் கடுமையான முறையை அனுஷ்டிக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறார். குடியேற்ற நாடுகளின் சரித்திரத்தில், இந்தக் கூற்றுக்கு எவ்வித ஆதாரத்தையும் காணோம். அது எவ்விதமிருந்த போதிலும், ஸ்வராஜ்யக் கட்சியார் அனுஷ்டித்த இந்த முறையானது புத்திசாலித்தனமானதா, உத்தேச பலனைப் பெற அது ஏற்ற முறையா வென்பன போன்ற விஷயங்களைப்பற்றி, நான் இந்த வியாசத்தில் விவாதிப்பது சரியாகாது.

:(o):

விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து—கற்புப்பத்து-2-ம் பதிப்பு—நவரஸம் கொழிக்கும் நாவல்—பழமொழிக் களஞ்சியம்-விலை 1—4—0.

பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய்க் கூறுவது—விலை 0—12—0.

பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம்—0—6—0. பஞ்சாமிர்தம் சந்தாதாரர்க்குப் பாதி விலை—மூன்றணா தான்.



# உதய ஞாயிறு

காலை என் மகனொடு கடற்கரை சென்றேன்:
சிலர் உள்ளம் போல் தேங்கி நின்றது கடல்;
நீல நீர்ப் பரப்பின் நெடுந் தொலை விளிம்பில்
கதிரவன் உதயமாம் காட்சி, என் இதயம்
பதிவுற, அங்ஙனே பார்த்து யான் நின்றேன்;
மிதந்து மேல் எழுந்ததோர் மிளிர்பொன் விம்பம்;
அறிவிலி, அக்கணம், பிறிது பேர் உவமை
குறியேன், சிறிய என் வயதில், ஓர் கொல்லன்,
உறு கனல் உலையில் உமி கரி யிட்டொரு
தோசைக் கல்லினைக் காய் சினத் தீப்பொறி
வீசுறக் காய்ச்சிட, விழி இமையாது யான்
தேசுறு வட்டம் நோக்கிய தினத்தையே
எண்ணினேன்; இதனிடை விண்ணின்மேல் உன்னிய
வண்ணச் சோதி வளையத் திருந்து,
வெண்ணறு உண்டவர் உண்ணிறை மகிழ்வென,
பண்ணுறுப் பருகினோர் பரிவுளப் பண்பென,
விண்ணும், மண்ணும், வியன்உல கெங்கும், என்
கண்ணும் கருத்தும் கவர்ந்ததோர் கவினொளி;
கடல் நீர் வெள்ளம், திடமலைச் சிகரம்,
செடி கொடி மரங்கள், பளிக்குச் சென்னல்கள்,
நெடு நீல் வானம், நீள் பசும் புல் தரை,
அலகில் உலகெலாம் இலகு தன் களமா,
குழவி மார்த் தாண்டன் குதித்துத் தாவி,
அழகுற ஆநந் தக் கூத் தாடித்

தழுவினன் அ[illegible] ழிபே ருவகையில்;
என்னையா[illegible] [illegible] என்ன[illegible] நின்றசெய்
தன்னையும் மறந்தேன், கனிமடத் [illegible],
இன்ன [illegible] அறி[illegible], [illegible]னுயிர்,
மௌனமோ, [illegible] இசையினில் மிடுகி,
[illegible] பொன்னெளி
வெள்ளந் தனிலே வீழ்ந்து மூழ் கியதால்;
இன்றிவண் இருந்திதை எழுதும் உண்மையே
அன்றவண் மூழ்கிய அவ்வுயிர்

தன்றனிச் சிறை மீண் டடைந்த தன் சான்றே!

—அமுதக்கவி


## 1. குசிகர் குட்டிக்கதைகள்

இதுவரை இங்கிலீஷிலே இருந்தன—இப்பொழுது தான் தமிழில் புஸ்தகமாக வெளி வருகின்றன.

நமது ஸ்திரீகளும் இங்கிலீஷ் பழக்க மில்லாதவரும் அவசியம் படிக்கவேண்டும். படிக்கப்படிக்கத் தெவிட்டாது.

முதற்பாகம் 8 கதைகள்—விலை பத்தணா தான்.

## 2. சித்தார்த்தன்

கௌதம புத்தரது திவ்ய சரித்திரத்தை நவீனக ரூபமாகத் தனித் தமிழ் நடையில் எழுதியது. இஃதுடன் புத்த சரிதை என்னும் அழகிய இனிமையான செய்யுட் பாகமும் சேர்ந்திருக்கிறது. விலை. 0—12—0.

3. இப்பொழுது வெளி வருகிறதே

பத்மாவதி சரித்திரம்—மூன்றாம் பாகம்

இதன் முதலிரண்டு பாகங்களும் வேண்டுமா?

பத்மாவதி சரித்திரம்— முதலிரண்டு பாகங்களும் ஒன்று சேர்ந்தது. 416 பக்கங்களும், 10 சித்திரப் படங்களும் உள்ளது. விலை இரண்டு ரூபா தான்

ஆசிரியர் அச்சுப் பிரசுராலயம்—புஸ்தகசாலை, மயிலாப்பூர்.


# டாமியன் பாதிரியார்


ஸ்ரீ. K. G. சேஷையர், B.A., B.L., திருவனந்தபுரம்

மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜ்


அன்பின வழிய துயிர் நிலை; அஃதிலார்க் கென்பு தோல் போர்த்த உடம்பு” என்றார் திருவள்ளுவர். அன்போடு பொருந்திய உடலே உயிருள்ள உடலாகும்; அன் பில்லாதார்க்குள்ள உடம்பு உயிர் நின்ற உடம் பாகாது, தோலால் போர்க்கப்பட்ட எலும்புக் கூடே யாகும் என்பது இக் குறளின் பொருள். உள் அன் பில்லாதார் வாழ்வை எவ்வளவு கேவலமாக வள்ளுவர் நினைத்தார் என்பது இதனால் தெற்றென விளங்கும். அன் பில்லாதவன் வாழ்க்கையைப் பாலை வனத்தில் தோன்றும் பட்ட மரத்திற்கு ஒப்பாகச் சொல்ல லாம். பஞ்சாமிர்தத்தில் அடங்கிய ஐந்து பொருள்களுள் அன்பு ஒன்றாகையால், பிறர் பால் அன்பு பாராட்டி, அவர்க் குற்ற கஷ்டத்தைத் தம்மால் இயன்ற மட்டும் நீக்கி, புகழ் உடம்பு பெற்ற ஒருவரைப் பற்றி, இங்கு சில வாக்குகள் வரைவது தவறாகாது.

ஐரோப்பா கண்டத்தில் பெல்ஜியம் என்ற ஓர் நாடு இருப்பதை யாவரும் அறிவார்கள். இராச்சியங்களின் பரஸ்பர ஒற்றுமைக் காக ஏற்பட்ட உடன்படிக்கை ஒன்றின் நிபந்தனைகட்கு மாறுபாடாய் ஜர்மானியர் பெல்ஜிய நாட்டில் படை யெடுத்துச் சென்றதைக் காரணமாகக் கொண்டு, சமீப காலத்தில் ஐரோப்பியப் பெரும் போர் விளைந்த விபரம் அறியாதார் யாவர்? அத் தேசத்தில்,

அவேய்ன் என்ற நகரின் அருகில், ட்ரெமெலூ என்ற கிராமத்தில், 1840-ம் வருஷம் ஜனவரி மாதம் 3-ந்தேதி நமது கதா புருஷர் பிறந்தார். அவரது இயற் பெயர் ஜோஸப் டேவியூஸ்டர். ஆகுல் பிறகு அதை டாமியன் என்று மாற்றிக் கொண்டாராகையால், டாமியன் என்ற பெயராலேயே அவரை உலகத்தார் அறிவார்கள். அவர் வளர்ச்சி விருத்தியில் அமைதற்கு வேண்டும் கலைகள் கற்று வரும் நாளில், சில காரணங்களால் அவர் தமயனைப் போல அவரும் கிருஸ்தவ சமய குரு ஆவதற்கு விரும்பினராகையால், 18-வது வயதில் ரோமன் காதோலிக் துறவிக் கோலம் பூண்டார். வெளி நாடுகளுக்கு மத போதகராக அனுப்பப் படும் தருணத்தைச் சகோதரர் இருவரும் எதிர் பார்த்து நிற்கையில், பசிபிக் மகா சமுத்திரத்தி லுள்ள ஹாவாய் என்னும் தீவுகளுக்கு உபதேசியாகப் போக டாமியனுடைய தமயனார் தெரியப்பட்டார். இச் செய்தியை அறிந்து மிகச் சந்தோஷம் அடைந்தவரான அத் தமயன், விரைவில் புறப்பட ஏற்பாடுகள் செய்தனர். ஆனால் திடீரென அவருக்கு ஒரு பிணி தோன்றியதால், தீவாந்தரம் போக முடியாமல், மனத் துயர் பெரிதும் அடைந்தார். இதைக் கண்டு டாமியன் அடங்கா விசனமுற்று, தம் முன்னோன் அருகிலிருந்து அவரைத் தேற்ற முயன்று வருகையில், அவர் துக்கம் மாறாதது கண்டு, "அண்ணா! உங்களுக்குப் பதிலாக நான் தூர தேசமாகிற அத் தீவுகளுக்கு மத போதகனாகச் சென்று, அங்குள்ள ஜனங்களைச் சீர் திருத்த முயன்றால் தங்கட்கு துக்கம் மாறிச் சமாதானம் உண்டாகுமா?" என்று, உருக்கத்துடன் கேட்டார். தமயனாரும் அது கேட்டு மகிழ்ந்து, அச் சமயம் பேசும் சக்தி யற்றவராய், தம்பியை இரு கைகளாலும் இறுகத் தழுவி, தான் அடைந்த சந்தோஷத்தை நன்கு புலப் படுத்தினார். உடனே டாமியன் அதிகாரிகளிடம் சென்று, தமயனுக்குப் பதிலாகத் தாம் நிச்சயித் திருந்த தீவாந்தரத்திற்குத் தாம் போக இச்சையா யிருப்பதை அறிவித்து, அவர்களுடைய அனுமதி பெற மன்றாடினார். அவரது இளம் வயதைக் கண்டு, அதிகாரிகள் முதலில் அவரை



அனுப்ப இணங்காதவர் போலத் தோன்றினர்கள்; ஆனால் அவருடைய ஆழ்ந்த விருப்பத்தையும் பரோபகார சீலத்தையும் மெச்சி, முடிவில் அவரை அனுப்ப உடன் பட்டார்கள். அப்பொழுது டாமியனுக்கு உண்டான சந்தோஷத்திற்குக் கங்கு கரை இல்லை. அவருடைய சக பாடிகள் யாவரும் 'இவர் பித்தரோ' என்று சந்தேகப் படும் வண்ணம் கூத்தாடிக் களித்தார். 1863-ம் வருஷக் கடைசியில், இவர் சொந்த நாடு விட்டுப் புறப்பட்டு, 1864-ல் ஹாவாய் தீவுகளின் பிரதான பட்டின மாகிற ஹானலூலு போய்ச் சேர்ந்தார்.

ஹாவாய் அல்லது ஸான்ட்விட்சு தீவுகள் பசிபிக் மகா சமுத்திரத்தில், பெல்ஜியம் நாட்டிற்கு ஏறக்குறைய 10,000 மைல் தூரத்தில் மேற்கு திசையிலும், நம் இந்தியாவுக்குக் கிழக்காய் ஏகதேசம் 10,500 மைலுக்கப்பாலும் இருக்கின்றன. ஆசியா கண்டத்திற்கும் அமெரிக்கா கண்டங்கட்கும் நடுவே இருக்கும் நீர்ப் பெருக்குக்கு பசிபிக் மகா சமுத்திரம் என்று பெயர். 'பசிபிக்' என்ற ஆங்கில மொழி 'சாந்தமான' என்று பொருள் படும். மஜல்லன் என்ற ஓர் கீர்த்தி பெற்ற மாலுமியால் இப் பெயர் இந்த மகா சமுத்திரத்திற்கு இடப்பட்டது. ஸ்பெயின் தேசத்தரசன் கட்டளைப்படி, பர்டினண்ட் மஜல்லன் என்றவரும், அவர் கீழில் மீகாமனாகிய ஸெபாஸ்டியன் டெல்காநோ என்றவரும், 1519-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 20-ம் தேதி ஸ்பெயினிலிருந்து மேல் சமுத்திரம் வழியாக இந்தியாவுக்கு மார்க்கம் ஏற்படுத்தக் கப்பலில் யாத்திரை புறப்பட்டார்கள். தென் அமெரிக்காவின் தெற்குக் கோடியின் அருகில் கப்பல்கள் வந்தபோது, அங்கடித்த புயலின் வன்மையையும், மலைப்பிரமாணம் அலைகளை எறிந்த கடலின் சீற்றத்தையும் கண்டு மாலுமிகள் யாவரும் நடுங்கினர். ஆனால் மஜல்லன் மிக தீரரானதால், அவர்கள் மனச்சோர் வடையாமல் அவர்களைத் தைரியப் படுத்தி, கப்பல்களைப் பயமின்றி ஓட்டச் செய்தார். கடைசியில் ஒரு ஜல சந்தி தென்பட, அது வழியாய்க் கப்பல்கள் மறுபுறம் சென்றன. ஜல சந்தி கடந்து மறு பக்கம் வந்ததும், மிகச் சாந்தமான பெருங்கடல் ஒன்றில் கப்பல்கள் பிரவேசித்தன. இக் காட்சியைக் கண்ட மஜல்லன் வியந்து, அந்த சமுத்திரத்திற்கு 'பசிபிக்' மகா கடல் என்று நாமம் சூட்டினார். அன்று முதல் அமெரிக்காவின் மேல்புற முள்ள மகா சமுத்திரம் இப்பெயரால் வழங்கி வருகிறது. அந்த ஜல சந்திக்கு, மஜல்லன் ஜலசந்தி என்று பெயரிடப் பட்டிருக்கிறது.

1864 முதல் 1873 வரை ஹானலூலுவில் பாதர் டாமியன் கிருஸ்து மதபோதகராய்க் காலம் கழித்தார். அவ்வாறு உழைத்து வரும் நாளில், ஹாவாய் தீவுகளைச் சேர்ந்த மொலோக்காய் என்னும் இடம் குஷ்டரோகிகள் நிறைந்த ஊரென்றும், அவர்கட்கு வாழ்நாள் முழுதும் சொல்ல ஒண்ணாத கொடும் கஷ்டம் அனுபவிக்க நேர்ந்திருப்பதோடு, அவர்கள் பலவிதத் துர்நடைத்தைகளில் மூழ்கி, சன்மார்க்க மென்ற பெயரே கேளாதவராய் அழிகின்றனர் என்றும், பாதர் டாமியன் அறிந்தார். அதைக் கேட்டு அடங்காப் பரிதாபம் அடைந்தவராய், அவ்வேழைகளின் நலத்தின் பொருட்டு உழைக்க அங்கே போக விரும்பி, அதிகாரிகளிடம் அனுமதி பெற்றார். மணப்பந்தர்க்கு ஏகும் மணாளனைப் போல, நிறை கடந்த ஆவலோடு மொலோக்காய்க்குச் சென்று, குச்சிதமான குஷ்டரோகிகளின் நலத்திற்காக உழைக்கத் தொடங்கினார். லௌகீக விருத்தி நடத்தி, தக்க ஊதியம் பெற்று, சுக ஜீவனம் செய்வதைப் பெரிதாக மதியாமல், இவர், நாகரீகமும் பரிஷ்காரமும் அற்ற மௌட்டியரும் மூர்க்கருமான ஹாவாய் தீவு வாசிகளுக்கு சமயபோதமும் சன்மார்க்க போதமும் செய்து, அவர்களைத் திருத்த முயறலே மேன்மையான கருமமென இது காறும் கொண்டு நடந்தது, போந்த எக்கியம் ஆகாதென்று நினைத்து, மொலோக்காய்க்குச் சென்றார் போலும். அங்குள்ளவரோ, தேகம் எங்கும் அருவருப் புண்டாக்கும் நொதித்த புண்கள் உடையவராய், சௌசம் சற்று மில்லாமல், சேற்றிலும் மலத்திலும் புரளும் பன்றிகளுக்கு ஒப்ப வாழ்ந்து வருபவர். துன்பமும் தீவினையுமே உடன் பிறப்புக்களாகப் பெற்றவர். சுகமும், சந்தோஷமும், ஆரோக்கியமும் இன்னவென்று சற்றும் அறியாதவர். அது காறும் யாவரும் வெறுத்த இவ்வேழைகளுக்கு, பாதர் டாமியன், மெய்யாகவே ஓர் தந்தை போலானார். அவர்கள் படும் கொடுந் துயரத்தைத் தம்மால் இயன்ற மட்டும் விலக்க முயன்றார். கூச்சமின்றி அவர்கள் புண்களைக் கழுவி வேதனையைக் குறைப்பார். இன்மொழிகள் கூறி அவர்



கள் முகங்கள் சற்று மலரச் செய்வார். அவர்களது வசதிகளை சுத்தமாக வைத்துக்கொள்ளப் போதிப்பார். அவர்களுக்கு நன்னெறி கற்பிப்பார். ஈசன் கருணையை ஆசையோடு விளக்குவார். அவர்களை மூடியிருந்த அக்ஞான அந்தகாரத்தை மெல்ல மெல்ல நீக்க முயல்வார். அவர் வாக்கிலும் செய்கையிலும் எப்பொழுதும் அன்பும் அருளும் விளங்கின. அவரது பொறுமைக்கும், மனத்திட்பம் வினைத்திட்பங் கட்கும் வரையில்லை. அவரது சிரித்த முகமும், கொஞ்சிக் குலாவும் மொழிகளும், அருள் நிறைந்த விழிகளும், நல்வழி செலுத்தும் போதனைகளும், மிருகங்கள் போலிருந்த அந்த ரோகிகளை மானிடத் தன்மையும் குணங்களும் உடையராய் சீர் திருத்தின. அக்குஷ்டரோகிகளின் நன்மைக்காக, 16 வருஷ காலம் அவர்கள் கூட இருந்து உழைத்து வந்தார். அவர்கள் கடவுளை வழிபட ஓர் கோவில் அமைத்தார். அவர்கள் வசிக்க வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ள குடில்கள் அமைத்தார். குடிக்க சுத்தமான தண்ணீர் ஏராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்தார். அவர்கள் புண்களுக்கு வேண்டும் சிகிச்சை செய்தார். உயர்ந்த சம்பாஷணைகளால் அவ் வேழைகளின் மனத் துயரத்தை நீக்கினார். அவரை தெய்வ மென்றே அச்சனங்கள் கருதி வந்தார்கள். மொலோக்காயில் டாமியன் பாதிரியார்,

> செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
> வானகமு மாற்றல் அரிது.

கடைசியாய், அவரும் அக்கொடும் நோய்க்கு ஆளானார். 1885-ல் ஒரு தினம், அவர் காலில் கொதிக்கும் நீர்த்துளிகள் விழுந்தன. அதனால் அவர் காலுக்கு வேதனை உண்டாகாதது கண்டு, ஆச்சரிய மடைந்து, ஒரு வைத்தியரிடம் சென்றார். வைத்தியர் அவரைப் பார்த்து விட்டு, அவர்க்குக் குஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார். இதைக் கேட்டு அவர் துக்கம் அடையவில்லை. முன்னிலும் தீவிரமாக குஷ்டரோகிகளின் மத்தியில் சென்று, அவர்களுக்கு குணகரமான பல பிரவர்த்திகளைச் செய்து வந்தார்.

1898ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15ம் தேதி இப் பெரியோர் முக்தி அடைந்தார்.



டாமியன் பாதிரியார்
(குஷ்டரோக முற்ற பின்பு)

"அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்."

## சர்வ சமய சமரச தர்சநி

—:(o):—

(29-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

6. "கேள்வியை நம்பாதே; பல தலை முறைகளாக வழங்குவன என்னும் பழமைக்காக மட்டும், பரம்பரையாக வரும் போதனைகளை நம்பி விடாதே; மிகப் பலர் சொல்கின்றனர் என்று, ஒன்றை நம்பாதே; அநுமானங்களை நம்பாதே; ஆன்றோர் வாக்கு, குரு வாக்கு என்பதற் காக மட்டும், எதையும் நம்பாதே; நீயாகக் கவனித்து ஆராய்ந்தது ஒன்று, புத்திக்குப் பொருத்த மாயும், எல்லோர்க்கும் நன்மை பயப்ப தாயு மிருந்தால், அதையே நம்பி ஒப்புக் கொண்டு, கடைப்பிடி."—புத்த பகவான்.

7. "மன மொழி மெய்களால் எவருக்கும் தீங்கு செய்யாத குற்றமில் குணத்தோனே, உண்மையான முஸ்லீம்."—குரான்.

8. "பிறர் உன்னிடத்தில் எப்படி நடக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அப்படியே பிறரிடத்தில் நீ நடப்பாயாக."—பைபிள்.

9. "பலனை விரும்பாமலும், சோம்பலின்றியும், செய்தற் குரிய கருமங்களைச் செய்தே தீர வேண்டும்."—கீதை.

10. "மனிதனுக் காக நோன்புகளே யன்றி, நோன்புகளுக் காக மனிதன் சிருஷ்டிக்கப்பட வில்லை."—பைபிள்.

11. மனித வாழ்க்கையில் உள்ள சுக துக்கங்களுக்கு மூலம், மனிதனுடைய எண்ணம், செயல், ஆசைகளே; விதியை ஆக்குவதும் நீக்குவதும் மனிதனே."—கந்பூஷியஸ்.

12. "நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று."—திருக்குறள்.

—:(❦):—

# சீமைக் கடிதம்

(61-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமதி M. லக்ஷ்மி யம்மாள்,.
(B. A., Hons.) லண்டன்

நகரங்களில் பெரிய லண்டன் முழுதுமே கடைத் தெரு வென்று சொல்லலாம். எங்கே பார்த்தாலும் கடைகளா! பூக் கடை, பழக் கடை, துணிக் கடை, தோல் சாமான் கடை, பாத்திரக் கடை, பல சரக்குக் கடை, கசாப்புக் கடை, நகைக் கடை, புஸ்தகக் கடை—இதிலென்ன விநோதம்? எல்லா ஊர்களிலும் தான் கடைகள் இருக்கின்றன. ஆனால் இத்தனை சாமான் தினுசுகளும், இவ்வளவு மரியாதையுடனும், சுறு சுறுப்புடனும், நாணயத்துடனும் வியாபாரம் நடப்பதும் எல்லா ஊர்களிலும் கிடையாது. உலகத்திலெங்கெங்கு முள்ள விளைபொருள்களும், கைத் தொழிற் பொருள்களும் இந்தக் கடைகளில் கொட்டிக் கிடக்கின்றன. கடையிலுள்ள சாமான் தினுசுகளைப் பெரிய கண்ணாடி ஜன்னல்களின் பின்புறம் ஜோடித்து வைத்திருப்பதால், வேண்டிய சாமான்கள் இசைந்த விலைக்குக் கிடைக்குமா, கிடைக்காதா என்று, வெளியிலிருந்தே, தெரிந்து கொள்ளலாம். பேரமே கிடையாது. கடைக்குள் நுழைந்தால் ஒரு நிமிஷம் கூடக் காத்திருக்க வேண்டிய தில்லை; கடைக்காரப் பெண்ணை எவ்வளவு அலைக்கழித்தாலும் அவள் முக மலர்ச்சி மாறுவ தில்லை. இந்தப் பெண்கள் அஷ்டாவதானம் செய்வதில் கைதேர்ந்தவர்கள்; உண்மையில் அவர்கள் பாடு எப்படி யிருந்தா



லும், வெளிப் பார்வைக்கு ஊக்கமும், குதூகலமும் உபகார சிந்தையும் குடி கொண்டவர் போலக் காணப் படுவார்கள்.

சாமானை விலை கொடுத்து வாங்க வேண்டியது தான் பாக்கி; தானே அது வீடு வந்து சேரும். எந்த சாமான்கள் எவ்விடத்தில் நல்லதாயும் மலிவாயும் அகப்படுமென்று தெரியாதவர்கள், சகல வியாபாரக் கடைகளுக்குப் போகலாம். இந்தக் கடைகளி லில்லாத சாமான் கிடையாது. ஊசி முதல் மோட்டார்கார் வரை, எது வேண்டுமென்றாலும் வாங்கலாம். கடைக் கட்டடங்கள் அரமனைகள் தான்; மின்சாரத் தூக்குக்க ளில்லாமல் ஒரே நாளில் கடை முழுவதும் நடப்பது கூடக் கஷ்டம். கடைக்குப் போவது இங் கொரு வேடிக்கை: "கிராமபோன்" அல்லது "வைர்லெஸ்" பாட்டுக் கச்சேரி நடக்கும் கூடத்திலும், சாப்பாட் டறையிலும், பூச்செடிகள் நிறைந்த உலாவு மேடைகளிலும், சாமான்கள் விற்பனை யாகும் அறைகளிலும், மின்சாரத் தூக்குக்களிலும், ஏழைகளையும், பணக்காரர்களையும், சகல வித ஜனங்களையும், இந்தக் கடைகளில் காணலாம், ஆனால் இங்கே புருஷர்கள், தீராவிட்டா லொழிய, சாமான் வாங்கப் போவதில்லை; கடைகளில் முக்கால் வாசி பெண்பாலார் கூட்டம் தான்.

கடைத் தெருக் காட்சி இராத்திரித் தான் சோபிக்கும்; கடைகளுக் கெதிரில் பல வர்ணங்களில் பிரகாசிக்கும் 'எலெக்டிரிக்' விளம்பரங்கள், இந்த நகரத்துக்கே ஒரு வித அழகு செய்வன.

இதுவோ நாகரிகம்? பெண்களே என்று கண்டவர்கள் ஏமாறத்தக்க பொம்மைகள், தங்கள் உடையின் அழகை வெளிக்காட்டும்படி, கடை ஜன்னல்களில் அசைந் தசைந்து தட்டாமாலை யாடுவதும், இரவில் அசரீரி வாக்குப்போல, பச்சையி லொரு தரம், நீலத்தி லொரு தரம், சிவப்பி லொரு தரம், "இந்த ஸோப்பை வாங்குங்கள்" என்று மின்சார வெளிச்சம் ஆகாயத்தில் விளம்பரம் செய்வதும்—இவை தானோ நாகரிகத்தின் அத்தாக்ஷிகள்? இந்த நாகரிகத்தின்

அஸ்திபாரம் குப்பை போல் திரண்ட பணக்குவியலே. இந்தக் குபேர பட்டணத்தில் பசியாலும் பிணியாலும் வருந்தும் ஏழை ஜனங்கள் எத்தனையோ பேர்கள். உலகத்தார் இந்தப் பாவத்தைத் தொலைக்க வழிதேடும் இந்நாளிலே, பணம் பெரிதென்று பாராட்டத் தக்க தொன்றன்று. ஆனால் இந்த வியாபாரம் பணத்தால் மட்டும் நடைபெறவில்லை; அத்துடன் சாமார்த்தியமும் நாணயமும் சேர்ந் திருக்கின்றன.

## மதிப்புரை

1. பல்லவர் சரித்திரம்—[தென் னிந்தியா வரலாற்றின் இடைப்பகுதி—முதற்பாகம்—பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார் இயற்றியது—விலை எட்டணா—கிரந்தகர்த்தரிடம் கிடைக்கும்] பள்ளிக் கூடங்களில் படிக்கும் மாணவர்க்குத் தமிழ் நாட்டிலும் மொழியிலும் அபிமானத்தை விருத்தி செய்யும் பொருட்டு, இச்சிறு நூல், நான்கு சித்திரப் படங்களுடன், எழுதப்பட்டது. மாணவர்க் கேற்க இதன் தமிழ் நடை எளிதாயும் இனிதாயு மிருக்கிறது. பண்டைத் தமிழ் மூவேந்தரையும் சங்க நூல்களையும் பற்றிப் பெரும்பாலும், பல்லவரைப் பற்றிச் சிறிதும், இந்த முதற் பாகத்தில் காணப் படுகிறது. பின் பாகங்களை எதிர் பார்க்கிறோம்.

2. இகபர சுகம்—அல்லது 50 மகாத்மாக்கள், ஞானிகளின் மொழிகள்—இரண்டாம் பதிப்பு—விலை எட்டணா.

3. மகாபாரத வசனம்—முதற்பாதி—விலை—ரூபா 1–0–0.

4. உத்தம பத்தினிகள்—முதற்பாகம்—விலை இரண்டணா. இம்மூன்று நூல்களும், மயிலாப்பூர் கா. சு. சேஷகிரி அய்யர் இயற்றியன. இவற்றுள் இகபரசுகம் என்பதில் பெரியோர்களின் வாக்கியங்கள் 227 திரட்டப்பட் டிருக்கின்றன. வியாசங்கள் எழுதுவோர், பிரசங்கங்கள் செய்வோர்க்கு, இது உபகாரமாகும்.



5. சாயுச்சிய சாதனை விளக்கம்:—[சாது சுந்தர சிங் என்னும் கிறிஸ்தவ சந்நியாசியின் வரலாறு—விலை ரூபா 1–0–0 C. L. S., சென்னை.] இப்பெரியோர், 3–9–1889-ல், பாட்டியாலா மாகாணத்தில், ராம்பூர் என்னும் ஊரில், செல்வம் மிக்க ஒரு சீக்கிய குடும்பத்தில் பிறந்தவர். இளமையிலேயே ஆத்ம தாகத்தை யடைந்தவர். இவர் கிறிஸ்தவரான வரலாறு பின்வருமாறு:—

"கிறிஸ்து மதத்தைப் போதிப்பவர்களைக் கண்டால் அடங்காத கோபங்கொண்டு, அவர்கள்மேற் கல்லெறிவதும், அவர்கள் கையி லிருக்கும் புஸ்தகங்களைப் பிடுங்கிக் கிழித்து நாசமாக்குவதும் எனக்கு வழக்கம். சீக்கிய, ஹிந்து மதங்களில் நான் கொண்டிருந்த வைராக்கியம் இந்நூதன மதத்தைப் பகைக்கச் செய்தது. மத உன்மத்தம் ஓர் பக்கமும், சாந்தியுடைய நான் எடுத்த அரிய பெரிய பிரயத்தன மனைத்தும் வியர்த்தமாயினவே என்ற ஆசாபங்கம் ஓர் பக்கமும் என் இதயத்தைப் புண்படுத்தியதால், உயிர் வாழ்க்கையில் வெறுப் புற்றுத் தற்கொலை செய்யவும் துணிந்தேன். ஒருநாள் விடியுமுன் எழுந்து, தெய்வமொன் றிருந்தால் அப்பொழுது எனக்கு நல்வழி காட்டவேண்டும், இல்லாவிடில் பிழைத்திருப்பதில் பயனில்லை யென்று எண்ணினேன். காலை 5 மணிக்கு என் வீட்டருகில் புகைவண்டித் தொடரொன்று செல்லும்; அவ்வண்டித்தொடரின் கீழ் விழுந்து என் உயிரைப் போக்கிக்கொள்ளத் தீர்மானித்தேன். ஆனால் 4-30 மணிபோல் நான் மன முடைந்து கண்ணீ ராறு பெருக்கி ஜெபித்துக் கொண்டிருந்த அறையில், பெரிய வெளிச்ச முண்டாயிற்று. இது என்ன என்று அறியாமல் திகைத்து மனந் தடுமாறி யிருக்கையில், இது தெய்வம் கருணை கூர்ந்து அருளிய அற்புதக் காட்சியா யிருக்கலா மென்ற எண்ணமுதித்தது. இக்கிளர் என்ன என்று உற்றுப் பார்க்கையில், நான் தூஷித்துப் பகைத்தசற் குருவாகிய இயேசுவின் முகச் சாயலை ஆங்குக் கண்டேன். இது இராமர் அல்லது கிருஷ்ணனுடைய முகத் தோற்றமா யிருந்திருக்குமாகில், நான் உடனே சாஷ்டாங்கமாய்ப் பணிந்திருப்பேன். கிறிஸ்து மிகக் குளிர்ந்த முகத்தோடு என்னைப் பார்த்தார். பின் 'எத்தனை நாள் நீ என்னைப் பகைப்பாய்? மெய்வழி அறிந்துய்ய விரும்பினை யன்றோ? நான் உன்னைப் புரக்க வந்தேன். நானளிக்கும் இரட்சணியத்தை ஏற்றுக்கொள்' என்ற ஓர் அசரீரி வாக்கும் பிறந்தது. கிறிஸ்து சிரஞ்சீவியாகிய மெய்க் குருவென்ற எண்ணம் என் புத்தியில் உதித்தது."

இந்நூலில் இவரது பிரயாணங்களும், போதனைகளும் கூறப்பட் டிருக்கின்றன. சில பாகங்களில் காணும் தமிழ் நடை, இந்திய கிறிஸ்தவ ஸங்கேதங்களையும் பரிபாஷையையும் நன்கு அறியாதார்க்கு எளிதில் விளங்குவதன்று. இந்நூல், "சாது" என்ற ஆங்கில கிரந்தத்தின் சுருக்கமாகும். ஆத்ம தத்துவ விசாரணை செய்யும் தமிழர்க்கு இது பயன்படும்—இவர் படத்தை 169–ம் பக்கம் பார்க்க.



(73-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**முந்தின—சித்திரை—மாதப் பரிசு விஷயம்.**

II. பொதுப் பரிசு—சரியான விடைகள் (1) மகாத்மா காந்தி (2) வீணை (3) பஞ்சாமிர்தம் (4) மனிதப்பிறவி. இப்பரிசினுக்கு விடைகள் அனுப்பினவர் 11 பேர்; நால்வர் விடைகளே நான்கும் சரியாயிருந்தன. இவர்க்குள், திருச்சூர் ஸ்ரீ. ந. வெ. சேஷையர், B.A., L.T., அனுப்பிய கடிதமே முதலில் (7–5–24) கிடைத்துப் பரிசு பெற்றது.

**இந்த (வைகாசி) மாதப் பரிசுகளின் விவரம்**

I. சந்தாதாரர்க்குரிய சிறப்புப் பரிசு—5 ரூ. விலை மதிப்புள்ள புஸ்தகங்கள்—விஷயம். "சுய ஆட்சி உரிமை." இதைப்பற்றி, 8 பக்கங்களுக்கு மேற்படாத தமிழ் வியாசம், 15–7–24-க்குள், பத்திராதிபரைச் சேரவேண்டும். முன் மாதக் குறிப்பை நோக்குக.

II. எல்லோர்க்கும் பொதுவான பரிசு—ஒரு ரூபா விலையுள்ள புஸ்தகப் பரிசு, பின் வரும் நான்கிற்கும், 1–7–24-க்குள், சரியான விடைகளை முதலில் அனுப்புபவர்க்கு, அளிக்கப்படும்:—

(1) ஓர் வார்:—வேதங்க ளெத்தனை யத்தனை யாம்பொதி மின்னுசடை, நாதன் றலைமிசை யென்னிரு காலும் நயந்துறையு, மோது மவன் விடை யென்றலை யுண்டிடு முப்புவளி, பூதுங் கடல்சூ ழுலகின் றென்பே ருண்டிடுமே.

(2) க–1; கி–1; கு–1; கை–1; க்–1; ச–1; சா–1; ஞ–1; த–2; தா–2; தி–1; த்–2; நீ–1; ந்–1; ப–2; மி–1; மெ–1; ம்–2; ரா–1; ரி–1; ர்–2; றே–1; னு–1; ன்–2—இந்த 31 எழுத்துக்களையே, கொண்டு சந்தி சேர்த் தெழுதி, மோனைகளுள்ளதும், எதுகைச் சிறப் பில்லாததும், தமிழ் மக்கள் அனைவரும் செய்யத் தக்க ஒன்றைக் குறிப்பதுமான, ஒரு குறள் வெண்பா அமைக்குக.

(3) கன்னி மூனை யிருந்து காசிக்குக் காளிமேல்
தன்னிலையில் செல்வதை நீ சாற்று.

(4) காடேகும் தன் தமயன் காற் செருப்பை வாங்கினவன், நாடாளேன் என்றசொலை நம்புலகு—பீடு—விளங்க நிலா விரிக்கும் வெண்மதியை வீணே, களங்கன் எனல் ஏனோ கழறு.




# 1. நாம் வாழும் பூமி

ஸ்ரீ. அ. மாதவையர்



மியில் வாழும் நாம், எந்தத் திசையை நோக்கினாலும், இயற்கையிலுள்ள மரம் மலை ஆறு காடு கடல் தீவுகளைக் காண்கிறோம்; செயற்கையாலான வீடு மாளிகை கோயில் குளம் கப்பல் கால் வாய்களைக் காண்கிறோம்; இவை யாவும் பூமியில்தானே அடுத்து அடுத்து இருக்கின்றன; கீழே தோண்டினாலும் மண்ணும் மணலும் கல்லும் நீரும் செறிந்துள்ளன. சற்றுத் தூரமாய்க் கண்ணும் வானத்தை நோக்குமிடத்து, மேகங்களையும் சூரிய சந்திரரையும் காண்கிறோம்; வெண்ணிலவில்லாத இருண்ட இரவெனில், பூமியானது மரம் மலையாதிய பொருள்களால் நிறைந்து காண்பது போலவே, வானப்பிரதேசமும் ஒளிதரும் பல நக்ஷத்திர கோளங்களால் நிறைந் திருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. ஒன்றுமில்லாத சூனியமாய் நாம் காண்பது, மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையிலுள்ள, வெறும் கண்ணுக்குச் சிறிதாகவே தோன்றும் இடைவெளி தான். இதனால், இப்பூமண்டல மட்டுமோ, கண்ணுக்குப் புலப்படும் சிருஷ்டியாவுமே, அதிக வெற்றிடமின்றி, பலபொருள்

கள் செறிந்து நிறைந்திருப்பதாகவே நாம் கருதுகிறோம். இத்தோற்றமும் எண்ணமும் உண்மையோடு ஒத்தன வல்ல; போலித் தோற்றமும் தவறான எண்ணமுமே. நம்புதற்குரிய தூரதிருஷ்டிக் கண்ணாடி (telescope) முதலிய கருவிகளையும், வானசாஸ்திர ஆராய்ச்சியையும் கைக்கொண்டு சோதித்துத் தேர்ந்து, உண்மை நிலையை ஊகித்து அறிவோமாயின்:— அதி மேதாவிகளுமே தம் மனத்தால் எட்டி மதிப்பிடுதற்கும் முடியாததான, எல்லை வரம்பற்றதான, எதுமில்லாப் பாழான, பிரமாண்டமான ஒரு சூநிய வெளியிலே, சமுத்திரத்தில் பெருங்காயம் தேய்த்தது போல் என்று சொல்வதற்குச் சமமாக, ஒரு சில வஸ்துக்களே ஆங்காங்கு அத்திப் பூப்போல் அருமையாய்ச் சுழன்று திரிகின்றன என்பதுவும்; இவற்றுள் ஒன்றுக் கொன்றின் இடையே உள்ள பலகோடி மைல்களுக்குச் சூநிய வெளியே இருக்கிறது என்பதுவும்; அதாவது, 'பிரபஞ்சத்தில் ஸ்தூல வஸ்துக்கள் படர்தரும் இடத்தினும் சூநியமான வெறும் வெளியே மிகப்பெரிது' என்னும் சாஸ்திர சித்தாந்தம், தெரியவரும்.


இவ்வண்ணம் வானவெளியில் சுழலும் நக்ஷத்திரங்கள், ஒன்றுக்கொன்று எவ்வளவு நெடுந்தூரத்தில் இருக்கின்றன என்பதைக் கவனித்தால், இச்சூநிய வெளியின் விலாசமும் பெருமையும் ஒருவாறு துலங்கும். நமது மண்டலகர்த்தாவும், 'ஜகத்துக்கெல்லாம் ஒரே கண்' என்று (ஜகத் ஏகசக்ஷுஸ்) தினமும் நாம் கொண்டாடி வணங்கும் சோதியுமான சூரியனானது, ஏறத்தாழ எட்டு லக்ஷத்து அறுபத்தாறாயிரம் மைல் சுற்றளவுள்ள அக்கினி மயமான ஒரு கோளம்; சுமார் இருபத்தையாயிர மைல் சுற்றளவே உள்ள நமது பூமியைவிடப் புன்னிரண்டரை லக்ஷமடங்கு பருத்தது. இத்தகைய சூரியனும் ஒரு 'நிலை நக்ஷத்திர'மே: அதாவது, இடம் பெயராத, அசைவில்லாத, மினிமினியினும் மிகச்சிறியனவாக, இருண்ட இரவிலே விண்முகட்டில் பிசுபிசென அரிதில் நம் கண்ணுக்குப் புலப்படும் எண்ணுக்கடங்காத நக்ஷத்திரங்கள் போன்ற தொன்றே. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து கவனித்தால் தான்,



அந்த நக்ஷத்திரங்களும் இடம்பெயரும் சுழல் பொருள்கள் என்பதும், உண்மையில் நிலை நக்ஷத்திரங்கள் அல்ல என்பதும் புலப்படும். இதற்குக் காரணம், அவை செல்லும் கதியின் குறைவன்று, பூமிக்கும் அவற்றுக்கு முள்ள நெடுந் தூரமேயாம். சூரியன் மட்டும் இவ்வளவு பெரிய சுழல் சோதியாகத் தோன்றுவதன் காரணமும், அவற்றுடன் ஒப்பிடுங்கால், நமக்கு நெருங்கிய சமீபத்தில் இருப்பது தான். இந்த உண்மைகளை ஒருவாறு மனத்தில் எண்ணிப்பார்த்து; பிரபஞ்சத்திலே நமது சூரியனைப் போன்றவும், அதனினும் மிகப் பெரியவுமான நிலைநக்ஷத்திரங்கள், எண்ணித் தொலையாதபடி எத்தனையோ இருக்கின்றன என்பதையும் மதித்தறிவோமாயின, பிரபஞ்சச் சூநிய வெளியின் பெருமை ஒரு சிறிது துலங்க லாகும்.

இவை போன்ற கூற்றுக்களும் கணக்குக்களும் மனத்தினால் எளிதில் தெளிந்துணரத் தக்கன அல்ல. ஆகிருதியையும் தூரத்தையும் பொருந்தும்படி தாரதம்மியப் படுத்திப் பேசும் பொருட்டு, நாம் வாழும் பூமண்டலத்தை ஓர் அங்குலக் குறுக்களவுள்ள ஒரு சிறு கோலி உருண்டையாக வைத்துக் கொள்வோம்: அப்பொழுது, சூரியனானது ஒன்பதடிக் குறுக்கள வுள்ளதும், பூமியினின்றும் 323 கஜ தூரத்தி லுள்ளதுமான, ஒரு பெரிய கோளமாகும்; சந்திரன், பூமியினின்றும் முப்பதங்குல தூரத்தி லுள்ள ஒரு சிறு பட்டாணிக் கடலையை நிகர்க்கும்; புதனும் சுக்கிரனும், சூரியனுக்கும் பூமிக்கும் இடையில், 125 கஜதூரத்திலும் 250 கஜதூரத்திலும் முறையே சுழலும் இருசிறு கடலை போன்றவைகளாம்; அங்காரகனும் (500 கஜம்) பிரகஸ்பதியும் (1680 கஜம்), சனியும் (3000 கஜம்), யுரேனஸும் (6000 கஜம்), நெப்ட்யூனும் (6000 கஜம்), பூமிக்குப் புறம்பே (குறித்த தூரத்தில்) சுழலும் கிரகங்க ளாகும். இவையன்றி, வேறுசில மிகச் சிறு கிரகங்களும் இவற்றினூடே திரிவன. இவை யனைத்தும் கூடியது தான் நமது சூரிய மண்டலம். அதற்குப் புறம்பே யுள்ள வரம்பற்ற மாபெருஞ் சூநிய வெளியி லிருந்து, சில சில சமயங்களில், ஒளி மிக்கோ மங்கியோ உள்ள தீயாவிப் பிழம்புகள், சூரிய

மண்டலத்துக்குள் பிரவேசிப்பதுண்டு: இவை தாம், வால் வெள்ளி அல்லது தூமகேது என்று நாம் கூறுவன. இவையன்றி, நம்மைச்சுற்றி எப்பக்கமும் உள்ளது, அளப்பரிய எல்லையற்ற சூடற்ற உயிர்நிலையற்ற சூநிய வெளியே.




## சூரியனும் அதன் கிரகங்களும் அளவு தெரியுமாறு வரையப்பட்டிருக்கின்றன

பூமியை ஓரங்குலக் கோலியாகவும், சந்திரனைப் பட்டாணிக் கடலையாகவும் கொண்ட அதிநுணுக்கமான இக்கணக்கின் விதம், சூரியனுக்கு அடுத்தபடி நமக்கு மிக நெருங்கிய சமீபத்திலுள்ள நிலைநக்ஷத்திரமானது, பூமியிலிருந்து நாற்பதினாயிரம் மைல் தூரத்துக்கு மேல் இருக்கின்றதாம்! அதி தொலையிலுள்ள மற்ற நிலைநக்ஷத்திரங்கள்



பின்னும் எவ்வளவு தூரத்தில் இருப்பனவோ, சூநிய வெளியின் பரப்புத் தான் எவ்வளவாகுமோ!

பூமியின் குறுக்களவு சுமார் எண்ணாயிரம் மைல் என்று மேலே கூறினோம். அதன் மேற் பரப்பு மேடு பள்ளமானது: உயர்ந்த மேடுகளே மலைகள்; தாழ்ந்த பள்ளங்களே கடல்கள். சுமார் ஐந்து மைலுக்கு மேலான மலையுமில்லை, ஆழமான கடலுமில்லை. பூமியின் குறுக்களவை (8000 மைல்) உத்தேசித்து, ஐந்து மைல் எம்மட்டு? இப்படிப் பட்ட பூகோளத்தை வாயுமண்டலம் சுற்றிக் கொண்டிருக்கிறது. மலைகளின் உன்னதமான சிகரங்களை ஏறினுமே, ஆகாய விமானமேறி மேலே பறந்து சென்றாலுமே, உயரச் செல்லச் செல்ல, வாயுமண்டலத்தின் வாயு இலேசாவதும், வரவர உயிர் தங்கமுடியாததாகிவிடுவதும் தெரியவரும். இருபது மைல் உயரத்துக்குமேல் வாயு இல்லை என்றே சொல்லலாம். 'காண்டார்' என்னும் வல்லூறு பக்ஷி மட்டும் ஐந்துமைல் உயரம் வரைப் பறக்குமாம். மற்றப் பக்ஷிகளை விமானத்தில் தூக்கிச் சென்றாலும் கூட, அவ்வளவுயரத்தில் உயிர் தாங்க முடியாமல், குறைந்த உயரத்திலேயே மூர்ச்சையாய்ப் போகின்றன. மலையேற வல்லாருமே ஐந்து மைல் உயரம் ஏறினதில்லை. சுவாசம் விடுவதற்குரிய ஸௌகரியங்களைச் செய்து கொண்டு, அதிகம் கஷ்டப்பட்டு, ஏழுமைல் வரை விமானங்களில் மனிதர் மேற்சென்றுள்ளார். மனிதரில்லாத விமானங்கள், இயற்கை நிலையை அறிந்து குறிக்கும் கருவிகளுடன், இருபத்திரண்டு மைல் உயரம் வரைச் சென்றதுண்டு.

பூமியிலுள்ள உயிர்வாழ்க்கை யெல்லாம், பூமியின் பரப்பிலும், மேலோட்டின் கீழ் சில நூறு அடிகளுக்குள்ளும், கடலிலும், வாயுமண்டலத்தில் சுமார் நான்கு மைல் தூரத்துக் குள்ளும்தான். இவையன்றி, உயிர் வாழும் தலங்கள் வேறெதையும் நாம் அறியோம். மேலையர் சாஸ்திர ஞானப்படி, இம்மாபெரும் பிரபஞ்சத்திலே இவையொழிந்த மற்றெங்குமே, இன்னும் உயிர்நிலை இல்லை.

சுக்கிரன் அங்காரகன் என்னும் இரண்டு கிரகங்களிலும் உயிர்ப் பிராணிகள் இருக்கலாமென்று, கலைவாணர் சிலர் நம்புகின்றனர்; எனினும், ஒன்றும் உறுதியாகத் தெரிந்தபாடில்லை.

நாம் வாழும் பூமி இப்பொழுதுள்ள நிலைமைக்கு எப்படி வந்ததென்று சிறிது ஆராய்வோம்: அளவில் அடங்காத நெடுங்காலத்துக்கு முன், நமது சூரியன், இப்பொழுதுள்ள திண்மையும் நிதானமும் ஒழுங்குமின்றி, இப்பொழுதினும் மிகப்பெரிதான ஓர் அக்கினி மயமான கோளமாய், அதி தீவிரவேகத்தோடு சுழன்று கொண்டு இருந்ததாம். அக்காலத்தில், சில துண்டங்கள், விளக்குப் பொறி போல், அதைவிட்டுப் பிரிந்து தெறித்தனவாம். திண்மையில்லாச் சூரியனது சுழல்கதியின் தீவிரத்தில் அங்ஙனம் தெறித்த பிழம்புகளில் ஒன்றுதான், நாம் வாழும் பூமி. சூரிய மண்டலத்தைச் சேர்ந்த இதர கிரகங்களும் இத்தன்மையனவே. இவ்வாறு துண்டாய்ப் பிரிந்த அழல் பிழம்பு, தான் சுழல் கதியில் பின்னும் இரண்டு சிறு துண்டுகளாகப் பிளந்து பிரிந்தது; இவ்விரண்டில் பெரியது பூமி; சிறியது, பூமியைச் சுற்றிவரும் (உயிர் நிலையற்ற) சந்திரன். அக்காலத்திலே, சூரியன், பூமி, சந்திரன், பிற கிரகங்கள், யாவுமே இப்பொழுதினும் மிக்கடிய வேகத்தினில் சுழன்று கொண்டிருந்தன. அப்பொழுது பூமி, உயிர் தரிக்க முடியாத அளவு, மிக்க சூடாயுமிருந்தது. காலம் செல்லச் செல்லச் சூரியனது சூடும் வேகமும் குறைந்து கொண்டே வருகின்றன; பூமியின் சுழல் கதியும் உட்சூடும் அத்தகைத்தே. இதனால் நமக்கு ஏற்படும் பகற் பொழுது நீடித்துக்கொண்டு வருகிறது; ஒரு காலத்தில், பூமியில், பகற்பொழுது, இக்காலத்திலுள்ளதில் பாதிக்கும் குறைவாயிருந்தது. காலச் செலவில், மிகு தொலையான எதிர் காலத்திலே, இப்பொழுது நமக்கு ஓராண்டுள்ள அளவு ஒரு பகலிருக்குமாம்; குளிர்ந்து கொண்டேவரும் சூரியன், ஒளிக் கிரணங்களை இழந்து, வானத்தில் அசையாப் பொருள் போல் தொங்கிக் கொண்டிருக்குமாம்.




உயிர் என்பது பூமியில் முதன்முதல் உண்டானது, இப்பொழுதினும் அதி உஷ்ணமான சூரியனும், மிகக் குறுகிய பகல் இரவுகளும், அகோரமான கடல் அலை புயற்காற்றுக்களும், உஷ்ணமும், பூகம்பங்களும் உள்ள காலத்திலென்று, யூகிக்கின்றனர். அப்பொழுது, சந்திரன் இன்னும் பூமிக்குச் சமீபமாயும், பிரகாசமாயும், இரு முகத்தையும் காட்டுவதாயும் இருந்ததாம். வாயுமண்டலம் திண்ணியதாய், நீராவி செறிந்ததாய் இருந்தது; கடல் அலைகளின் ஏற்றமும் வற்றமும் கடலோர நிலத்தைக் கழுவிக் கொண்டேயிருந்தன; சூரியனது முகத்தைப் பெரிய மேக படலங்கள் அடிக்கடி மறைத்தன; பூகம்பங்களால் பூமியின் மேல்தரை அடிக்கடி தூக்கி எறியப்பட்டது; புல் பூண்டு பச்சை இல்லாத பாழாயிருந்தது பூமி; ஓய்வொழிவின்றி நிகழ்ந்த புயற்காற்றும் பெருமழையும் பூமியின் மேற்பரப்பைக் கழுவி, வண்டல்களை அடித்துப் போய்க் கடலில் சேர்த்துக்கொண்டிருந்தன; இவ்வண்டல்கள் சேறுயும் பாறையாயும் உறைந்தன.

இப்பாறைகள் உறைந்தகாலம் இதற்கும் முற்பட்டதாம்; அக்காலத்தில் கடல் நீரே இல்லை; உஷ்ணமிகுதியால் நீராவியே வாயுவுடன் கலந்திருந்தது; நீராவி மண்டலத்தின் மேற்பிரதேசங்களிலிருந்து, கொதிக்கும் நீர்மழை கீழுள்ள பாறைகளின்மேல் கொட்டிக்கொண்டிருக்கும். இந்த நீராவி மண்டலத்தின் கீழுள்ள இளக்கமான பூமிப் பொருள் இறுகியே ஆதிப்பாறைகள் உண்டாயின. ஜோதி மயமான திரவப் பொருளை உள்ளடக்கி, அதன் மேலோடாகவே ஆதிப்பாறைகள் உறைந்திருக்க வேண்டும். ஸ்திரமான பாறை யாகு முன், எத்தனையோ முறை சூட்டினால் இளகியும், சூட்டுக்குறைவால் மீண்டும் இறுகியும், மாறியிருக்க வேண்டும். அதி உஷ்ணமான பூமியின் இளமைப் பருவத்தின் முடிவுக் காலத்தில் இம்மூலப் பாறைகள் உறைந்தனபோலும். அந்தக் காலத்திலே பூமண்டலத்தின் தோற்றம், இப்பொழுது போலின்றி, பிரமாண்டமானதோர் அக்கினி குண்டம், அல்லது உலைக் களத்தை ஒத்திருக்கும்.

மூலப் பாறைகள் உறைந்து நெடுங் காலத்துக்குப் பின்னர், நீராவி குளிர்ந்து மூலப் பாறைகளின் மீது வெந்நீர் மழை பெய்து, பள்ளங்களில் தங்கிப் பெருகி, குட்டங்களும் ஏரிகளும் ஆகிக் கடல்களும் உளவாயின. பெய்த மழை, வண்டல்களை அடித்துச் சென்று கடல்களி லும் பள்ளங்களிலும் சேர்க்க, அவ் வண்டல்கள் உறைந்து, (வெங்காயத் தொலிபோல் ஒன்றின்மேல் ஒன்றாக) பாறைப் படலங்கள் உண்டாயின. கானடா நாட்டில் இத் தகட்டுப் பாறைகளை இன்றும் காணலாம். அவற்றைச் சோதித்துப் பார்த்தால், உயிர் நிலைச் சின்னங்கள் ஒன்றுமே இல்லை. எனவே, அக்காலத்திலும் பூமியின் கண் உயிர் பிறக்கவில்லை என்பது திண்ணம். அதனால், இத் தகட்டுப் பாறைகளை உயிரில்பாறை என்றும் சொல்வ துண்டு.

—தமிழர் நேசன்

(தொடரும்)




இராகம்—தன்யாசி. தாளம்—ஆதி

மெட்டு—"கனகசபாபதி தரிசன மொருநாள்......"

பல்லவி

நமது தாய் பாஷையை நாள்தொறும் பயின்றால்
நம் கலி நீங்கிடுமே,

அநு பல்லவி

அயலவர் கைதலைக் அணையென உறங்கிடும்
மயலை ஒழிந்து, தன் மானத்தை எண்ணியே—நமது.

—அழககவி

# எனது ஊற்றுப் பேனா

சிரஞ்சீவி மா. பாமணி, சென்னை

"எதைப்பற்றி எழுதுகிறது?" என்று, பேனாவைக் கடிப்பவர் பலர்; அவருள் நானும் ஒருவன்.



இன்றோ, கர்வமாகத் தன் தலையைத் தூக்கிக் கொண்டு, என்பேனா, "ஏன், என்னைப் பற்றித் தான் எழுதிவிடேன்?" என்றது.

நானும் சரியென்று ஒப்புக்கொண்டு, இதைத் தொடங்கினேன்.

அதற்குள், அகம்பாவம் பிடித்த பேனா—"கொஞ்சம் பொறு: இறகுப் பேனா என்று எழுதி விடாதே. நீர் மனிதனது உத்தமமான ஊற்றுப் பேனாவாக்கும் நான்" (Waterman's Ideal Fountain Pen) என்றது. அதன் சொற்படி கேளா விட்டால், எங்கே ஒத்துழையாமைக் கூட்டத்தாரை என் பேனாவும் சேர்ந்து விடுமோ என்று பயந்து, அப்படியே எழுதுகிறேன்.

என் பேனா மிகவும் அழகானது. அதன் உடல் கறுத்து வழ வழப்பாய் இருக்கும். அடிப் பாகத்தில் ஒரு பிடி யுண்டு. எழுதுவதும் சுகம் தரும். ஆனால் சிறிது

வயதாய் விட்டது. யார் என்ன செய்யலாம்? பென்ஷன் கொடுத்து விட வேண்டியது தான். ஓர் எழுது கோல் எவ்வளவு செயலற்றது! அதற்கு மூளையும் இல்லை, உயிரும் இல்லை. ஜடப் பொருளாகிய அதுவும், ஒரு கவிஞன் கையில் எவ்வளவு வன்மை பெறுகின்றது! ஊழிக் காலம் வரையில் நிலை நிற்கும் கிரந்தங்களை எழுது கோல்களே உலகத்திற்கு அருளின. புலவரை வணங்குவது போல் அவர் எழுது கோல்களையும் வணங்குவது அஞ்ஞானம் என்று சொல்ல, நாவெழ வில்லை. உண்மை இப்படி யானால், கவிச் சக்கிர வர்த்திகள் என்று நாம் இங்கு புகழ்வோரும், சர்வ லோக கர்த்தனை ஒரு பரம் பொருளின் எழுது கோல்களாக இருக்கக் கூடாதா? தான் என்னும் உணர்ச்சியே மாயை என்றால், அதன் வழி உதிக்கும் எண்ணங்களும் செயல்களும் மாயையே யாகும். புகழ்வதும் இகழ்வதும் சம்பிரதாயமே.

இதற்குள் என் பேனா, "என்ன, எல்லாம் தத்துவ ஞானமாக இருக்கின்றதே! என்னைப் பற்றி ஒன்றையும் காணோமே?" என்றது.

கோபத் துடன், "உனக்கு இவ்வளவு தான், போ!" என்றேன்.

"ஆஹா, இவ்வளவு கர்வமா?" என்று கூறி, பேனா மையை நிறுத்தி விட்டது,

என்ன செய்வது? நானும் வியாசத்தை நிறுத்த வேண்டியது தான்.

" Words are things and a small drop of ink,
Falling like dew upon a thought, produces
That which makes thousands, perhaps millions think"—*Byron*.

சொற்கள் பொருள்களே: ஒரு சிறு சொட்டுமை
உட்கருத் தொன்றின் மீ தொழுகி, உலகிலே,
பற்பல லாயிரர், கோடியர், பார்ப்பவர்,
உட் கொண் டுன்னிடச் செயும்ஓன் றியற்றுமே.

# உலக நாடகக் காட்சிகள்

## 1. சித்திரா பௌர்ணமி

ஸ்ரீமதி மீனாம்பாள் அம்மாள், பாளையங் கோட்டை

அன்று சித்திரா பூர்ணிமை. எங்கள் அண்டை அயல் வீட்டுப் பாட்டிமார் எல்லோரும், எங்கள் வீட்டு முன் கட்டில் வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். என் நாத்தனார் சித்திரை புத்திரன் பாட்டுச் சொல்வதைக் கேட்க, அவர்கள் வந்திருந்தார்கள். அது சொல்லி முடிந்ததும், பாகீரதிப்பாட்டி, பாவ புண்ணிய கர்மங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள்.

பாகீரதி:—ஆமாம், குப்பம்மா! (அது தான் என் நாத்தனார் பெயர்.) நாம் இந்த ஜன்மத்தில் செய்யும் தான தருமங்கள் தான் நமக்குப் பின்னால் பிரயோஜனப்படும். யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன், ஏதோ ஒரு பாட்டில்: செத்த பின், பெண்டுகளும் வாசல் மட்டே, பிள்ளையும் சுடுகாடு மட்டே. அதற்குப் பின்னால் நம் கூட யார் வருவார்கள்? நல்லதோ, கெட்டதோ, நாம் செய்த பாவ புண்ணியங்கள் தான் நம்மோடு கூட வரும்.

**என் நாத்தனார்**:— ஆமாம், பாட்டி; ஆனால், கலி முற்றிப் போச்சு. இந்த நாளில் செத்த பிறகு இன்னொரு ஜென்மம் உண்டென்று யார் நினைக்கிறார்கள்? அவரவர் சக்திக்குத் தகுந்தபடி, ஏதோ தான தருமம் பண்ணி, புண்ணியம் சேர்க்கவேணும். ஏன், பாட்டி, நீர் நோன்புக்கு நவதானியம் எவ்வளவு கொடுத்தீர்? நான் ஒவ்வொன்றிலும் கால் படிக்கு மேலேயே கொடுத்தேன்.

பாகீரதி:— உனக்கென்னம்மா, மகராஜி! பிள்ளை யில்லாமல் போனாலும், இன்று கண்டதற்கு, தம்பி சம்பாதிக்கிறான், வேண்டியது செய்யலாம். நான் என்னவோ, என் கையில்

கிடைத்தது, ஒவ்வொரு வகையிலும் ஒரு பிடித்த பிடி வைத்துக் கொடுத்தேன். குப்பம்மா! நீ எல்லா விரதங்களும் எடுத்திருக்கிறயே: தீப தானம் ஒன்று செய்யக் கூடாதா? அமாவாசை தோறும் ஒரு பிராமணனைக் கூப்பிட்டு, நெய்த் தீபம் போட்டு, தீப பூஜை செய்து, அந்தத் தீபத்தை தானம் செய்து விடுகிறது. அப்படி ஒரு வருஷம் செய்தால், நாம் போகிறபோது, வழியில் இருட்டு இராதாம். அந்த விளக்கு நமக்கு அப்பொழுது வெளிச்சம் கொடுக்குமாம். இன்னும் ஒன்று அக்ஷய திருதியை: அன்று முதல் ஒரு மாஸம், தினமும், அக்ஷய திருதியை அன்றைக்குக் கொடுப்பது போல, ஒரு புதுத் துணியில் தயிர் சாதம் பிசைந்து கட்டி, ஒரு குடை, ஒரு விசிறி, ஒரு பாதரக்ஷை, ஒரு தீர்த்த பாத்திரம், இவ்வளவும், ஒரு பிராமணனுக்கு வடை பாயஸத்துடன் சாதம் போட்டு, தானம் பண்ணினால், நாம் பின்னால் போகும் வழியில், பசி, தாகம், வெயில் என்கிற ஒருவித பாதையும் இராது. நீ கட்டாயம் இந்த இரண்டும் மட்டும் செய், எவ்வளவோ புண்ணியம்.

என் நாத்தனார்:—"அதற்கென்ன, அப்படியே செய்கிறது; பார்த்துக் கொள்வோம். ஆனால், இந்த நாளில் இதொன்றையும் ஒருவரும் கவனிப்பதில்லை. என் தம்பியிடம் சொன்னால், 'உனக்கு வழியில் விளக்கு வந்து நிற்கும். தாகத்திற்குத் தண்ணீர் வரும்' என்று கேலி பண்ணுவான். நான் செய்து கொள்ள வேண்டுமென்றால் தடை சொல்ல மாட்டான். என் தம்பி அகமுடையாளுக்கும் இதிலெல்லாம் அதிக நம்பிக்கை கிடையாது. ஏனடி, காமாக்ஷி! அப்படித்தானே? நல்லதோ, கெட்டதோ, எது செய்தாலும், அது நமக்கு ஒன்றும் பலனில்லையே?" என்னைக் கேட்கவே நான் சொன்னதாவது:—"அப்படிக் கொன்றும் நான் சொல்லவில்லையே. நாம் செய்த பாவ புண்ணியத்தின் பலனைத்தான் நாம் இப்பொழுதும் அனுபவிக்கிறோம். மறு ஜன்மத்திலும் அனுபவிப்போம். கர்மம் உள்ள வரை ஜன்மமும் உண்டு. நம்மால் முடிந்த அளவு நாம் எப்பொழுதும் நல்லதே செய்ய வேண்டும். எது நல்லது, எது செய்தால் புண்ணியம் என்பது தான் விவாதம். பொழுது விடிந்தது முதல் சாயங்காலம் வரை பொய் சொல்லி, வைது, பர நிந்தனை செய்து விட்டு, விளக்கேற்றினவுடன் 'சிவ சிவா' என்று சொல்லி விட்டால், பாவம் போய்விடாது. உங்கள் தம்பி சொல்வதெல்லாம் அவ்வளவு தான். 'ஆங்காலமெல்லாம் அவிசாரி ஆடிவிட்டு, சாங்காலத்திலே சங்கரா! சங்கரா' என்று விட்டால், புண்ணியம் உடனே வந்து விடாது.



'பாத்திர மறிந்து பிச்சையிடு' என்றபடி, பசியோடிருக்கும் ஒரு சூத்திரனுக்குப் போட்டால், அமாவாசை யன்று பிராமணனுக்குப் போட்ட அளவு புண்ணியம் உண்டு. இதையெல்லாம் பற்றி ஒரு கதை கூட இருக்கிறது."

'எங்கே கதை சொல்லு கேட்போம்' 'அது என்ன கதை?' என்று, அங்கே கூடி யிருந்தவரில் இரண்டொருவர் கேட்டார்கள். பாகீரதிப் பாட்டியும் என் நாத்தனாரும் ஜன்மம், கர்மம், பாவ புண்ணியம் முதலியவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததாலும், சித்திரா பௌர்ணமி தான் புத்தர் பிறந்த தினமாதலாலும், நான் புத்த சரிதையைக் கொஞ்ச நாளைக்கு முன் தான் வாசித்து முடித்திருந்ததாலும், அன்று எனக்கு அச்சரிதை ஞாபகத்திற்கு வந்தது. புத்தர் கதையை அங்கிருந்தவர் ஒருவரும் கேட்டதில்லை. ஆகவே, எனக்குத் தெரிந்த வரை, நான் நன்றாகவே அதைச் சொல்லிக் கொண்டு வந்தேன். கடைசியாக, பௌத்த மதத்தின் முக்கிய கோட்பாடுகளைச் சொல்ல ஆரம்பித்தேன். ஓர் உயிரையும் ஒரு விதத்திலும் வருத்தாமலிருப்பதும், நம்மால் இயன்ற வரை எல்லாப் பிராணிகளிடத்திலும் இரக்கமும் அருளும் காட்டி நடப்பதும், முக்கியமென்று நான் சொன்னேன். ஜாதி மதங்களைக் கவனியாமல் எல்லாரிடத்தும் ஒரே விதமாக இரக்கங் காட்டி, தருமம் செய்ய வேண்டுமென்று நான் சொன்னபோது, 'சரி சரி' என்றாற் போல, பாகீரதிப் பாட்டி தலை யசைத்தாள். நான் கதை சொல்லும் போது நடுவிலேயே அவர்கள் ஊர்வம்பை அளக்காமல் இருந்ததால், கூடிய மட்டில் கவனத்தோடேயே கேட்பதாகத் தோன்றிற்று. அதனால் அது அவர்கள் மனத்திற்கு ஒப்பியிருக்கிறதென்று சந்தோஷப் பட்டேன். ஆனால், அது வீணான அல்ப சந்தோஷமாய்ப் போயிற்று. நான் குறைக் கதையையும் சொல்லி முடிக்கப் போகும் சமயத்தில், எவளோ ஒரு குறத்தி, முதுகில் மூன்று வயதுள்ள பிள்ளையைக் கட்டிக் கொண்டு, பிச்சைக்கு வந்தாள். எங்கள் வீட்டு முன் கட்டில் கூட்டமாய் இருந்ததைக் கண்டு, அவள் அங்கே வந்து நின்று கொண்டு, "அம்மா, கொஞ்சம் சோறு போடுங்கோ, ஏதாவது பழஞ் சோறு போடுங்கோ, தாயே, பசியா யிருக்குது தாயே" என்று கேட்டாள். பிச்சைக்காரர் பகலில் பிராமணர் தெருவில் வந்து சோறு கேட்பது வழக்கமில்லை. அதனால் இவள் ஏதோ அயலூர் வழிப் போக்கி யென்று நினைத்தேன். அவள் முதுகிலிருந்த குழந்தை பசியால் அழுதது. உடனே நான் அவசரமாய், முன் பின் யோசியாமல், கொஞ்சம் 'பழையது' கொண்டு வருவதற்காக உள்ளே [illegible].

சென்னை-600 005.

"என்னடீ செய்யப் போகிறாய், காமாக்ஷி?" என்று, உரத்த குரலில் என் நாத்தனார் கேட்கவே, நான் ஒன்றும் சொல்லத் தெரியாமல், உள்ளேயும் போகாமல், பிரமித்து நின்று விட்டு, 'ஏதாவது பிச்சை போடலாம் என்று போனேன்' என்று சொன்னேன். அதற்குப் பதில், என் நாத்தனார் :—"நன்றா யிருக்கு! பட்டப் பகலிலே, நடு மத்தியானத்திலே, பிச்சை போட்டவர்களை நான் கேட்டது மில்லை, பார்த்தது மில்லை" என்று சொல்லி விட்டு, அந்தப் பிச்சைக் காரியைப் பார்த்து, 'போடி போ, போ' என்று சத்தமிட்டு அதட்டினாள். உடனே பாகீரதிப் பாட்டியும்:—"வெட்க மில்லை உனக்கு, பிராமணர் தெருவிலே மத்தியானத்தில் வந்து சோறு கேட்க? போ, போ" என்றாள். அந்தப் பிச்சைக் காரியோ, போவதற்குப் பதிலாக, முதலில் நான் அவளுக்குப் பிச்சை போட எழுந்ததனால் என்னைப் பார்த்து :—"அம்மா, பசியா யிருக்குது, தாகம் தவிக்குது. அம்மா கஞ்சித் தண்ணி ஊத்துங்கோ அம்மா! தாயே, நல்லா யிருப்பீக, பிள்ளை குட்டி நல்லா யிருக்க வேணும், தாயே! உங்க தங்கக் கையாலே கொஞ்சம் தண்ணி ஊத்துங்க, தாயே" என்று கூவினாள். என் நாத்தனாருக்குக் கோபம் வந்து விட்டது.

அவள் :—"ஆமாம், அவளுக்கென்ன, நான் இல்லாவிட்டால், உனக்கு அந்த தங்கத்தாய் சோறு போடுவேள். அவளுக்கு சேஷமு மில்லை. பாவமு மில்லை. போடி, போ! இங்கே சோறு, கீறு ஒன்றும் கிடையாது. தண்ணி வேணுமானால் வாய்க்காலில் இருக்கு, போ," என்றாள். அங்கேயிருந்த பாட்டிமார் எல்லோரும் சேர்ந்து வைது, அந்தப் பிச்சைக் காரியைத் துரத்தி விட்டார்கள். துக்கமும் வெட்கமும் நெஞ்சை யடைக்க, நானும் உட்சென்றேன். என் வீட்டிலேயே பசிக்கு ஒரு பிடி பழைய சோறு போட எனக்குச் சுதந்தர மில்லாதது, எனக்கு வருத்தமே. ஆனால் அது மட்டு மல்ல. எங்கள் வீட்டில் என் நாத்தனார் இட்டது தான் சட்டம். அது ஒன்றும் புதிதல்ல. நான் இவ்வளவு நேரமாக அந்தப் புத்த சரிதையை எடுத்துச் சொல்லி, ஜாதி மதங்களைக் கவனியாமல் எல்லா உயிரையும் தன்னுயிரைப் போல் பாவித்து இயன்ற மட்டும் பரோபகாரம் செய்யவேண்டுமென்று சொல்லி வந்த பொழுது, அவர்களும் நான் சொல்வ தெல்லாம் சரி சரி யென்று ஒப்பி, கவனமாய்க் கேட்டு வருகிறார்கள் என்று, நான் சந்தோஷப் பட்டேன். அந்தச் சமயத்தில் அவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து, பசியால் வருந்தும் ஒரு குழந்தைக்கு ஒரு பிடி பழைய சாதம் கூடப் போட வொட்டாமல் துரத்தினார்களே என்பது தான், எனக்கு மிகவும் மனக் கிலேசத்தை உண்டு பண்ணிற்று. இவ்வளவு நேரம் நான்



எடுத்துச் சொல்லிய தெல்லாம் விழலுக் கிறைத்த நீர் போலாயிற்றே! அவர்கள் இந்நேரம் பேசிக் கொண்டிருந்த தத்துவங்களெல்லாம் பறந்து போயினவே. வாயினால் சொல்லுவ தெல்லாம் ஒரு விதமும், செய்வது வேறு விதமுமோ? ஆனால் இவர்களுக்குக் கல்வி அறிவு இல்லாததனால் இப்படிச் செய்தார்கள் போலும். நன்றாய்க் கற்றறிந்தவர்க ளானால், ஒருக்காலும் தர்மத்தைப் பற்றி இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் அதர்மத்தைச் செய்யார்.

இப்படி நான் எண்ணிக் கொண்டு, என் மனத்தைச் சமாதானம் செய்ய எத்தனிக்கும் பொழுது, சில வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவ மொன்று, அன்று தான் நடந்தது போல, என் ஞாபகத்திற்கு வந்தது. அது என்ன வென்றால் :—அப்பொழுது நான் என் பிறந்தகத்தி லிருந்தேன். என் தகப்பனார், அயல் வீட்டி லிருந்த ஒரு பிரம்ம மதக்கார ருடன் சிநேகமா யிருந்தார். ஒரு நாள் காலையில் தங்கள் வீட்டில் நடக்கும் தேவ சேவைக்கு என் தகப்பனாரையும் எங்களையும் வரும்படி அவர் அழைத்தார். நானும் என் தகப்பனார் கூட தேவ சேவைக்குப் போனேன். அங்கே ப்ரும்ம சமாஜத்தைச் சேர்ந்த புருஷர்கள், ஸ்திரீகள், மொத்தம் முப்பது பேர் கூடி யிருந்தார்கள். பெண்களில் சிலர் தேவதா கீர்த்தனைகள் பாடினார்கள். அதன் பின்பு, அந்த வீட்டுக் காரர், ஒரு புஸ்தகத்தி லிருந்து தேவ பிரார்த்தனைகளை வாசிக்க ஆரம்பித்தார். வேதங்களி லிருந்தும், பைபிலி லிருந்தும், குரானி லிருந்தும், இது அது என்று தெய்வத்தின் பெயர் வித்தியாசமில்லாது, மொத்தத்தில் ஒரே கடவுளாகிய தேவனைக் குறிக்கும் ஸ்தோத்திரங்களை அவர் வாசிக்க, நாங்கள் எல்லோரும் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தோம். அதன் பின், அவர் கடவுளை எப்படி சேவை செய்ய வேண்டும் என்பதைப் பற்றி வாசித்தார். அதாவது, பரோபகாரம் செய்வது தான் உண்மையிற் கடவுளைத் தொழும் வழி யென்பது. பசியால் வருந்துபவருக்கு உணவும், ஆடையில்லாமல் வருந்துபவருக்கு உடையும் அளித்தால், அதுதான் கடவுளுக்கு மிகவும் பிரீதி யென்பதும், எழைகளுக்கு உதவி செய்தால் கடவுள் தானே நேரில் எற்றுக்கொள்கிறார் என்பதும் தான். கடவுளே ஒரு பெரிய பிச்சைக்காரர்.

அச்சமயத்தில், திடீரென்று ஒரு பிச்சைக்காரன் அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்று, பிச்சை கேட்டான். அவன் ஒரு குருட்டுக் கிழவன். வாரத்துக் கொரு முறை அந்தத் தெருவிற்குப் பிச்சைக்கு வருவான். அவர் வாசித்துக் கொண்டிருந்ததை ஒரு நிமிஷம் நிறுத்த, பக்கத்திலிருந்த ஒருவர் எழுந்து போய், அப் பிச்சைக் காரனை சத்தம் போடாமல் போகும்படிச் சொல்லி விட்டு வந்

தார். உடனே மறுபடியும், அவர் வாசிக்க ஆரம்பித்தார். பிச்சைக்காரன் வாசலில் வந்த வுடன், 'இதோ நீங்கள் ஸ்தோத்திரம் செய்யும் கடவுளே எதிரே வந்து விட்டார்' என்று சொல்ல, நான் நினைத்தேன். அவர்கள், அப்பிச்சைக் காரனுக்கு ஒரு பிடி அரிசியை யாவது, காலணா வாவது கொடாமல், அவனைப் போகச்சொல்லி விட்டு, மறுபடியும் பக்தியுடன் கடவுளை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தது, எனக்கு ஒருவித வருத்தத்தையும் வெறுப்பையும் உண்டு பண்ணிற்று. முதலில், ஆவலுடனும் கவனத்துடனும் அப் பிரார்த்தனைகளைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு, எப்பொழுது அது முடிந்து வீட்டிற்குத் திரும்புவோம் என்றாகி விட்டது. நன்று கற்றறிந்தோர் பலர் கூடி கடவுளைப் பிரார்தித்துக் கொண்டிருக்கையில், அப்படி ஆராதிக்கும் முறையும் பரோபகாரம் செய்வது தான், அதுதான் கடவுள் நேரில் ஏற்றுக்கொள்வது என்று சொல்லிக் கொண்டிருக்கையில், வாசலில் வந்த குருட்டுக் கிழவனுக்கு ஒரு சிறிதும் பிச்சை போடாமல் விரட்டுவார்களே யானால், ஊர் வம்பையளப்பதைத் தவிர வேறொன்றும் அறியாத பாட்டிமார், குறத்திக்குப் பிச்சை போட வொட்டாதது அதிசயமன்றே. ஆனால், நான் ஒருவரையும் குற்றங் கண்டு பிடிக்க எண்ணவில்லை. அவர்களைத் தப்பென்று சொல்ல எனக்கு நாவில்லை. என் வீட்டு வாசலில் வந்த பிச்சைக்காரிக்கு நான் பிச்சை போடவில்லையே. அதற்குக் காரணம் எதுவா யிருப்பினும், பிச்சை போடாத குற்றமும் அதன் பாவமும் என்னைச் சேர்ந்தது தானே. ஏனெனில், அவர்கள் அறியாமல் அப்படிச் செய்தார்கள்; நானோ, அறிந் திருந்தும், மனத் தைரிய மில்லாமல் சும்மா விருந்தேன். குற்றம் என் பேரிலிருக்க, நான் பிறர் செய்தது தப்பென்று எண்ணுவது கூடச் சரியல்ல. எல்லாம் வல்ல கடவுளே நம் மனச்சாக்ஷிக்கு ஒப்ப நாம் நடக்கும் படி, நமக்குத் தைரியம் கொடுப்பாராக!

"அறிவின்றரு ளென வேண்டிலேம். அறிவுண்டென தருளால்;
இறைவா! எம தறிவின் படி இயற்றும் மனவலியே
குறையிற் பெருங் குறையாம்: உளக் கொள்கைப் படி எதுவும்
நிறை வெய்திட நிகழ்த்தும் வலி நிமிருஞ் செயல் அருளே!"

"நெஞ்சின் அறி மெய்யின் நெறி நிற்கும் நினை வருள்வாய்!
வஞ்சமின்றி, மனமாரவே உழைக்கும்வலி அருள்வாய்!
அஞ்சல் அயர் விலராய், அட லாண்மை சிறந்தவராய்,
மிஞ்சும் வினை யெதையும் நிறை வேற்றும் மிடல்அருள்வாய்!"

# பெண் கல்வி



ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை

னிதர் ஆத்மாவில் ஆண் பெண் என்ற பேதமில்லை. இந்த வேற்றுமை உடல் உறுப்புக்களை ஒட்டியதே. அதனால் ஸ்தூலத்துக்கே பொருந்தும். கல்வி ஸ்தூலப் பொருள் அன்று. எனவே, அதை ஆண் பெண் எனப் பாகு படுத்தல் பொருந்தாது. ஆதி காலத்திலே இப்படிப்பட்ட பேதம் இருந்ததாகத் தெரிய வில்லை. ஔவை கர்கி மைத்ரேயி முதலிய பெண் மணிகள், தத்தம் காலத்தில் ஆண் மக்கள் அப்பியசித்து வந்த கல்வியையே தாமும் பயின்ற தாகத் தெரிய வருகிறது. திராவிட வேத மெனக் கருதப் படும் திருக்குறளிலும், கல்வியைப் பற்றிப் பேசும் பொழுது, "வாழு முயிர்க்கு" "மாந்தர்க்கு" என்று பொதுப் படக் கூறி யிருக்கிறது. இதனால் பண்டை நாட்களில் ஆரியர்க்குள்ளேனும் திராவிடர்க் குள்ளேனும் கல்வி விஷயத்தில் வேற்றுமை இல்லை யென்பது புலப்படும். இதுவுமன்றி, பெண்களுக்கே பெரிதும் உரியனவாகக் கருதப்படும் வீணை வாசித்தல், சித்திர மெழுதுதல், சமையல் செய்தல் முதலிய கலைகளில், ஆண்மக்கள் சிலர் (நளன், வீமன், கோவலன், சீவகன்) தேர்ந்து விளங்கின ரென்பது தெளிவு. இங்ஙன மிருக்க, 'ஆண் கல்வி' 'பெண் கல்வி' என்னும் பாகுபாடு, தமிழில் மட்டுமின்றி, இங்கிலீஷிலும் இந்நாளில் வழங்குவதன் காரணம் என்னவெனில், நமக்குள் இடைப் பட்ட காலத்திலும், ஐரோப்பியர்க்குள் ஆதி தொட்டும், பெண்கள் கல்வி பயிலுவது பெரு வழக்கமா யில்லாமையே. நாகரிகம் பெருகிப் பெண்களும் கற்கத்

தொடங்கவே, பிரத்தியேகமாய்ப் பேணி வளர்க்க வேண்டியதொரு விஷயமாகிப், 'பெண் கல்வி' (Female Education) என்னும் தனிப் பெயரும் உண்டாயிற்று.

ஆண்களும் பெண்களும் முற்றும் ஒரே தன்மையான கல்வியைக் கற்க வேண்டுமென்று நான் கூறவில்லை. சிற்பி, கொல்லன், தச்சன், கொத்தன் முதலிய தொழிலாளர், ஒரே விதமான கல்வியை அப்பியசிப்பதில்லை; அவரவர் தொழிலுக் கேற்றபடி தான் கற்கின்றனர். ஆயின், எழுத்து, கணக்கு, இலக்கியம் முதலிய அடிப்படையான கல்வி, எல்லார்க்கும் பொதுவே; சிற்பிக்கு வேறு கொத்தனுக்கு வேறில்லை. இவ்விஷயத்தைப் பற்றிக் கூறும் ஒரு மேதாவி, ஆண் பெண்களுக்குள் இயற்கை அமைத்திருக்கும் பேதங்களை எந்தப் பார்லிமெண்டாரும் தமது சட்டங்களால் மாற்றிவிட முடியாதென்று கூறியிருக்கிறார். இது கேவலம் உண்மையே. கூடுவதாயினும், அப்படி மாற்றி இரு பாலாரையும் ஒரேவித மாக்கிவிட வேண்டுமென்று விரும்புவாரு மில்லை.

கல்வி எல்லோருக்கும் அவசியமென்பதை இந்நாளில் வாதிப்பவரிலர். மனிதத் தன்மையின் உட்பிரிவுகள் தான் ஆண் பெண் என்பன, மானுஷ்யம் இரு பாலார்க்கும் பொது, என்பதை மறக்கலாகாது. மற்றொரு விஷயமும் நாம் கவனிக்க வேண்டும்: அதாவது, இயற்கையின் பொதுக் குணங்கள் நிற்க, யதார்த்தத்தில், ஆண் மக்கள் எல்லோரும் ஆண்மையிற் சிறந்து, ஆண்களுக்கே உரியனவாகக் கருதப்படும் உரிமைகளையும் கடமைகளையும் வகிக்கத் தக்கவரல்லர்; பெண் மக்களெல்லோரும், அவ்வாறே பெண்மையிற் சிறந்து, பெண்களுக்கே சிறப்பாக மதிக்கப்படும் சுதந்தரங்களையும் கடமைகளையும் வகிக்கத் தக்கவரல்லர் என்பதே. ஆணினும் பெண்போலும் ஆண்மக்களும், பெண்ணினும் ஆண்போலும் பெண்மக்களும், பலருளர். இப்படிப்பட்டவரை, அவரவர்க்குப் பொருந்தாத துறைகளிற் புகுத்தித் துன்புறுத்துதல் நியாயமாகாது, நற்பயனையும் தாராது.



ஒரு வீட்டைக் கட்டுவோன், நாலைந்து மேல் மாடிகளைச் சுமக்க வேண்டிய சுவர்களின் அஸ்திபாரத்தை அதிக ஆழமாயும் வலிமிக்கதாயும் செய்வதையும்; அவ்வாறின்றி, மொட்டை மாடியாகவோ ஓட்டுக் கூரையாகவோ அமையும் அறைச் சுவர்களின் அஸ்திபாரத்தை இலேசாய்ப் போடுவதையும், காண்கின்றோம். அஸ்திபாரமின்றிச் சுவர் வளர்த்து வீடு கட்டுவதில்லை. கல்வி விஷயத்தில் அடிப்படைக் கல்வியென்பதுதான் அஸ்திபாரம். அது எல்லார்க்கும் பொதுவே. புத்தியென்னும் பூமியில், எழுத்தறிவென்னும் கடகால் தோண்டி, அடிப் படைக் கல்வியென்னும் அஸ்திபாரம் போடாமல், உயர்தரக் கல்வி, தொழிற்கல்வி முதலிய மேற்கட்டடங்களை எழுப்புதல் பயன்படாது.

இயற்கையிலே ஆண் பெண்களுக்குள் பேதங்கள் அமைந்திருப்பதால், அவற்றுக் கேற்பப் பெரும்பாலும் மேற்கல்வி சிறிது மாறுபடலாமெனினும், மானுஷ்யம் என்னும் பொதுக்குணங் கொண்ட இரு பாலார்க்கும், அடிப்படைக் கல்வியில் ஏற்றத் தாழ்ச்சியின்றி, ஒரே தன்மையதாக இருக்க வேண்டும். இந்த அடிப்படைக் கல்வியில் ஏற்படும் வித்தியாசம், ஆண் பெண் என்னும் பால் பற்றியதன்று; உயர்தரக் கல்வி எவ்வளவு மேற்போகும் என்பதைப் பொறுத்ததே.

அடிப்படைக் கல்வியில் ஏற்படும் வித்தியாசம், உலகத்திலே மக்களுக்குள் புத்தியிலும் செல்வத்திலும் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளால் வருவது. ஆணோ, பெண்ணோ, ஒவ்வொரு ஆளும், சாதி மதம் பால் என்னும் பேதமின்றி, தன் புத்திக் கெட்டிய மட்டில் கல்வி பயின்று தேர்வதுதான், நாகரிகத்தின் இலக்கு. அதற்கு வேண்டிய கலா சௌகரியங்களை இலவசமாகவோ, அதிகச் செலவின்றியோ, அளிப்பது தான், ஒவ்வொரு நாகரிகத் துரைத்தனத்தின் கடமை. புத்தியிலும் செல்வத்திலும் மக்கள் எல்லோரும் மேம்பட்டு உன்னத பதவியை அடைவது, அதாவது, ஏழை தனவான் என்பதின்றி எல்லோரும் ஐந்

தடுக்கு மேடையுள்ள மாளிகைகளில் வாழ்வது தான், நாகரிக மேன்மை. இப்பொழுது, நமது இந்திய கலாசாலைகளில், பி. ஏ. பட்டம் பெறும் வரை போதிக்கப்படும் கல்வியை, அடிப்படைக் கல்வி யென்றே சொல்ல வேண்டும். சிறந்த இலக்கியங்களைப் படித்து அநுபவித்தற்கு வேண்டிய பயிற்சி, சாமானியமான சாஸ்திர ஞானம், சரித்திர ஞானம், கணக்கு, போலி எண்ணங்கள் போலி நியாயங்கள் போலி வாதங்கள் இவற்றை யறிந்து உண்மையைக் கண்டு கடைப் பிடித்தற்கு இன்றி யமையாத தர்க்க ஞானம், இவை யெல்லாம் நாகரிக மனிதர்க்கு அடிப்படைக் கல்வியே யாகும். நமது தேசம் ஏழைமைப் பட்டது, இவ்வளவு கல்வி யறிவு எல்லார்க்கும் கொடுக்கும் சக்தி யில்லாதது என்பது, ஒருவாறு உண்மையே; ஆயின், கல்வியைப் போல் அதி முக்கிய மில்லாத அம்சங்களில் செலவைக் குறைத்துக் கொண்டு, நம்மா லேன்ற மட்டும், அடிப்படைக் கல்வியை ஆழமும் அகலமும் அழுத்தமும் உள்ளதாக்கி, நம்மவரில் எத்தனை பேர்க்கு அதைக் கொடுக்க ஒண்ணுமோ அத்தனை பேர்க்கும் கொடுக்க முயலுவது தான், நமது கடமையாகும்.

> "செவிக்குண வில்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கும் ஈயப் படும்" என்றும்;
>
> " தவலரும் தொல் கேள்வித் தன்மை யுடையார்,
> இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
> நகலின் இனிதாயிற் காண்பாம் அகல் வானத்து
> உம்பர் உறைவார் பதி"

என்றும், நமது முன்னோர் பாடியுள்ளார். நமது நாடு நாளுக்கு நாள் மேன்மை யுறுவதை அளக்கும் கோல், வியாபாரப் பெருக்கு மன்று; ஏற்றுமதி இறக்குமதிகளின் பெருமையு மன்று; ஆடை ஆபரணங்களின் மலிவு மின்று; இந்திய ரெல்லாம், கூழோ கஞ்சியோ, ஏவாதுண்டு, நோவாது வாழ்ந்து, சாவாத கல்வியில் மேன்மேலும் தழைத் தோங்குவதே யாகும்.

நமது நாட்டிற் சில பிரமுகர்களுக்குள், நாம் கற்கும் கல்வியைத் தேசியக் கல்வி யாக்க வேண்டும், ஆண்கள்



கல்வி கற்கும் முறையே பெண்களும் கற்க வேண்டாம், என்னும் உணர்ச்சி பிறந்திருக்கிறது. நாம் கற்கும் கல்வியை, அந்நிய பாஷையான இங்கிலீஷ் பாஷை மூலமாயின்றி, அவர் அவர் தாய்மொழி வாயிலாகவே கற்பது தான் தேசியக் கல்வி என்று கூறின், பல பாஷைகள் வழங்கும் பாரதகண்டத்திலே சில அசௌகரியங்களும் தேசிய ஐக்கிய உணர்ச்சியின் வளர்ச்சிக்குச் சில இடையூறுகளும் அப்படிச் செய்வதால் நேருமெனினும், பலத்த ஆக்ஷேபம் ஒன்று மிராது. ஏனெனின், அதுவே இயற்கையில் நியாய முறையாகும். இதுவன்றி, அடிப்படைக் கல்விக்கு மேற்பட்ட தொழிற் கல்வி வகைகள், கைத்தொழில் முயற்சியே மிக்குள்ள ஜர்மனி இங்கிலாந்து போன்ற தேசங்களில் இருப்பது போலின்றி, விவசாயமே நூற்றில் தொண்ணூறு பேருக்கு முக்கியமான ஜீவன விருத்தியாக இருக்கும் நம் நாட்டுக்கு ஏற்றபடி இருப்பதுதான் தேசியக் கல்வி யென்று கூறின், அதுவும் முற்றிலும் பொருந்தும். இவ்விரு விதமு மின்றி, நமது தேசம் ஏழைமைப் பட்டதாயிருப்பதால், நமக்குக் கல்வியும் அதற் கேற்பக் கொஞ்சம் போதும் என்றேனும்; தற்காலத்து நாகரிக முறைகளைக் கைவிட்டுப், பழைய நாளைய முறைகளையே கைப்பற்றி, புராதன கிரந்தங்களையே பெரிதும் படித்து,

> " தம்மின் மெலியாரை நோக்கித் தம துடைமை
> அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
> கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெலாம்
> எற்றே இவர்க்கு நாம் என்று" என்னும்

பெரியோர் நல்வாக்கையும் மறந்து, கல்வியிலும் உள்ளதைக் கொண்டு திருப்தி யடைந்து, பிஞ்சில் பழுத்த கனிகளைப் போல உலக வைராக்கியத்தையும் முக்தி மார்க்கத்தையுமே இலக்காகக் கொண்டு நமது இளைஞர் பயிலுவது தான் தேசியக் கல்வி யென்றேனும் கூறின், அதை நாம் ஒரு சிறிதும் ஏற்க வொண்ணாது. இது நிற்க:

பெண் கல்வியைப் பற்றிப் புதிதாய்ப் பயமுறுவார் சிலர் மனத்தில், "பெண்களுக்கு அவரவர் கணவரே

கண்கண்ட தெய்வம்; அவர்களுக்கு என்றுமே சுவாதந்தரியம் கிடையாது" என்னும் அபிப்பிராயம் வேரூன்றியிருக்கலாமென்றும், அதனால் உண்டான பயமே இதுவென்றும் ஊகிக்க இடமுண்டு. ஏறத் தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே நமது தேசத்துக்கு வியாபாரிகளாக வந்து, நமது அரசரின் அரமனை வாயில்களில் பேட்டிக்காரகக் காத்துக் கிடந்தும் சுங்கங்கள் கொடுத்தும் பலவாறு உழன்ற அந்நியர்கள், நாட்டிலே ஆதிக்கமும் அதிகாரமும் பெற்று நூறு வருஷங்களே ஆகின்றனவெனினும், அவ் வதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் விட்டுக் கொடுத்து இழந்து விடுகிறதென்றால் எவ்வளவு மனம் வருந்துகிறார்கள்! அப்படியிருக்க, எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாகப் பெண்டுகளைத் தமது அடிமைகளைப் போலும் சங்கம சொத்துக்களைப் போலும் அடக்கியாண்டு அனுபவித்து வந்த ஆண்மக்கள், பெண்களும் ஒத்த கல்வியும் சுவாதந்தரியமும் கவுரமும் அதிகாரமும் பெற மனமிசைவது, எவ்வளவு கஷ்டமாகும்! அரசன் குடி என்னும் தொந்தத்தினும், மேல் சாதி கீழ் சாதி என்னும் தொந்தத்தினும், ஆண்டான் அடிமை என்னும் தொந்தத்தினும், மிக வலியதும், நீடித்ததும், ஊனிலும் உயிருலும் உள்ளத்திலும் ஊன்றி ஊறிப் போனதுமான தொந்தமாகும், ஆண் மேல், பெண் கீழ், என்னும் தொந்தம். அவ் வுணர்ச்சியை நியாய புத்தியால் அடக்கித் துறந்து, ஆண் மக்களாவார் பெண் மக்களையும் சமமாக நினைத்து, திரிகரண சுத்தத்தோடு அப்படியே நடத்துதல், அருமையினும் அருமையாகும். இப்பொழுது தான் இவ்வித உணர்ச்சி ஆங்காங்குச் சிறிது கிளைத்துத் தலையெடுத்து வருகின்றது. ஆண்களாகப் பெண்களை மதித்து மனமொப்பி மனமுகந்து விட்டுக் கொடுப்பதற்கு நெடுங்கால மாகும். ஆனால், பெண்களும் ஆண்களைப் போலவே எவ்விதத்திலும் தாழ்வின்றிப் படித்து, தாமே தமக்குரிய சுதந்தரங்களைக் கைப்பற்ற முன் வரின், அந்த நாள் நம் நாளிலேயே வந்து விடும். மேரி ராணியார் பெண்கள் கலாசாலையில் பத்து வருஷகாலமாகப் பெண்களும் ஆண்



மக்களைப் போலவே கல்வி பயின்று வருவதும், பரீக்ஷைகளில் ஆண்களிலும் மிக்கபடி தேறிவருவதும், கல்வியின் பயனாகச் சர்வ கலாசாலை மந்திரசபை, நிர்வாக சபைகளில் புகுந்தும், இன்னும் ராஜ்ய பரிபாலனச் சட்ட சபைகளில் புக முயன்றும் வருவதும், சிலர்க்குக் கண்ணில் உறுத்துகின்றது போலும். இஃது ஆச்சரிய மன்று, விபரீதமு மன்று, மனுஷ சுவபாவமே. ஆயின், இரு கண்களில் ஒன்றுக்கு வந்த நோய் மற்றதையும் வருத்துவது போல, சகடத்தில் ஓர் எருது சண்டியாயின் மற்றது மேற் செல்ல மாட்டாது தத்தளிப்பது போல, பெண்களும் கல்வியிற் சிறந்த பயிற்சி யுற்றாலன்றி, ஆண்களின் பயிற்சி வீணாகும் என்பதை நன்கறிந்து, பெண்களின் அடிப்படைக் கல்வியின் ஆழத்தை யேனும் அகலத்தை யேனும் அழுத்தத்தை யேனும் ஒரு சிறிதும் குறையா திருத்தல், நாட்டின் மேம்பாட்டை நாடும் தேச பக்தர்களின் முதற் கடமையாகும்.

## ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவரில்லம்
### மயிலாப்பூர்

(44-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்தப் பெரிய காரியம் ஒருவாறு பூர்த்தியானதும், மற்ற வகைகளில் இவ்வில்லத்தைச் சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணம் உதய மாயிற்று. தொடங்கிய நாள் முதல் கீழ்தரப் பாடசாலை, உயர்தரக் கல்லூரி, இவ்விரண்டிலும் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவி புரிந்து வந்தது. மாணவர்கள் இல்லத்தில் உணவருந்தி, பகற் காலங்களில்

பாடசாலைகள் சென்று, எஞ்சிய நேரத்தை இங்கே கழித்து வந்தனர். அவர்களுக்கு இல்லத்தில் கூடியுவரை நல்லொழுக்கமும் சமய நெறியும் கற்பிக்கப்பட்டன. ஆனால் உயர்ந்த உண்மைப் பயனைப் பெறவேண்டுமாயின், ஆசிரியர் உயர்வான லட்சியங்களைக் கைக்கொண்டவர்களாயும், மாணவருடன் கூடி வாசம் செய்பவர்களாயும், சிறுவர்கள் அவர் பிரசங்கங்களைக் கேட்பவராயும், இருந்தால் மட்டும் போதாது; பெரியோருடைய நற்செயல்களையும் சுயநயமின்மையையும், நேரில் கண்டு பழகுவதாலும், அவர்கள் மேற் பார்வையின் கீழ் தங்களுக்குப் பொருத்தமான அலுவல்களைச் செய்வதாலுமே கூடும் என்பது தெளிவாக, அவ்வாறே இல்லத்தை நடத்துவது முக்கியமான காரியமாயிற்று.

மேற்கூறிய நோக்கத்தை அவலம்பித்து, குருகுல வித்யாசாலை ஒன்று 1922-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டு, சென்ற இரண்டு வருஷங்களாகச் செவ்வையாய் நடைபெற்று வருகிறது. இது ஆங்கிலப் படிப்புக் கேற்றதெனத் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. உயர்தரக் கல்லூரியில் சென்று பயிலும் சிலரைத் தவிர, மற்றவர்கள் குருகுலத்திலேயே கல்வி கற்கின்றனர். பாடங்கள் மற்றப் பள்ளிக் கூடங்களிலுள்ளவை போலவேயாயினும், ஸம்ஸ்கிருதமும், தாய் மொழியும், மதாசாரமும் கட்டாயப் பாடங்களாகின்றன. ஏட்டுக் கல்வி மட்டும் போதாதென்று, பிரம்பு பின்னும் வேலை, தச்சு வேலை, நெசவு, பொன்வேலை முதலியன மாணவர்க்குக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இல்லத்தில் பயின்று உயர்ந்த யோக்கியதாபத்திரம் பெற்ற மாணவர்கள் பலர், குறைந்த சம்பளம் பெற்று, குருகுலத்தில் ஆசிரியர்களாக அமர்ந்திருக்கின்றனர். வேறு அலுவல்களில் அமர்ந்துள்ள மற்றுஞ் சிலரும், இங்கே வரவு செலவு கணக்குகளைப்பார்ப்பதிலும், கடிதங்கள் எழுதுவதிலும், வாசக சாலையிலும், வைத்திய சாலையிலும், கட்டிட வேலை முதலிய முக்கியமான காரியங்களைக் கவனிப்பதிலும், பேருதவி புரிந்து வருகின்றனர்.



ஸரஸ்வதி ஆலயம்



இவர்கள் இவ் வில்லத்தில் அடி நாட்களில் ஸன்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கக் கற்பிக்கப் பட்டன ரென்பதற்கு இது வோர் அத்தாட்சி.

இம்மாணவர்களுடைய தினசரி வாழ்க்கையைச் சிறிது கவனிப்போம்.

அதிகாலையில் நாலரைமணிக்குக் கண்டாமணி கேட்கின்றது. தம் அறைகளுக்குள்ளும் வெளித் தாழ்வாரங்களிலும், படுத்துறங்கும் சிறுவர்கள் எழுந்து, படுக்கையைச் சுற்றி, அதனிடத்தில் வைத்துவிட்டுக், கைகால் கழுவி, முற்றத்திலே வரிசையாய் நிற்கின்றனர். இவர்கள் உயர் தர வகுப்பினர். இவர்கள் முன்னே நிற்பவர் தேகப்

பயிற்சி ஆசிரியர். எழுந்ததும் தேகப் பயிற்சி செய்வதால், உடம்பி லுள்ள சோம்பல், உறக்கம் முதலியன பறக்கின்றன. பதினைந்து நிமிஷம் பயிற்சி செய்ததும், இவர்கள் நீராடச் செல்கின்றனர். இவர்களுக்குப் பிறகு கீழ்தர வகுப்பினர் (10 முதல் 16 வயதுவரை) தேகப் பயிற்சி செய்கின்றனர். ஐந்து மணிக்கு இது முடிகின்றது. சிறுவர்கள் கட்டிடத்தின் பின்புறத்தி லுள்ள குழாய்களி னருகும் தொட்டியி னருகும் வெகு உற்சாகத்துடன் குளிக்கின்றனர். பெரும் பாலார் குளிப்பது குளிர்ந்த நீரிலேயே; உடம்பு அசௌகியமா யிருப்பின், வெந்நீர் தாங்களே போட்டு, ஸ்நாநம் செய்கின்றனர்.

ஐந்தரை மணிக்கு மணி யோசை மறுபடியும் கேட்கின்றது. மாணவர்கள் அனைவரும் நல்லாடை யுடுத்துக், திருநீறோ, திருமண்காப்போ, தங்கள் ஆசாரப்படி யிட்டு,

ஆண்டிப்பட்டி ஜமீன்தார் திவான் பகதூர்
பெத்தாச்சி செட்டியார்



மேலே யுள்ள பெரிய தோர் அறைக்குச் செல்கின்றனர். சிறுவர்கள், உபாத்யாயர் முன் ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து, அவர் உட்காரும்படி சொன்னபின் அமரிக்கையாய் அவரவ ரிடத்தில் ஒழுங்காய் உட்காருகின்றனர். பக்தர்களுடைய சரித்திரங்களும், பகவானுடைய திருவிளையாடல்களும், மதாசாரியர்கள் செய்துள்ள கிரந்தங்களின் உட்கருத்துக்களும், பாகவதம், ராமாயணம், பாரதம் முதலிய புராண ரத்னங்களில் அடங்கிய கதை




களும், தரும ரஹஸ்யங்களும், கீதா சாஸ்திரமும், மற்ற நூல்களும், எளிய நடையில் எல்லோருக்கும் போதிக்கப் படுகின்றன. ஆறு மணிக்கு வகுப்புக் கலைகின்றது. நாம் இல்லம் முழுவதையும் சுற்றிப் பார்வையிட்டு வருவோம்.

மேல் மாடியிலே ஆண்டிபட்டி ஜமீன்தாருடைய பொருளுதவியினால் நிருமிக்கப்பட்ட ஸரஸ்வதி ஆலயம் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. கதிரவன் ஒளிசிறிது தோற்றுகின்றது. எல்லாக் கலைகளுக்கும் முதற் காரணமான நாமகளின் உருவம் ஒன்று, சலவைக் கல்லால் அமைக்கப்பட்டு, காணும் அடியவர்களுக்குக் களிப்பும், மனத்திற்கு அமைதியும் தருகின்றது. கீழே பரமஹம்ஸரது திருவுருவப் படமும், வைதிக முறைப்படி பூஜா உபகரணங்களும் வைக்கப்பட் டிருக்கின்றன. ஷோடசோபசார பூஜை முறைப்படி சிறுவர்களால் காலையிலும் மாலையிலும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் செய்யப்படுகிறது. அமைதிக்கு இருப்பிடமான இவ்விடத்திலேயே தங்கியிருக்க மனம் அவாவுகின்றது. சிறுவர்களும் ஆசிரியர்களும் சிலர், கீதை, ஸஹஸ்ரநாமம், தேவாரம், உபநிஷத்து முதலியவைகளைப் பாராயணம் செய்து கொண்டும் சிலர் தியானத்திலும் அமர்ந்திருக்கின்றனர்.

ஆலயத்தி லிருந்து வெளியே வந்ததும், அவரவர், தத்தம் அறைகளைச் சுத்தமாய்த் தாங்களே பெருக்கிக், கதவு ஜன்னல்களை நன்றாய்த் திறந்து வைத்து விட்டுத், தங்கள் பாடங்களை வாசித்து வருகின்றனர். மேல்மாடியிலுள்ள விசாலமான அறைகளில் கீழ்வகுப்புப் பிள்ளைகள் 10, 15 பேர்களாய்க் கூடி யிருக்கின்றனர். உபாத்யாயரும் உடனிருக்கிறார். கீழேயுள்ள சிறு அறைகள் ஒவ்வொன்றிலும் உயர் வகுப்புப் பிள்ளைகள் நால்வர் இருக்கின்றனர். ஒவ்வொரு அறையிலும் பிரத்யேகமாய் அவரவர்க்கு மேஜை, நாற்காலி, புஸ்தக அலமாரி முதலியன போடப்பட் டிருக்கின்றன. அறையின் வாயிலில், அதைக் கட்டுவதற்குப் பொருளதவி செய்தவரின் பெயர் எழுதப் பட்ட பித்தளைத் தகடு பதிக்கப் பட்டிருக்கிறது.

போஜன சாலை



முக்கிய கட்டிடத்துக்குப் பின் புறத்தின் மேற்கே போஜன சாலை யிருக்கிறது. உக்ராணத்தி லிருந்து வேண்டிய ஸாமான்களை சமையற்காரனுக்கு ஒரு மாணவன் அளவாய் எடுத்துக் கொடுக்கிறான். தாழ்வாரத்திலே, இரு சிறுவர்கள், முந்தின இரவு வாங்கித் தோய்த்த தயிரைக் கடைந்து வெண்ணை யெடுக்கிறார்கள். மணி எட்டடித்ததும், மாணவர்கள், பள பள வென்று சுத்தம் செய்யப்பட்ட தமது வெண்கலத் தட்டுகளையும் தீர்த்த பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டு, அமுதுண்ணும் அறையில் வரிசையாகப் போடப் பட்ட ஆஸனங்களில் உட்காருகின்றனர். உண்டதன் முன் வேதமும், தேவாரமும், ஸ்தோத்ரங்களும் ஓதப் பட்டு, அபிஷேக நீரும் ஆபோசன மிடப் படுகிறது. ஆசிரியர் இரண்டொருவரும் மாணவரிற் சிலருமாக உணவு பரிமாறுகின்றனர்.


மணி யொன்பதானதும், வெளிக் கலா சாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், கையில் சிற்றுண்டி எடுத்துக் கொண்டு புறப்படுகின்றனர். குரு குலத்துச் சிறுவர்கள் தங்கள் வகுப்புகளுக்குச் செல்லுகின்றனர். முதலில்



எல்லாரும் ஒன்று கூடிக் கடவுள் வாழ்த்துக் கூறிப், பின், வகுப்புக்குப் போய் ஆசிரியரை வணங்கி, இடத்திலமர்கின்றனர். இவர்கள் உட்காருவது தறையிலேயே. மற்றப் பள்ளிக் கூடங்களைப் போல் நீண்ட சாய்வு மேஜைகளும் பெஞ்சுகளும் கிடையா. ஒவ்வொருவருக்கும் சிறிய கை மேஜை ஒன்று மட்டும் போடப்பட்டிருக்கிறது. ஆசானுக்கும் மாணவனுக்கும் இங்குள்ள நல்லுணர்வு பிற இடங்களில் காண்ப தரிது. முக்கிய காரணம், இதன் முன் கூறிய படி, ஆசிரியரிற் பெரும் பாலார் முன்பு இல்லத்திலிருந்து கல்வி கற்றவர்கள், அதன் லட்சியங்களை அப்பியஸித்து இல்ல முறையில் பழகியவர்கள், தாம் வளர்ந்த இடத்திலேயே தம் சகோதரர் போன்று பின் தோன்றிய சிறுவர்க்கு அறி வூட்டுவதில் ஊக்கங் கொண்டவர்கள், அதையோர் சிறந்த பாக்கியமாய்க் கருதுபவர்கள் என்பதே.

நடுப் பகலானதும், சில வகுப்புகள் தொழிற் சாலைக்குப் போகின்றன. அங்கே ஒவ்வொருவனும் அவனவனுக்குத் தகுந்த ஒரு தொழிலை ஆசான் கீழ் கற்று வரு

தொழிற் சாலை




கிறான். மற்றவர்களில் ஒரு சாரார் வேத மோத, மற்றொரு சாரார் விஷ்ணு ஸஹஸ்ர நாமம், பகவத் கீதை முதலியன பாடஞ் செய்கின்றனர்.

பிறகு சிற்றுண்டி யருந்தி, இரண்டு மணிமுதல் நாலே கால் வரை, பாடங்கள் படித்துப், பிறகு, முக்கால் மணி நேரம் தோட்டத்தில் வேலை செய்கின்றனர். இதன் பின்பு ஆசிரியரும் மாணவரும் விளையாட் டிடம் சென்று, காற் பந்து, கைப் பந்து, கிளிச் சட்டம் முதலிய விளையாட்டுக ளாடுகின்றனர்.

கைத் தொழிற் சாலைக்கு முன்பாக, குரு குல வித்யா சாலைக் கட்டிடம் ஆரம்ப மாகி, வேலை துரிதமாய் நடந்து வருகிறது. இதற்காக நாட்டுக் கோட்டை நகரத்தார்

கட்டப்படும் வித்தியா சாலை




பேருதவி செய்திருக் கின்றனர். மேலும் என்றென்றும் அது செவ்வையாய் நடந்துவரத் தக்கவாறு, இன்னும் உதவி செய்வ தாயும் வாக்களித் திருக்கின்றனர்.

பிரதானக் கட்டிடத் துக்கு வட பாரிசத்தில், ஒரு சிறு கட்டிடம் காணப் படுகின்றது. இது பொப்பிலி மகாராஜாவின் உதவியால் கட்டப் பட்ட வைத்திய சாலை. இங்கே நோயுற்ற மாணவர்களின் சிகித்ஸைக் காக வேண்



வைத்திய சாலை



டிய ஸாமான்கள் சேகரித்து வைக்கப் பட்டிருக் கின்றன. படுக்கைகளும் தயாராய்ப் போடப்பட் டிருக்கின்றன. சென்னையி லுள்ள பல பிரபல வைத்யர்கள் இலவச மாக மாணவர்களுக்குச் சிகித்ஸை செய்கிறார்கள். டாக்டர் பரீக்ஷையில் தேறிய பழைய மாணவன் ஒருவனே, இப்பொழுது இவ் வைத்ய சாலையைக் கவனித்து வருகின்றான். நோயாளிகளுக்கு வேளைகளில் ஆகாரம் கொடுப்பதும், மருந்து கொடுப்பதும், மற்ற மாணவர்களாலேயே செய்யப் படுகின்றது.

இருட்டுவதற்குச் சற்று முன் மணியோசை கேட்டதும், மாணவர்கள் தங்கள் மாலைக் கடன்களை முடித்துக் கொண்டு, தோத்திரம் கூறிப் பூஜைக்குச் செல்கின்றனர். சிறுவர்களில் ஒருவனே வைதிக முறைப்படி மந்திர தந்திரங்களுடன் பூஜை செய்கிறான். புஷ்பங்கள் கொய்வதிலும், கந்த, தூப, தீப, நைவேத்யங்கள் தயாரிப்பதிலும், மற்றும் சில சிறுவர்கள் மிகுந்த உற்சாகங் கொள்ளுகின்றனர்,

"கற்றதனு லாய பயனென்கொல், வால் அறிவன்
நற்ருள் தொழா அர் எனின் ?"

எல்லாக் கலைகளுக்கும் இருப்பிடமாகிய நாமகளை, நம் மில்லத்திற் சிறுவர்கள் பணிந்தேத்துவதைப் பார்க்கப் பார்க்க, நமக்கு பக்தி அதிகரிக் கின்றது, சிறியவர்களும் பெரியவர்களும் ஒன்று சேர்ந்து, அடக்க முடையவர்க ளாய், அன்பு நிறைந்தவர்களாய், அம்பாளைப் பணிவதைக் கண்டவரின் நெஞ்சு, கல் நெஞ்சானுலும் சற்று இளகும்; கவலை மிக்க தானுலும் சற்று எல்லா வற்றையும் மறந்து சாந்த மடையும். அன்னையின் உருவம் அருள் சுரப்பது போல் தோன்றும். தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவாய்மொழி முதலிய அருமறைகளினின்று, தோத்திரங்களைச் சிறுவர் மனங்கசிந்து இனிய குரலில் பாடும் போது, உள்ளம் பேருவகை பூக்கும்.

பின்பு எட்டுமணிக்குள் மாணவர்களும் ஆசிரியரும் இராப் போஜனம் முடித்துப், படிக்கச் செல்கின்றனர். சிறுவர்கள் 9 அல்லது 9–30 மணிக்குச் சயனத்துக்குப் போகிருர்கள். மற்றவ ரெல்லாம் 10 மணிக்குப் படுத்துக் கொள்ளு கின்றனர்,

மேற் கூறிய வாற்ருல், இங்கே முக்யமான காரியங்களை யெல்லாம் மாணவர்களே செய்து வருகின்றனர் என்பது தெளிவாகும். தாங்கள் பல வேலைகளைச் செய்வதன்றிப், பிறரைக் கொண்டு செய்விப்பதையும் கவனிக்கிருர்கள். சிற் சில நாட்களில் தச்சு, பிரம்புச் சாலைகளில் தாங்கள் செய்த ஸாமான்களைத் தலைமீது சுமந்து சென்று, தெருவில் விற்று வருகின்றனர். "தனது" என்னும் எண்ணம் "நமது" எனப் பன்மைப்பொரு ளடைகின்றது. "தனக் கென வாழாப் பிறர்க் குரி யாளன்" எவனே, அவனே அனைவராலும் போற்றப் படுவான், அவனே புருஷன் என அழைக்கத் தக்கவன், என்னும் எண்ணம் மாணவர்கள் மனத்தி லூன்று கின்றது.

## பலதுறைப் பொறுக்குமணிகள்

### பத்திரிகை ஆராய்ச்சி

([illegible]-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### வஸ்து—சடப் பொருள் (Matter) என்பது என்ன ?

மூன்று (அகலம்–நீளம்–உயரம்) அளவுள்ள இடத்தில் அமைவது யாதாயினும், அதை 'வஸ்து' என்கலாம். வஸ்துப் பிரபஞ்சமான சட உலகம், நமக்குத் தெரிந்த வரை, எண்பத்தேழு வித அணுக்களால் அமைந்தது. இந்த எண்பத்தேழு வித அணுக்களில், ஒவ்வொரு வித அணுவையும், இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: உள்ளுறையும் கொட்டை (Nucleus) போன்றது ஒன்று; அணுவுக்குத் தக்கபடி ஒன்ருே அநேகமோ ஆகும், மின்சார சக்தி மயமான 'மின்னுருக்கள் (Electrons) ஒன்று. அணுவின் குணம், அதிலுள்ள மின்னுருக்களின் தொகையையும் அமைப்பையும் பொறுத்திருக்கும். ஹைத்ரோஜன (நீர் வாயு) அணு வொன்றில் ஒரே மின்னுருத் தான் உண்டு; யுரேநிய அணு வொன்றில் 92 மின்னுருக்கள் உண்டு. மற்றைய 85 வித அணுக்களும், இவ்விரண்டு எல்லைகளுக்கும் இடையே, வெவ் வேறு பல மின்னுருக்களைக் கொண்டனவாம். சூக்ஷ்ம தரிசினி (Microscope) க்கும் புலப்படாத ஒரு மின்னுருவும் வஸ்துவே; வான சாஸ்திரிகள் ஆகாய வெளியில் இருப்பனவாகக் காட்டி யுள்ள பிரமாண்டமான பொருள்களும், வஸ்துக்களே. இரசாயன சாஸ்திரப்படி, தனிமையான பகாப் பொருள்கள் 87 உண்டு; எனவே, அணுக்களும் 87 விதங்க ளாயின. ஒரு பகாப் பொருளுக்கும் மற்றொரு பகாப் பொருளுக்கு முள்ள வேற்றுமை, அப் பொருளின் அணுக்களால் ஏற்படுவது தான்.

### புத்த ஜயந்தி.

பகவான் புத்தரது திருநாள், வைசாக சுத்த பூர்ணிமை (18-5-24) யன்று பம்பாயில் கொண்டாடப் படும்,

மகாத்மா காந்தி தலைமை வகிப்பார். தமிழ் நாட்டிலும் புத்த ஜயந்தி கொண்டாடப் படுதலும், அப்பொழுது அவரது அருள் மதத்தையும் திவ்ய சரிதையையும் பற்றிப் பிரசங்கங்கள் நிகழ்தலும், எவ்வளவோ நன்மைபயக்கும்.

## மண்ணைத் தின்பவர்.

'மயக்கை நோயுற்ற பெண்களையும், சிறு குழவிகளையும் தவிர, உன் நாட்டிலே, உன் எதிரிகள் தான் மண்ணைத் தின்பவர்' என்று, பண்டைக் கவி ஒருவர் ஒரு தலைவனைப் புகழ்ந்து பாடி யிருக்கிறார். ஆபிரிக்கா, தென் அமெரிக்கா முதலிய பிர தேசங்களிலே, மண்ணைத் தின்னும் காட்டு மிருண்டிகள் பலர் இருக்கிறார்களாம். நீல நதிப் பிரவாகம் அடித்துக் கொண்டு வரும் வண்டல் மண், எளிதில் சீரணமாகி விடும், க்ஷய ரோகத்தை நன்றாக்கும் என்று நம்பி, அதை, அடைகள் போலவும் அப்பங்கள் போலவும் செய்து உலர வைத்து, ஆண்களும் பெண்களும் தின்கின்றனராம். புகையிலையும், அபினும் சாராயமும், தம்மைச் சாப்பிடுகிறவரைப் பேய்ப் பிடியாகப் பிடித்துக் கொள்வது போல, மண் தின்னும் வழக்கமும், விட முடியாத படி பிடித்துக் கொள்கிறதாம். ஆற்றுப் படுகரிலுள்ள மண்ணைக்கொணர்ந்து, உலர்த்திப்பொடித்து, நனைத்துச் சுட்டு, 'சாக்கலேட்' போன்ற பண்டங்களாகக் கடைகளில் விற்க, இம்மண் தின்னி மாப்பிள்ளைகள் அதை வாங்கித் தின்கின்றனராம். பண மில்லாத ஏழை ஜனங்கள், படுகர் மண்ணை அப்படியே எடுத்துத் தின்கிறார்களாம். சங்கரன் கோயில் புற்று மண், விபூதி முதலியவற்றைச் சிலர் தின்னும் நம் மூராருக்கு, இவ் வழக்கம், அவ்வளவு புதுமையாகத் தோன்றாது.

## மலைச் சுரத்தோடு விமானப் போர்.

மலைச் சுரக் (Malaria) கொசுக்கள் மிகுந்துள்ள ஈரப் பாங்கான பிர தேசங்களின் மேல், ஆகாய விமான (Airplane) த்தி லிருந்து, அவற்றைக் கொல்லும் விஷ நீர் மழையைப் பெய்து, அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தார், மலைச் சுரத்தை ஒழிக்க முயலுகின்றனராம். ஜனம் நெருங்கிய நாடு நகரங்களின் மீது, ஆகாய விமானங்களி லிருந்து வெடி குண்டுகளையும் வேறு கொலைக் கருவிகளையும் பெய்து, மனித வர்க்கத்தையே தொலைக்க முயலுவதை விட, இது மேலென்றே சொல்லவேண்டும்.



## மரணாஸ்திரம்.

இங்கிலாந்திலே, க்ரிண்டல்—மாத்யூஸ் என்னும் சாஸ்திரஜ்ஞர் ஒருவர், ஒரு புதிய கிரணத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். இக் கதிரை மரணாஸ்திர மென்றே சொல்ல வேண்டும். ஏனெனின், இக் கதிரின் வழியாக அவர் செலுத்தும் ஒருவித மின்சார சக்தியானது, தன் எல்லைக் குட்பட்ட யாவற்றையும் எரித்துப் பொசுக்கிவிட வல்லது. இவர், அதைப் பற்றிப் பரீக்ஷைகள் பார்க்கும் பொழுது, அச் சக்தியின் ஒரு சிறு பாகத்தின் ஐந்நூற்றில் ஒரு பங்கு சக்திக்கு அகஸ்மாத்தாய் உட்பட்ட இவரது துணைவன், 24 மணி நேரம் பிரக்ஞை யற்று வீழ்ந்து கிடந்தானாம். ஆகாய விமானங்கள், சைநியங்கள், கப்பல்கள், பீரங்கிகள் முதலிய எதுவுமே, இச் சக்தியை எதிர்க்க முடியாது. 30 லக்ஷம் பவுனைக் கொண்டு, லண்டன் மா நகரத்தைச் சுற்றி, 50 மைல் தூரத்துக்கு எவ்வித எதிரியுமே அணுகாதபடி, இந்த நூதன சக்தியினால் காக்கலாகுமாம். சிவபிரானது நெற்றிக் கண்ணைப் போல எரிப்பது மாத்திர மன்றி, இச் சக்தியை, வேண்டிய வண்ணம், வேண்டிய அளவு, குறைத்தும், பெருக்கியும், விலக்கியும், பொருத்தியும், கையாளுதல் கூடுமாம். எனவே, தன்னை உடையவர்க்கு க்ஷேமத்தையும், பிறர்க்கு நாசத்தையும் பகுத் தறிந்து விளைக்க வல்லது இந்தச் சக்தி. நாசத்தைத் தவிர, வேறு நற்குணமும் உபகாரமும் உண்டோ என்று கேட்டவர்க்கு, பயிர்களையும் தோட்டங்களையும் பழாக்கி யழிக்கும் ஈசல், வெட்டுக் கிளி, முதலிய ஜந்து வர்க்கங்களை, இதனால் பொசுக்கிவிடலா மென்று அவர் பதில் உரைத்தனராம்.

## இந்திர நீல வயல்.

இலங்கைத் தீவிலே, பெல்மதுல்லா என்னும் இடத்திலே, இரண்டு ஏக்கர் விஸ்தீரண முள்ள ஒரு புலத்தில், ஏராளமான இந்திர நீல மணிகள் அகப்படு கின்றன. இவை 20 முதல் 700 காரட்டுவரை நிறை உள்ளன. சில மணிகள், சேதுக்கு முன்பே, அரை லக்ஷம் ரூபா விலை பெறுமாம். ரத்ந வியாபாரி களுக்கு இன்ன செய்வதென்று தெரியவில்லை. மன்னர் மகுடங்களுக்கே தக்க மணிகள், நூற்றுக் கணக்காய் ஆயிரக் கணக்காய்த் திடீரென்று அகப்பட்டு விட்டால், வாங்குவார் யார், என் செய்வது? வயலுக்குச் சொந்தக்காரர் எத்தனை லக்ஷமோ

அதற்குள் சம்பாதித் தாகிவிட்டது. எனினும், எங்கும் எல்லாப் புலங்களும் நவதானியங்களுக்குப் பதிலாக நவமணிகளை விளைக்கத் தொடங்கி விட்டால், தின்னப் பிடிசோறின்றி, மக்கள் விரைவில் இறந்து படுவர் என்பது திண்ணம்.

## செவ்வாயில் (Mars) உயிர் வாழ்க்கை யுண்டா?

23—8—1924 அன்று, செவ்வாய் என்னும் கிரகம், பூமிக்கு அதிக சமீபத்தில், அதாவது 35,000,000 மைல் தூரத்துக்குள் வரும். சுக்கிரன் இன்னும் நமக்கு நெருங்கிய கிரகம் (26,000,000 மைல் தூரம் தான்) எனினும், அதன் மேற் பரப்பு இருண்டு தோன்றுவதால், அதைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. செவ்வாயோ சூரிய வெளிச்ச முள்ளது. அதனால், நமக்கு அதைப் பற்றித் தெரியும். செவ்வாய் பூமியினும் மிகச் சிறியது. அதன் குறுக்களவு 4,260 மைல் தான். மேக மண்டலத்தால் பூமியைப் போல் மூடப்படாமல், தெளிந்த நீல வானத்தையும், சூரிய காந்தியையும் உள்ளது செவ்வாய். இருநூறு ஆண்டுகளாக, செவ்வாயின் மேற் பரப்பை வான சாஸ்திரிகள் கவனித்து வந்திருக்கின்றனர். அதன் இரு தலைத் துருவப் பிரதேசங்களிலும் பனிக் கட்டி யுண்டு; கோடைக் காலத்தில் இளகி, துருவக் கடல்களா யிருக்கும். இவையன்றி, வேறு கடலில்லை. செவ்வாயின் மேற் பரப்பிலே, பல கால்வாய்களும், இவை சந்திக்கு மிடங்களில் சங்கம வெளிகளும், விஸ்தாரமான பாழ்ங் காடுகளும் காணப் படுகின்றன. செவ்வாயில் புல் பூண்டுகள் (தாவர வர்க்கம்) உண்டென்பது நிச்சயம்; மேலான பிராணி வர்க்கங்கள் உள்ளனவா என்பது விவாத விஷயம். நமக்கு ஒரு நாள் 24 மணி நேரமாகிறது; செவ்வாய்க்கோ, ஒரு நாள் 24 மணி, 37 நிமிஷம், 22¾ விநாடியாகும். ஆனால், வருஷ அளவும் ருதுக்களும் நமக் கிரட்டிப்பா யிருக்கின்றன. செவ்வாயிலே 687 நாட்கள் கொண்டது ஓராண்டாகும். பல விஷயங்களில் பூமியை ஒத்தும், தாவர உயிரை ஏற்றும் உள்ள செவ்வாயிலே, மற்ற உயிர் வாழ்க்கையும் இருக்கலா மென்பர் ஒரு சாரார்.

## ஸ்ரீமதி ராமாபாய் ரானடே.

பம்பாய் மாகாண ஹைகோர்ட்டு ஜட்ஜும், ஆசாரச் சீர்திருத்த வியக்கத்தின் அச்சாணியும், மஹாராஷ்டிர சரித்திர நிபுணரும், உத்தம தேச பக்தருமாக விளங்கின



மகாதேவ கோவிந்த ரானடேயின் பத்தினியாரான இவர், 26–4–1924 அன்று, பூனாவில் காலஞ் சென்றார். சின்னஞ் சிறு பிராயத்திலேயே, இவர், அம் மகானுக்கு இரண்டாவது தாரமாக வாழ்க்கைப் பட்டு, அவரையே குருவாகவும் கொண்டு, கல்வி பயின்றார். அவர் ஜீவ தசையில், அவர் நிழல் போல் பின்னின்ற இவர், அவர் காலஞ் சென்ற பிறகு, தன் கணவர் உழைத்து வந்த துறைகளில் அவர் ஆத்மாவுக்குத் திருப்தி யுண்டாகும்படி தானும் உழைப்பது தான் உத்தமமான கைம்மை விரத மெனத் துணிந்து, பொது விஷயங்களில் முன் வந்து, அவ்வண்ணம் உழைக்கலானார். இப்பொழுது ஓர் ஆயிரம் பெண்களுக்கு மேல் கல்வி பயிற்றியும், வாத்திச்சி தாதி மருத்துவச்சிகளாகப் பழக்கியும், இன்னும் பல துறைகளில் ஏழைப் பெண்கள் மான ஜீவனம் செய்யும்படி அவர்களை வல்லவராக்கியும், பேருபகார சாதனமாய் விளங்கும் பூனா ஸேவ ஸாதனம், இவர் ஸ்தாபித்ததே. இஃதொன்றே இவர் பெருமைக்குத் தக்க சான்றாம். [நமது தமிழ் நாட்டிலே, சகோதரி R. S. சுப்பு லக்ஷ்மி யம்மாள் முதல் முதல் முளைப் பிடித்த இந்து விதவாசிரமும், இதுபோல் தழைத் தோங்கி மேன் மேலும் வளராது பயன் குன்றி விட்டது, விசனிக்கத் தக்கதாகும்.] இதுவன்றி, இவர், மராத்தி பாஷையில் அழகான சில கிரந்தங்கள் இயற்றி யிருக்கிறார். தன் கணவரது நூல்களையும் சொற் பொழிவுகளையும் பதிப்பித் திருக்கிறார். நாட்டின் முன்னேற்றத்தை நாடி யுழைக்கும் இந்திய உத்தமிகளில், இவர் மிகச் சிறந்தவராவர். இன்னோர் சிலர் நமது தமிழ் நாட்டிலும் விளங்குமாறு திருவருள் சுரப்பதாக!

## தமிழர்களில் மேதையர் இருவர்.

லண்டன் மா நகரத்திலுள்ள ராஜரீக ஸங்கம் (The Royal Society) தான், கலைவாணர் கழகங்களி லெல்லாம் சிறந்த தென்னலாம். இற்றைக்கு 279 ஆண்டுகளுக்கு முன் அது தொடங்கிற்று. பாயில், ந்யூட்டன் முதலிய மகா மேதையர், அதன் ஆதி யங்கத்தினராகி விளங்கினர். பௌதீக சாஸ்திரங்கள் பலவற்றுள் எதிலேனும், மேல் நாடுகளில் பாண்டித்தியம் பெற்றவர், அதன் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப் படுதலையே, F.R.S. என்னும் பட்டத்தையே, தமது கலை வன்மைக்குத் தலைச் சான்றாகக் கருதுவர். இந்தியக் கலைவாணர்க்குள், இதுவரை அச் சிறப்புற்றார் மூவரே. கணித சாஸ்திர

சிகாமணியாய் விளங்கின, காலஞ் சென்ற S. ராமானுஜ ஐயங்காரே, இந்தியாவிலே முதல் முதல் அப் பட்டம் பெற்றவர். பிறகு, வங்காளத்து Sir. J. C. போஸுக்கு அப் பட்டம் அளிக்கப்பட்டது. இப்பொழுது, தஞ்சாவூர் ஜில்லாவில் பிராமண குலத்தில் பிறந்து, கல்கத்தாவிலே பிரகிருதி சாஸ்திர போதகரா யிருக்கும், ஸ்ரீமான் C. V. ராமன் என்பவர், அப் பட்டத்தைப் பெற்றிருக்கிறார். சாதி மத வர்ண பேதங்களைக் கவனியாமல், அறிவை மட்டுமே பாராட்டிப், பிற நாட்டுக் கலைவாணர் கழகம் அளிக்கும் இப் பெருஞ் சிறப்பை எய்திய இந்தியர் மூவர்களில், இருவர் தமிழ் நாட்டினரா யிருப்பது, தமிழுலகம் உகந்து கொண்டாடத் தக்கதாம். 170-ம் பக்கம் பார்க்க.

### திவான்பகதூர் பெத்தாச்சி செட்டியார்.

கோயில் மடங்களுக்கு மட்டு மின்றி, நாட்டுக்கு நிலைத்த பேருபகார மாகக் கல்விச் சாலைகளுக்கும், நாகரிகத்தை விருத்தி செய்யும் முயற்சிகளுக்கும், நன் கொடையளிக்கும் நகரத்துச் செட்டிமார், முயற் கொம்பே. இன்னருள் கியாதி பெற்ற இக் கனவான், அகாலமாய்த் திடீரென மரித்தது, தமிழுலகத்தின் பாக்கியக் குறைவேயாம். "பாடு பட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் கேடு கெட்ட மானிடர்" பிறர், இருந்தா லென்ன, இறந்தால்தா னென்ன? 138-ம் பக்கம் பார்க்க.

### சுகாதாரக் குறிப்புக்கள்.

**வாய் காத்தல்**—உண்ணும் பொழுதும் பேசும்பொழுதும் தவிர, வாயை மூடிக் கொண்டிருந்தால், நோய்கள் பலவற்றை விலக்கி, ஆரோக்கியத்தை வளர்க்கும். எப்பொழுதும் நாசித் துவாரங்களினால் தான் மூச்சு விடவேண்டும். நமது முன்னோர் பணித்துள்ள பிராணாயாமத்தின் சூக்ஷ்மம் இது தான். ஓடும் பொழுதும், விளையாடும் பொழுதும், சிறுவர் பலர், வாயைத் திறந்து கொண்டு வாயால் மூச்சு விடுவது, கெட்ட வழக்கம்.

**தூக்கம்.** வைத்திய சாஸ்திர ஆராய்ச்சியையும், பல சாதியார் வழக்கத்தையும், அநுபோகத்தையும் கொண்டு கவனித்ததில், சாதாரணமாய் ஒவ்வொருவரும் 7 மணி நேரம் இரவில் தூங்க வேண்டுமாம். குழந்தைகளுக்கு அதிகம் வேண்டும்; விருத்தகர்க்குக் குறைந்து போதும்.

**சரீரப் பயிற்சி.** ஜப்பானிய ஸ்திரீகள், மாலையில் உலாவப் போய், சந்தித்துப் பேசுவராம். அக்காலத்தில், உபசார வார்த்தைகள் கூறும் பொழுது, உடலையும் அவயவங்களையும் வணக்க வேண்டும். ஒரு ஸம்பாஷணையில், இவ்வண்ணம் இருபது முறை வணங்க நேரும். எனவே, ஒரு ஸ்திரீ ஒரு மாலையில் பத்துத் தோழிமாரை கண்டு பேசினால், 200 வணக்கங்கள் வரை செய்தாகி விடும். இதுவே உடலுக்கும் அவயவங்களுக்கும் நல்ல பயிற்சியாகும். சரீரப் பயிற்சியை, மாலையினும் காலையில் செய்வதே நலமென வைத்தியர் கூறுவதால், நமக்குள் பெரியோர் பணித்திருக்கும் சூரிய நமஸ்காரமும், நமஸ்கார ஜபமும், இந்த ஜப்பானிய வழக்கத்தினும் சிறந்த சரீரப் பயிற்சிகளாவதோடு, தேவாராதனையைச் சார்ந்து, ஆத்ம லாபத்தையும் விளைக்கத் தக்கன.



**கோழி முட்டை.** தண்ணீருள்ள பாத்திரத்தில் போட, உள்ளே அமிழ்ந்து கிடந்தால் புதிது; பருத்த முனை மேலே எவ்வளவு கிளம்புகிறதோ அவ்வளவு பழையதாகும்.—மா.

**'தாராளமான கல்வி'** என்றால் என்ன? அது மற்ற நன்மைகளுடன், தாராள சிந்தனையைப் புகட்டும் கல்வியாகும். அது ஒரு வித சுதந்தரமாம்; வாழ்க்கை நலன்களில் முக்கிய மானதாம். பாட சாலைகள் செய்ய வேண்டிய பேருபகாரம் இதை யாவர்க்கும், கொடுப்பதே. அக்கல்வியின் முக்கிய மான அம்சம் ஒன்று, தேகப் பயிற்சி. இளம் வயதிலேயே சரீரத்தை வலிமை யுடையதாகச் செய்து கொள்ள வேண்டும். செவியும கண்ணும் நன்றாகப் பழக்க முற வேண்டும். சங்கீத இனிமைகளைச் செவியாலும், சித்திர நயங்களைக் கண்ணாலும் அறியவேண்டும். மனத்தை அடக்கும் திறமையைப் பெறவேண்டும். சுய பாஷையில் எளிதாகவும் பிழையின்றிப் பேசவும் எழுதவும் கற்க வேண்டும். சுய பாஷையின் விருத்தி தான் கல்விக்கு அடிப் படையாம். இயற்கை அழகுகளை அநுபவிக்க வேண்டும். தற்கால நாகரிகத்தின் புதுமைகளை நன்றாக உணரவேண்டும். நன்மை தீமைகளைப் பகுத் தறியும் உணர்வு தான், தாராளமான கல்வியின் முக்கிய நலன். இக் கல்வி, ஜன சமூகத்திற்காக ஊழியம் செய்ய, மனிதரைத் தயாரிக்கின்றது.

### கண்ணினால் பார்க்கும் சக்தி.

இதை முதலில் எந்த ஜந்து பெற்றதென்று சொல்ல முடியாது. நெடு நாளைக்கு முன் ஜீவித்[illegible] "ட்ரிலோபைட்" (Trilobite) என்ற ஜந்துவுக்கு[illegible] நுட்பமான

207646

பாகங்க ளமைந்த கண் ணிருந்தது. எதிரிகளி னின்றும் தப்புவதற்கும், இலேசாக இரை தேடுவதற்கும், மிருகங்கள் கண்களைப் பெற்றன. ஆதி மிருகங்களுக்குத் தலையில் ஒரு "மூன்றும் கண்" இருந்ததாம். பச்சோந்தியிடத்தில், இன்னும் அவ்விதமான உறுப்பின் அடையாளங்களைக் காணலாம். கண்ணைப் போல் இயற்கையில் வேறு அதிசயம் இல்லை. மனிதர் கண்ணில், ஒளியைப் பெறுவதற்குப் பத்துக் கோடி சிறிய கருவிகள் இருக்கின்றன; சில, பாதி இருட்டில் பார்ப்பதற்கும்; சில, பட்டப் பகலில் பார்ப்பதற்கும், உதவி செய்கின்றன. வான சாஸ்திர நிபுணர், மிகச் சிறிய நக்ஷத்திரங்களை நேராக உற்று நோக்காமல், கடைக் கண்ணால் பார்ப்பதால், அவை இன்னும் தெளிவாகத் தெரிகின்றனவாம். இதற்குச் "சாய்வுப் பார்வை" (Averted vision) என்று பெயர். ஆனால் மனிதரது கண், குறைகளில்லாததன்று. மிருகம் பறவைகளுக்கு மனிதரை விட நல்ல கண்கள் உண்டு. "அவனுக்குப் பருந்து போல் கண்" என்று நாம் சொல்லும் பொழுதெல்லாம், இதை ஒத்துக் கொள்கிறோம். கண்ணும் மூளையும் சேர்ந்து உழைக்கும் காலத்தில் தான், மனிதன் நிகரற்ற காட்சியைப் பெறுகிறான். இந்தக் காட்சியினால் தான், தன்னை விடக் கோடி மடங்கு சிறியதான பூச்சிகளை மனிதன் காண்கிறான். சந்திரனிலுள்ள கற்களையும் மலைகளையும் கூடப் பார்க்கிறான். பல வர்ணங்கள் கலந்திருக்கும் ஒரு வெறுங் குவியலாகவே ஒரு புஷ்பத்தை ஒரு மிருகம் பார்க்கும். பூக்களின் நுட்பமான அழகுகளைக் கண்டு களிப்பவன், மனிதன் தான்.

—பா.

உதயலன் நாடகம்

ஷேக்ஸ்பியர் கவீந்திரரது மிகச் சிறந்த ஒதேல்லோ நாடகத்தை மிகப் பொருத்தமாய் அழகாய்த் தமிழில் அமைத் தெழுதியது,

இதுவரை படித்திரா விட்டால் இன்றே வாங்குங்கள்

இரண்டாம் பதிப்பு—விலை 0—12—0



ஜப்பானும் ஜப்பானியரும்

(72-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

Rev. F. கிங்ஸ்பெரி, B.A., சென்னை.

தற்காலத்தில் அவர்களின் நிலைமையைப் பற்றி யோசிக்கு முன்னே, இன்றைக்கு எழுபது வருஷங்களுக்கு முன் அவர்களின் நிலைமை என்னவென்று பார்ப்போம்.

எழுபது வருஷத்துக்கு முன் ஜப்பானியர் நிலைமை-ஜப்பான் தேசம் பலபல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் "டைமியோ" என்னும் ஒவ்வொரு சிற்றரசனால் ஆளப்பட்டு வந்தது. "டைமியோ" என்ற சொல்லுக்கு மகாப் பிரபு என்று அருத்தமாம். இச் சிற்றரசர்கள் எல்லாருக்கு மேற்பட்டவன் "மிக்காதோ" என்னும் அரசன். இவனுக்கு இராசதானி கியோத்தோ, பட்டணம். "மிக்காதோ" என்பவனே அரசன் என்பது மெய்யேயாயினும், தூரத்தி லிருந்த டைமியோக்கள் பலர், வாஸ்தவத்தில் பூரண சுயாதீன முடையாராய்த், தங்களிஷ்டப் படியே தங்கள் மாகாணங்களை யாண்டு வந்தார்கள் என்பது நிச்சயம். ஆகவே, மிக்காதோவுக்கு இராச்சியத்திலே வல்லமை அதிக மில்லை. அது மட்டுமோ, அவன் தெய்வப் பிறப்பு என்று ஜனங்கள் மதித்து வந்தபடியால், சாதா

ரணக் கண்கள் அவனைக் காணக் கூடாதபடி, அவன் தன் அரமனைக் குள்ளே அடைபட்டிருந்தான். தேசத்திலே எல்லாரைப் பார்க்கிலும் நிரம்ப அதிகாரம் வகித்தவன் "ஷோகுன்" என்னும் உத்தியோகஸ்தன். "ஷோகுன்" என்னுஞ்சொல்லுக்குச் சேனாதிபதி என்பது அருத்தமாம்.

(1) இராசவமிசத்தார், (2) டைமியோவர் என்னும் மகாப் பிரபுக்கள், (3) ஸாமுறையர், (4) சாதாரண ஜனங்கள், (5) வியாபாரிகள் என ஜனங்கள் பிரிந்திருந்தது மன்றி (6) தீண்டா ஜாதி என்று அருத்தங்கொள்ளும் ஹீத்தர் என்னும் ஒரு வகுப்பும் அவர்களுக் குள்ளே இருந்தது. இவர்கள் எல்லோருக் குள்ளும் ஸாமுறையர் என்ற வகுப்பினரே மிகுந்த செல்வாக் குள்ளவர்கள். "டைமியோ" என்னும் சிற்றரசருக்குக் கண்ணும் கவசமும் போன்றவர்கள் ஸாமுறையரே. தென்னிந்தியாவிலுள்ள பிராமணரது புத்திக்கூர்மையும், வட இந்தியாவி லுள்ள க்ஷத்திரியரது வீரபராக்கிரமமும் ஆகிய இரண்டும் ஒன்றாகி உருவெடுத்தாற் போல, ஸாமுறையர் ஜப்பானில் விளங்கினர். அக்காலத்தில் தீண்டாஜாதியாகிய ஹீத்தரைக் கணக்கிற் சேராவிட்டால், வியாபாரிகளே கடைசி வகுப்பினர். வியாபாரஞ் செய்வது பெரியோருக்கு ஏற்றதன்று என்ற எண்ணம் இருந்தது.




ஒரு ஸாமுறையன்

பௌத்தம், "ஷிந்தோ மதம்", "கண்பூசியம்" என்னும் மதங்களே ஜப்பானியர் மதங்கள். பௌத்தம், கௌதம சித்தார்த்த புத்தர் போதித்த போதனை, நாளடைவில் ஒரு பிரத்தியேகமான மதமானது மன்றி, காலஞ் செல்லச் செல்ல, ஹீனயானம், மஹாயானம் என்னும் இரண்டு வகை நூல்களுள்ள இரண்டு பிரிவு பெற்றது. இதில் "வடக்குப் பௌத்தம்" ஆகிய மஹாயான பௌத்தமே, ஜப்பான் தேசத்துப் பௌத்தம். சீனத்தில் தோன்றிய கங்-பூ-த்ஸே என்னும் மகாரிஷி உபதேசித்த



தருமங்கள் நாளடைவிலே பிரத்தியேகமான ஒரு மதமாயின. அதுவே "கண்பூசியம்" என்பது. இவ்விரண்டும் புற நாடுகளிலிருந்து ஜப்பானுக்கு வந்த மதங்களாம். ஷிந்தோ மதமே ஜப்பானில் தோன்றிய மதம். இது பூர்வ ஆரியருடைய மதம் போன்றது. இதன் அம்சம் இயற்கையிலே காணப்படும் ஸத்துவங்களை வெவ்வேறு தெய்வங்களாகப் பாவித்து வணங்குவதும், இறந்து போன பிதிரர்களை வணங்குவதுமே.

புண்ணியபூமியாகிய ஜப்பானை விட்டு மிலேச்சர் வசிக்கும் அந்நிய தேசங்களுக்கு ஒருவன் போகத் துணிந்தால், அவனுக்குச் சிரசாக்கினை தவிர, வேறே தண்டனையில்லை. புறநாட்டான் ஒருவன் ஜப்பானுக்கு வியாபாரத்தின் பொருட்டு வந்தால், நாகசகி என்கிற துறைமுகத்திலே வந்திறங்கி, அப்பட்டணத்துக் குள்ளே வியாபாரஞ் செய்துவிட்டுத், திரும்பி விடவேண்டும். வேறெங்கும் போகலாகாது. போனால் மரணாக்கினை பெறுவன்.



காகோ என்னும் ஜப்பானியப் பல்லக்கு.

அக்காலத்திலும் ஜப்பானியருக்குப் புஸ்தகங்கள் இருந்தன. வாசிக்க எழுதத் தெரிந்தவர்களும் அநேகர்

இருந்தார்கள். அக்காலத்தில் ஜப்பானிய பாஷை எழுத்து, சீனபாஷை எழுத்தைப்போல, மொழியெழுத்து, அதாவது, ஒவ்வோ ரெழுத்தும் ஒவ்வொரு மொழி; ஒவ்வொரு மொழியும் ஒவ்வோ ரெழுத்து. அக்காலத்து நிலைமையைப் பார்த்தால், ஜப்பானியர் ஒன்றுந் தெரியாத காட்டுமிராண்டி ஜனமு மல்ல, இக்காலத்தைப் போல நாகரிகமுள்ள ஜனமுமல்ல. அவர்களுக்கு அர்த்த நாகரிகர் (பாதி நாகரிகம் பெற்றவர்கள்) என்ற பெயரே பொருந்தும்.

கிறிஸ்தாப்தம் 1853௵ ஜுலாய் ௴ 8-ம் தேதி ஜப்பான் தேச சரித்திரத்தில் வெகு முக்கிய முள்ள நாள். அத்தினத்திலே யெத்தோ குடாக் கடற்கரை யருகில் ஒரு சிறு சண்டைக் கப்பற் சேனை பல பீரங்கிகளோடு வந்து நின்றது. ஆயினும் வந்த நோக்கம் சண்டை செய்வதல்ல. உடனே ஜப்பானிய உத்தியோகஸ்தன் ஒருவன் கப்பற் சேனைத் தலைவனிடம் சென்று, வந்த நோக்கத்தை விசாரித்தான். கப்பற்சேனை அமெரிக்க ஐக்கிய மாகாணத்தி லிருந்து வந்தது. அந்நாட்டுப் பிரஜாதிபதி, மிக்காதோவுக்கு ஒரு காகிதம் எழுதி, அதைப், பெறி என்னும் கப்பற் சேனைத் தலைவரிடம் கொடுத்து, "நீர் இதை ஜப்பானுக்குக் கொண்டு போய், அங்கே யுள்ள உத்தியோகஸ்தரில் மகா கண்ணிய முள்ள ஒருவர் மூலமாய் மிக்காதோவுக்கு அனுப்ப வேண்டும். காகிதத்தை வேறொருவர் கையிலும் கொடுக்கக் கூடாது" என்று, கட்டளை யிட்டு அனுப்பி யிருந்தார். பெறி, தம்மிடம் விசாரிக்க வந்த உத்தியோகஸ்தனுக்கு இதை விபரமாய்ச் சொல்லி, தாம் கொண்டு வந்த காகிதத்தைச் சாதாரண உத்தியோகஸ்தரெவ ரிடமும் கொடுக்கத் தமக் கதிகார மில்லை யென்றும், அதை, யெத்தோவிலே யிருக்கும் பாரி உத்தியோகஸ்தர் ஒருவரிடம் தாம் கொடுக்க வேண்டும் என்றும், சொன்னார். "இங்கே அந்நியர் யாரும் வரலாகாது. இந்தத் துறைமுகத்தை இப்போதே விட்டு, நாகசகிப் பட்டணத்துக்கு உடனே போக வேண்டும். உமக் கேதாவது காரிய மிருந்தால், அங்கே உத்தியோகஸ்தர்களிருக்கிறார்கள். அவர்களோடு பேசலாம். உடனே இந்தத் துறைமுகத்தை விட்டுப் போக வேண்டும்" என்று, வந்த உத்தியோகஸ்தன் சொன்னான். பெறியோ, மகா விநயத்தோடே, ஆனால், மிக உறுதியாய், "எங்கள் பிரஜாதிபதி உங்கள் மிக்காதோவுக்குக் கொடுக்கும்படி என் மூலமாய்



அனுப்பி யிருக்கிற காகிதத்தை யெத்தோவி லுள்ள பாரி உத்தியோகஸ்தர் ஒருவரிடம் நான் கொடுத்த பின் தான், என் கப்பற் சேனை இதை விட்டுப் புறப்படும்" என்று, விடை பகர்ந்தார். ஜப்பானியர் என்ன செய்வார்கள்? பெறி துரையின் வார்த்தையோ மகா விநய வார்த்தைகள்! நிலையோ, மிக உறுதி!! கப்பல்கள் எல்லாம் பீரங்கிகள் உள்ள சண்டைக் கப்பல்கள்!!!. ஜப்பானியரிடம் அக்காலத்திற் சண்டைக் கப்பல் ஒன்று கூட இல்லை. பெறியை எதிர்ப்பது கூடிய காரிய மல்ல. இவைகளை யெல்லாம் யோசித்துக், கடைசியாய், அவர் சொன்னபடியே சம்மதித்தார்கள். பெறியும், காகிதத்தை யொரு பாரி உத்தியோகஸ்தரிடம் கொடுத்து விட்டு, இவ்வளவு தூரம் காரியம் அநுகூலமாய் முடிந்ததற் காகச் சந்தோஷித்து, அமெரிக்காவுக்குப் போய்விட்டார். இதற்கு எட்டு மாசத்துக்குப் பின், திரும்பவும், பெறி, யெத்தோ துறைமுகத்தில், முன்னிலும் பலத்த கப்பற் சேனையோடு தோன்றினார். வந்த நோக்கம் சண்டை போட வல்ல. அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கும் ஜப்பானுக்கும் வியாபார உடன்படிக்கை விஷயமாய்ப் பல மாசங்களாக ஆலோசனை நடந்தது. பின், நாகசகியில் மட்டுமல்ல, வேறு சில துறைமுகங்களிலும், அமெரிக்கர் வந்து, வியாபாரம் பண்ண மாத்திரமல்ல, வசிக்கவும் இடம் பெற்றார்கள். இவ்வண்ணமாக ஜப்பானியர் மேற்கத்திய நாகரிகம் இப்படிப் பட்டதென அறிய வந்தார்கள். இதன் பலனாய், 1868௵ ஜப்பானிய அரசாங்கத்தில் முழு மாறுதல் உண்டாயிற்று:—

(1) எழு நூறு வருஷங்களா யிருந்த "ஷோகுன்" என்னும் உத்தியோகம் நிறுத்தப்பட்டது. (2) மகாப் பிரபுக்கள் என அர்த்தங் கொள்ளும் "டைமியோவர்" என்னும் சிற்றரசர், தேசத்தின் பொது நன்மையை நாடி, தங்கள் சிறு சிறு பிரிவுகளுக்குத் தாங்கள் அதிபதிகளா யிருப்பதை விட்டு விட்டார்கள். (3) மிக்காதோ, பேருக்கு மட்டுமல்ல, வாஸ்தவ மாகவே ஜப்பான் முழுவதுக்கும் சக்கரவர்த்தி யானது மன்றி, ஜனங்களுடைய இஷ்டம் இன்னதென் றறிந்து, அதன்படியே ஜனங்களையாள ஒப்புக் கொண்டார். (4) ஐரோப்பிய ராஜ்யங்களில் இருப்பது போல, வெவ்வேறு மந்திரிகள் நியமிக்கப்பட்டார்கள். (5) மகாஜனசங்கம் (பார்லிமெந்து) உண்டானது. (6) கியோத்தோ பட்டணத்திலே, அரண்மனைக்

குள்ளே, சாதாரண ஜனங்கள் தம்மைக் காணுதபடி அடைபட்டிருந்த சக்கரவர்த்தி, தோக்யோ பட்டணத்தை இராசதானி யாக்கி, இராசாங்கத்தைத் தாமே நேரில் நடத்த, எல்லா ஜனங்களுடைய கண்களும் காண, வெளி வந்தார். இவ்வாறு ஜப்பானிலே நவயுகம் உண்டானது.

(இன்னும் வரும்)



ஜப்பானியர் கலியாணம்.


## 1. குசிகர் குட்டிக்கதைகள்

நமது ஸ்திரீகளும் இக்கிலீஷ் பழக்க மில்லாதவரும் அவசியம் படிக்கவேண்டும். படிக்கப்படிக்கத் தேவிட்டாது.

முதற்பாகம் 8 கதைகள்—விலை பத்தணு தான்


பிற நாடுகளில்

# கூட்டுறவு இயக்கம்

கனம் B. வேங்கடபதி ராஜு, B.A., B.L., M.L.A.,
அவர்களின் உபந்யாஸச் சுருக்கம்

**ஆஸ்திரேலியா:**—இந் நாட்டில் தான் தொழிலாளர் குடியரசாட்சி நன்ருக நடை பெறுகின்றது. மேல் கீழ் என்னும் வேற்றுமை யின்றி, ஜனங்கள், சகல சம்பன்னராய், ஸந்தோஷமாய் வாழ்கின்றனர் 'இரப்பவர் இல்லை, இல்லாதவர் இன்மையால்' என்பது இந் நாட்டுக்குப் பொருந்தும். கூட்டுறவு சங்க மில்லாத ஊரே யில்லை; ஒவ்வோர் ஊரிலும் ஊருக்குப் பெரிய கட்டடம் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்ததா யிருக்கும். இந்நாட்டிலே 25 லக்ஷம் குதிரைகளும், 110 லக்ஷம் கால் நடைகளும், 780 லக்ஷம் ஆடுகளும் இருக்கின்றன. 3,150 லக்ஷம் ஜனத்தொகை யுள்ள நம் தேசத்திலே, மொத்தம் 10 லக்ஷம் ஜனங்கள்தான், 25 கோடி ரூபாய் போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கிகளில் போட்டிருக்கின்றனர். 44 லக்ஷம் ஜனசங்கையே யுள்ள இந்த ஆஸ்திரேலியாவிலோ, 27 லக்ஷம் ஜனங்கள், 179 கோடி ரூபா பாங்கிகளில் போட்டிருக் கின்றனர்.

**நியூஸீலந்து**—இந்நாட்டின் ஜனத்தொகை 12 லக்ஷந்தான், நமது ஜில்லாக்களில் பலவற்றில் கொஞ்சமே; எனினும், இந் நாட்டில், $6\frac{1}{2}$ லக்ஷம் ஜனங்கள் 48 கோடி ரூபா பாங்கிகளில் போட்டிருக்கின்றனர். இந்நாட்டில் சராசரி மரண விகிதமும், சிசுக்களுக்குள் மரணவிகிதமும், $4\frac{1}{2}$யும், $48\frac{1}{2}$யும் ஆகும்; நமது இந்தியாவிலோ, 32-ம், 270-ம் ஆகும்.

**டென்மார்க்**—இச்சிறு நாட்டிலே மொத்தம் $10\frac{1}{2}$ லக்ஷம் பசுக்க ளுண்டு, அவற்றுள் $7\frac{1}{2}$ லக்ஷம் பசுக்கள் கூட்டுறவுக் காரர்க்குச் சொந்தம். இவர்கள் 1050 பாற்சாலைகளை நடத்தி வருகிருர்கள். ஆண்டுதோறும் 12 கோடி ரூபா விலைமதிப்புள்ள வெண்ணெயைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இந்நாட்டு வழக்கம் எப்படி யெனில், ஆளுக்கு ரூ 120 முதல் வைத்து,

150 குடியானவர்கள் கூடி, 18 ஆயிர ரூபா முதல் சேர்த்து, 850 பசுக்களை யுள்ள ஒரு பாற்சாலையை எற்படுத்தி நடத்துகின்றனர். பாற்சாலைகளை எற்படுத்தி நன்கு நடத்தினால், சொற்ப முதலுடன் தக்க லாபம் சம்பாதிக்க லாகும். இந்நாட்டு முறை இந்தியர்களுக்கு எற்றதாகும். கூட்டுறவு முறைதான் இத்தொழிலுக்குப் பொருந்தியது. 200 எக்கர் மேய் புல மிருந்தால், ஒரு பாற்சாலைக்குப் போதும். பயிரிடக் கூடிய பாகத்தில் கால் நடைத் தீவனங்களைப் பயிர் செய்யலாம். பாலும் வெண்ணெயும் நல்ல சத்துள்ள ஆகாரங்கள். ஜீவசக்தியை வளர்க்கும் தன்மையில், ஒரு சேர் வெண்ணெயானது, 6 சேர் இறைச்சிக்கும், 12 டஜன் கோழி முட்டைகளுக்கும் சமமாகுமாம். ஆஸ்திரேலியாவிலே, ஆண்டு தோறும் 95 ஆயிரம் டன் வெண்ணெய் உற்பத்தியாகிறது. ஒரு டன் வெண்ணெய் ரூ 2400 விலை மதிப்பாகும். நியூஸீலந்து நாட்டிலிருந்து ஆண்டு தோறும், 4 கோடி ரூபா பெறுமான வெண்ணெயும், 5 கோடி பெறுமான பாற்கட்டியும் (Cheese) எற்றுமதி யாகின்றன.

**ஸ்வீடன்**—இதைப் பசுப்பூமி யென்னலாம். இங்கே மூன்று தலைக்கட்டுக்கு ஒரு பசு இருக்கிறது. வருஷந் தோறும் 3 கோடி ரூபாவுக்கு வெண்ணெய் விற்கின்றனர். ஜர்மானியரும் டச்சுக்காரரும் இந்நாட்டாரைப் பார்த்தே, பாற்சாலை வியாபாரம் தொடங்கினர். இப்பொழுதோ, கூட்டுறவுப் பாற்சாலைகள், ஜர்மனியில் 3500, சுவித்ஸர்லந்தில் 3000, பிரான்ஸில் 700, ஐயர்லந்தில் 400 இருக்கின்றன. நமது இந்தியா தேசம் முன்பு பசுக்களுக்குப் பேர் போனது. இப்பொழுதோ, பாலும் வெண்ணெயுமின்றி நாம் தவிக்கிறோம். சென்னை ராஜதானியிலே, செங்கற்பட்டிலே மட்டும், பேருக்கு ஒரு பாற்சாலை யிருக்கிறது. இதன் அங்கத்தினர் 24 பேருள், 22 பேர் பால் வாங்குபவர். ஒரு வருஷத்தில் பால் வியாபாரம் ரூ 1,231-க்கு நடக்கிறது ; கிடைக்கும் லாபம் ரூ 59. ஆகா! என்ன பெரும்பேறு ! நம் நாட்டுப் பசுக்கள் உடல் சிறுகிப் பலம் குறுகி வருகின்றன. ஆஸ்திரேலியாவில் ஒரு பசு தினம் தோறும் 10 முதல் 30 சேர் வரை பால் கறக்கிறது. நம் நாட்டிலே மேய் புலங்கள் குன்றிவருவதை, ஸர்க்கார் தடுத்துப் பெருக்க வேண்டும். கூட்டுறவுப் பாற்சாலைகளை எற்படுத்தி, பசுக்களின் இனத்தையும் ஜாதியையும் பலனையும் அபிவிர்த்தி செய்ய வேண்டும். இதனால் நாட்டுக்கு மிக்க க்ஷேம லாபங்கள் உண்டாகும்.

கிராமங்களிலே கூட்டுற வியக்கம் பரவி வளர்ந் தோங்கி, பொது நன்மைக்கும், விவசாய விருத்திக்கும், மேலான எரு, கருவிகள் முதலியன உபயோகிப்பதற்கும் இன்றியமையாத

171-ம் பக்கம் பார்க்கவும்.

# பத்மாவதி சரித்திரம்

## மூன்றாம் பாகம்

### முதலாவது அதிகாரம்

கோபாலையர் எம்.பி.ஸி. எம். பரீக்ஷை தேறி வைத்திய ராகு முன்னமே கல்யாணியம்மாள் மறுபடியும் கருவுற்றாள். அப்பொழுது அவளுக்கு முன்போல தேவ பாதை உண்டாயிற்று. சில சமயங்களில் உயிரற்ற கட்டை போல வெகு நேரம் கிடப்பாள் ; தீயினாற் சுட்டாலுங் கூடத் தெரியாது. சில வேளைகளில் சுடலை மாடனென்றும், இசக்கி யென்றும் கண்டபடி புலம்பிக் கொண்டு, பெருங் கூக்குர லிட்டு, சுவரில் மோதியும், தரையில் விழுந்து புரண்டும், தலை சுற்றி ஆடுவாள். சூலுற்ற அவள் மெல்லிய அழகிய சரீரம் படும் பாட்டையும் காயங்களையும் பார்த்தால், யார்க்கும் நெஞ்சு பதை பதைக்கும். இன்னும் பால்குடி மறவாத பெண் குழந்தையையும், துஷ்டத் தனமும் மழலைச் சொற்களும் மிகுந்துள்ள தலைப் பிள்ளையையும் பேணிப் பாதுகாக்க, ஒரு தாதி நியமிக்க வேண்டியதாயிற்று. தன் தம்பி மனைவியைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்வதே சாவித்திரி யம்மாளுக்கு இராப்பகல் வேலையாயிற்று. கோளாறு அதிகரிக்க அதிகரிக்க, அவ ளொருத்தியால் மட்டும் முடியாமல், உதவிக்கு ஒரு வேலைக்காரி வைத்துக் கொண்டாள். வியாதி தொடங்கிய வுடன், கோபாலையர், சென்னையில் ஸ்திரீகள் வைத்தியத்தில் பேர் போன டாக்டர் டான்புட் என்பவரை அழைத்து வந்து காட்டினார். குழந்தைப்

பருவத்திலேயே புருஷனுடன் வாழத் தொடங்கி, மற்றச் சாதிகளில் பெண்களுக்கு விவாக மாகும் வயதிற்குள் இரண்டு பிள்ளைகளும் பெற்று, மூன்றாந் தரமும் சூலுற்ற தனால் விளைந்த தீங்கு தான் அது, என்று சொல்லி; பி. ஏ. பரீக்ஷை கொடுத்து வைத்திய சாலையிற் படித்தும், இவ்வளவு தெரியாமற் போனதற்காகக் கோபாலையரை அவர் கடிந்து பேசினர். கோபாலையர், அவர் சொன்னதை முழுதும் நம்பி ஒப்புக் கொண்டு, அவரையே தம் மனைவிக்கு வைத்தியஞ் செய்யும்படி கேட்டுக் கொள்ள, அவரும் அடிக்கடி வந்து பார்த்து மருந்து கொடுத்து வந்தார். ஒரு தரம் வந்து பார்த்தால், அந்த டாக்டருக்குப் பதினைந்து ரூபா கொடுக்க வேண்டும். முதல் மாதக் கடைசியில் பார்வைக் கூலியும் மருந்தும் கூடி நானூறு ரூபாவுக்கு மேலாகி விட்டது. கோபாலையர் பணத்தைக் கொடுத் தனுப்பினர்; ஆனால் டாக்டர் டான்புட்டோ, அவர் தம் வைத்திய சாலை மாணுக்க ரானதால், பார்வைக் கூலி ஒரு காசுமே பெற்றுக் கொள்வ தில்லை யென்று, மறுத்து விட்டார். வியாதியும் குணப்படாமல், மாதக் கடைசியில் முதலில் 430 ரூபா கொடுத் தனுப்பிய வுடன், சாவித்திரி யம்மாள் மனது சிறிதும் ஒப்ப வில்லை; வியாதிக்கு டாக்டர் கூறிய காரணத்தை, அவள் நம்பவு மில்லை. எத்தனையோ சின்னஞ் சிறு பெண்கள், சட்டையும் சவலையு மாய்ப் பிள்ளைப் பெற வில்லையா, இதென்ன புதுமையா யிருக்கிற தென்று, அவள் எண்ணினள். ஆவேசம் வந்து ஆடும் பொழுது கல்யாணி யம்மாள் பிதற்றுவதையே மனப் பூர்வமாய் நம்பி, அது பேய்க் கோளா றென்றே நினைத்தாள். தேவ பாதை யுற்றவருக்கு மருந்து கொடுத்தால், அந்த தேவதைகளுக்குக் கோபம் வந்து, கோளாற்றை அதிகப் படுத்துவார்கள் என்பது, நம்மவர் கொள்கை. நம் நாட்டுத் தேவதைகள் நம் நாட்டு மருந்துகளுக்கே கோபங் கொள்வ ரானல், இங்கிலீஷ் மருந்துகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? கோபாலையரோ, வைத்திய கலா சாலையிலும் ஆசுபத்திரியிலும் வேலையாக, வீட்டில் தின





மும் சிறு பொழுதே தங்குவார்; அனேக நாட்களில் இரவிலுங் கூட ஆசுபத்திரிக்குப் போய் விடுவார். அடுத்த வீட்டு நாராயணையரும், பத்மாவதி யம்மாளும், அடிக்கடி வந்து பார்த்துத், தம்மாலான உதவி புரிந்து வந்தார்கள். ஆயினும், இரவு பகலென்றின்றி மணிப் படி மருந்து கொடுப்பது, சாவித்திரி யம்மாள் பொறுப்பா யிருந்தது. அவளுக்கோ மருந்தில் ஒரு சிறிதும் நம்பிக்கை யில்லை. கல்யாணி யம்மாளைப் பிடித்திருந்த பேய்கள், தமக்குப் பல வழிபாடுகள் செய்யும்படி தன்னிடம் வந்து வேண்டிக் கொள்வதாகக் கனவுகளும் கண்டாள். தன் தம்பியோ, டாக்டர் பேச்சையே நம்பி, அவள் சொல்வதற்குச் செவி கொடுப்ப தில்லை. ஆகவே, சாவித்திரி யம்மாள், அப் பேய்களுக்கும் மற்றத் தேவதைகளுக்கும் வேண்டியபடி திருப்தி செய்வதாகத் தனக்குள் நேர்ந்து கொண்டு, தன் பணத்தில் நூறு ரூபாவை வேறாக வெடுத்து முடிப்புக் கட்டி வைத்தாள். தேவதைகளின் கோபத்தால் வியாதி அதிகரிக் காதபடி, தன் தம்பி கூடவிருந்த சில போது தவிர, மற்ற வேளைக ளெல்லாம், மருந்தைத் தூரக் கொட்டி வந்தாள். இவ் விஷயத்தில், அடுத்த வீட்டி லிருந்த பத்மாவதி யம்மாளின் தகப்பனாரும் தாயாரும் அவளுக்குப் புத்தி சொல்லி, அவள் நம்பிக்கையைப் பலப் படுத்தினர்கள். ஒரு மாதம் இரண்டு மாத மாயும், வியாதி சிறிதும் குணப் படாதது ஆச்சரியமோ!

இப்படி யிருக்கையில், ஒரு நாள் திடீரென்று, கல்யாணி யம்மாள், தன்னால் எவ்வித மான ஆகாரமும் உட் கொள்ள முடியாதென்று சொல்லி விட்டாள். மறு நாள் சாயங்காலம் வரை, எல்லாரும் அவரவரால் ஏன்ற வரை கெஞ்சியும் பயமுறுத்தியும் பலவந்தப் படுத்தியும் பார்த்தார்கள்: ஒன்றும் பலிக்க வில்லை. ஒரு சிறங்கை பாலை வாயருகே கொண்டு போனாலும், பல்லுக் கிட்டி ஒரு வித வலிப்பு வந்துவிடும். முடிவில் நாராயணையர் போய் டாக்டர் டான்புட்டை அழைத்து வந்தார். அவர் வந்து பார்த்து விட்டு, ஒரு படி பாலைக் கொண்டு வரச் சொல்லி,

கல்யாணி யம்மாள் பக்கத்தில் கட்டிலின் மேல் உட்கார்ந்து கொண்டு, அவளைக் குடிக்கச் சொன்னார். அவள், "என்னால் முடியாது" என்றாள்.

டாக்டர் :—உடனே குடியாவிட்டால் தலை வழியே தண்ணீரைக் கொட்டுவேன்.

கல்யாணி :—என்ன செய்தாலும் சரி; நான் என்ன செய்வேன்? வஞ்சகமா? என்னால் குடிக்க முடியவில்லை.

டாக்டர் :—(கோபாலையரைப் பார்த்து) ஒரு குடம் நிறையத் தண்ணீர் கொண்டு வா.

கோபா :—அவள் சொல்வது மெய் தான்; வஞ்சகமில்லை; பல் கிட்டி விடுகிறது.

டாக்டர் :—(கோபத்துடன) என் சொற்படி நடப்பதாயிருந்தால், இந்த வீட்டில் வைத்தியம் செய்வேன்; இல்லாவிடில் இதோ போகிறேன். கொண்டுவா ஒரு குடம் ஜலம்.

கோபாலையர் பயந்து, உடனே போய்க் கொண்டு வந்தார். டாக்டர் எழுந்து, தம் கையில் குடத்தை வாங்கிக் கொண்டு, "உடனே குடிக்கிறாயா, கொட்டட்டுமா?" என்று கேட்டார்.

கல்யாணி :—என்னால் முடியாது.

வாய் மூடு முன், டாக்டர், ஒரு குடம் நீரையும் கல்யாணி யம்மாள் மேல் கொட்டி விட்டார். பிற்பாடு, அவர், அவளைப் பார்த்து, "இப்பொழுது குடிக்கிறாயா, என்ன?"

கல்யாணி:—(அழுது கொண்டும் முகத்தைத் துடைத்துக் கொண்டும்) நான் என்ன செய்வேன்? என்னால் முடியவில்லையே.

கோபா :—நான் தான் சொன்னேனே, அவளால் நிஜமாகவே முடியவில்லை.

டாக்டர் :—(வெகு கோபத்துடன்) ஒரு தரம் சொன்னால் போதாதா? ஒருவரும் இங்கே இருக்கக் கூடாது; எல்லாரும் வெளியே போங்கள்.





சாவித்திரி :—இந்த முரட்டுத் தனம் ஆகுமா? தேவதைக்குக் கோபம் வந்து விடுமே!

டாக்டர் :—இன்னும் நிற்கிறீர்களா? போ வெளியே, எல்லாரும். கோபால்! நீ தான் முதலில் போ.



உடனே எல்லோரும் பயந்து, திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு, அறைக்கு வெளியே போய் விட்டனர்.

டாக்டர் :—இப்பொழுது என்ன சொல்கிறாய் நீ? உனக்கு வலிந்து வர ஒருவரு மில்லை; இந்தப் பால் அவ்வளவையும் நான் ஐந்து எண்ணுவதற்குள் குடியாவிட்டால், உன் புடவையை யுரிந்து, உன்னை அம்மணமாக்கி விடுவேன். மறு பேச்சு வேண்டாம். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு,———

கல்யாணி யம்மாள் சும்மா விருப்பதைக் கண்டு, அவள் மேற் புடவையைப் பிடித்துத் திடீரென்று டாக்டர் இழுத்தார். உடனே அவள் இடக்கையால் புடவையைப் பலமாய்ப் பிடித்துக் கொண்டு, "இல்லை, குடித்து

விடுகிறேன்,'' என்று சொல்லிப், பாலை யெடுத்து ஒரு துளியும் மீதமின்றிக் குடித்து விட்டாள்.

டாக்டர்:—சரி, இப்பொழுது தான் நல்ல பெண்'' என்று சொல்லி, மற்றவர்களை உள்ளே அழைத்தார். அவர்கள் வந்தவுடன்,

டாக்டர்:—அவள் உடம்பைத் துடைத்து வேறு வஸ்திரம் உடுத்துங்கள். அவளுக்கு ஒன்றுமே யில்லை. நீங்கள் சும்மா துரும்பைத் தூணாக்கி வம்பு பண்ணுகிறீர்கள். இதோ, பாலெல்லாம் குடித்தாய் விட்டது. அவளை ஆசுபத்திரிக் காவது, வேறு அயலூருக் காவது அனுப்பி, வைத்தியஞ் செய்தால் நலம்'' என்று சொல்லிப் போய் விட்டார்.

ஆசுபத்திரிக் கனுப்புவது அனேக காரணங்களால் அசௌகரிய மாகத் தோன்றிற்று. தாம் நன்கு படித்திருந்தும், ஐரோப்பியர்களுக்குள் மிகப்பெரிய உத்தியோகஸ்தரும் தனவான்களும் கூடத் தங்கள் மனைவிமாரையும் குமாரத்திகளையும் ஆசுபத்திரிக்கு அனுப்புவதை அறிந்திருந்தும், தன் மனைவி விஷயத்தில் அப்படிச் செய்வது, அகௌரவமென்றும் அனுசிதமென்றும் கோபாலையரே எண்ணினார். இவ்வித மான வீண் டம்பங்கள் நமக்குள் இன்னும் பல வுண்டு. சாவித்திரி யம்மாள், தன் கோரிக்கைக்கு இது தான் தருணமென்று நினைத்து, தன் தம்பியின் மாமனார் பண்ணை முத்தையர் முன்பே எழுதி யுள்ளபடி, கல்யாணி யம்மாளை அவள் பிறந்த வூராகிய செங்காட்டுக்குத் தானே அழைத்துக் கொண்டு போய், டாக்டர் சொல்லுகிறபடி வைத்தியம் பார்ப்பதாகச் சொன்னாள். அங்கே போய் விட்டால், பேய்களுக்குக் கொடையிட்டுக் கொடுத்தும், மந்திரவாதம் செய்தும், தேவ பாதையை நீக்கிக் கொள்ளலா மென்பது அவளுத்தேசம். வர வர உபத்திரவம் அதிகப் பட்டவே, அவ்வாறே தீர்மானஞ் செய்து, கோபாலையர், தம் தமக்கையையும் மனைவியையும், தாமே தம் வேட்டகத்திற்குக் கொண்டு போய் விட்டார். பக்கத்





தில் திருநெல்வேலியி லுள்ள டாக்டர் ஒருவரை, பட்டணம் டாக்டர் டான்புட் உத்திரவுப்படி வைத்தியஞ் செய்ய நியமித்து, தமக்குத் தினமொரு கடிதம் எழுதும்படி ஏற்பாடு செய்து விட்டு வந்தார். அவர் மட்டும் தனியே இருந்தமையால், நாராயணையர் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டு, படித்து வந்தார்.

## இரண்டாவது அதிகாரம்

ஐயாவையர் தரையில் வேஷ்டியை விரித்து நடைவாசற்படியில் தலை வைத்துப் படுத் திருந்தார். அவர் மனைவி சுப்பம்மாள், வாசல் திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு, அவருடன் சல்லாபமாய்ப் பேசிக் கொண் டிருந்தாள். அவர் பையன் இராமபத்திரனும், பேரன் சீதாபதியும் மேடையில் விளையாடிக் கொண் டிருந்தார்கள்; குழந்தை சீதை லோபாவின் மேல் தூங்கிக் கொண்டிருந்தாள். கடைசியாக இந்தத் தம்பதிக ளிருவரும், அடி மிதி வசவுகளுடன் சண்டை போட்டதை மட்டும் பார்த்தவர், அவர்கள் தாமோ இப்பொழுது இவ்வளவு அந்நியோந்நியமாய் அந்தரங்கமாய் ஸம்பாஷிப்பவர்க ளென்று சமுசயித்தால், அது, அவரது அநுபவக் குறைவையே காட்டும்.

ஐயாவையர்:—ஸந்தியா, ஜபமா, ஒன்றுங் கிடையாது; பூணூ லில்லா விட்டால், பறையனுக்கும் அவனுக்கும், என்ன வித்தியாசம்? அவன் தான் எக்கேடும் கெட்டுப் போகிறான் என்றிருந்தால், இப்பொழுது இவளுக்கும் வந்து விட்டது. இவளும் கீரைக் கடைக்கு எதிர்க் கடையாய், அவனைப் போல் ஆரம்பித்து விட்டாள். பணம் ஒன்று சம்பாதிக்கிறான்; இல்லாவிட்டால், இவர்களை நாய்

கூட ஒப்பாரது.

சுப்பம்மாள் :—பணத்துக் கென்ன பணம், இந்த நாளிலே நாயும் பேயும் தான் சம்பாதிக்கிறது. அடே, நம்மை எடுத்து வளர்த்து இம்மட்டுக்கும் கொண்டு வந்து விட்ட அம்மானே, மாமனாரே, என்று ஒரு திவலையாவது நினைப் பிருக்கா பாருங்களேன். நாம் என்ன சொன்னால் தானென்ன? 'கழுதைக் குபதேசம் காதிலே சொன்னாலும் அபயக் குரலொழிய அங்கொன்று மில்லை,' என்றுதானாகிறது. நீங்கள் வாய் வலிக்கச் சொல்ல வேண்டியது தான், அவனிஷ்டப் படிக்கு அவன் நடக்க வேண்டியது தான். சூரியனைப் பார்த்து நாய் குலையர்தா, அப்படித் தான் நினைத் திருக்கிறான்; அவ்வளவு தான் தன்னை இம்மட்டு உருவாக்கி விட்ட மாமனாருக்கு மரியாதை. படித்து விட்டாலும் படிப்பு! எல்லாம் அதனால் வந்த வினை தான்.

ஐயா :—அவன் தான், எப்படி யானாலும், ஊரார் பிள்ளை, சம்பாதிக்கிறான், அவனிஷ்டம் போல் நடக்கிறான்; இதைப் பாரேன், தாயே தகப்பனே என்று கொஞ்சமாவது நினைவிருக்கா, பாரேன். ஏதோ டஸ் புஸ் என்று நாலு இங்கிலீஷ் வார்த்தை தெரிந்து விட்டால், இவ்வளவு கர்வமா? இவளுமா எம்.ஏ. பரீக்ஷை கொடுத்து, மாதம் நூற்றைம்பது ரூபா சம்பாதிக்கிறாள்? அவன் எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் என்று நிற்கிறது பாரேன். நம்ம வயிற்றில் பிறந்ததே நம்மை இப்படி இளப்பம் பண்ணினால், அவனைச் சொல்வானேன்?

சுப்பம்மாள் :—அவளென்ன செய்வாள்? பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளிய மரத்தில் ஏறாமல் தீருமா? அவன் இப்படி யெல்லாம் ஆட்டி வைக்கிறான், அவள் ஆடுகிறாள். நீங்களாகப் பார்த்து, இந்த மீட்டிங்குக்கு வர வேணும், அந்த நாடகத்துக்கு வரவேணும் என்றால், நானென்ன செய்வேன், சொல்லுங்கள்?






சாது சுந்தர்சிங்



ஸ்ரீ. C. V. ராமன், M. A., F. R. S.



ஸ்ரீ. S. ராமாநுஜம், F. R. S.



160-ம் பக்கத்தின் தொடர்ச்சி

பொருள் முதலைச் சேர்த்து, கை வந்த வழிகளில் பாடுபட வேண்டும். ஒருவர் இருவரால் ஆகாதது, ஊர் கூடினால் எளிதில் முடிந்து விடும். கரும்புத் தோட்டங்கள் மிக்குள்ள ஜில்லாக்களில், முதல் தரமான கரும்பாலைக் கருவிகளும் யந்திரங்களும் கூட்டுறவு முதலைக் கொண்டு வாங்கிப் பயன்படுத்த வேண்டும். வழி வசதிகள் ரோடு ரிப்பேர் முதலிய வேலைகளைக் கூட்டுறவால் செய்யலாம். நியூஸீலந்திலே 1891-ம் வருஷ முதல் ரயில்வே, ரஸ்தா வேலைகள் கூட்டுறவு முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்விதக் கூட்டுறவு வேலைகளில் நம்மவரை முதலில் பழக்க, ஸர்க்கார் உதவி செய்ய வேண்டும். வட்டிக் கணக்கையும் லாபத்தையுமே பார்த்துக் கொண்டிராமல், தேச பக்தர்கள் முன்வந்து, ஊதிய மின்றிப் பொது நன்மைக்காக உழைக்க வேண்டும்.

பம்பாய் மாகாணத்தில் காண்டேஷ் ஜில்லாவிலுள்ள மஹாஸ்வா என்னும் கிராமம் கூட்டுறவு முறைகளில் சிறப்புற்று விளங்குகின்றது. அவ்வூரிலுள்ள ஒவ்வொரு குடும்பத் தலைவனும் ஒரு கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்தவனாவன். பழைய கடன்களையெல்லாம் கூட்டுறவு வழிகளால் தீர்த்தாகி விட்டது; இப்பொழுது சௌக்காரிடத்தில் எவரும் தண்ட வட்டிக்குக் கடன் வாங்குவதில்லை. விளை பொருள்களில் ஐம்பதி லொரு பாகத்தை, கூட்டுறவுச் சங்கத்து நிதிக்குச் சேர்த்து விடுகின்றனர். இவ்வாறு, அந்நிதி, இப்பொழுது பதினெண்ணாயிர ரூபா ஆகிவிட்டது. கூட்டுறவுச் சங்கம் தொடங்கிப் பத்து வருஷ மாகின்றது. இப்பத்தாண்டுகளாக, ஊரில் எவ்வித வழக்கு, சண்டை நேர்ந்தாலும், எதுவுமே நியாயஸ்தலம் ஏறாமல், கூட்டுறவு சங்கத்தாரால் தீர்க்கப்படுகிறது.

சர்க்கார் உதவியும் மேற் பார்வையும் சிற்சில விஷயங்களில் வேண்டுமெனினும், கூட்டுறவு விஷயங்களெல்லாம், கூடியவரை, ஜனங்களாலேயே நடத்தப் படவேண்டும். இதுவே அதி முக்கியமானது. அதிகாரமும் சுயாதீனமும் வளர்ந்து பெருகப் பெருக, தங்களுடைய பொறுப்பும் அதிகரிக்கிறது என்பதை ஜனங்களும் மறக்கலாகாது. கூட்டுறவு வழிகளில் நாடு செழிப்பதை துரைத்தனத்தார் அறிந்து, அவ்வியக்கத்தை ஆதரித்து வருகின்றனர், அன்புடன் பேணி வருகின்றனர் என்பது உண்மையே எனினும், கூட்டுறவியக்கத் தலைமை வகிக்க (Registrar) ஓர் இந்திய உத்தியோகஸ்தரை நியமியா திருப்பது நன்றன்று. இந்திய ஜனங்களின் க்ஷேம லாபங்களைக் கருதும் இவ்வியக்கம், ஓர் இந்தியரால் போஷிக்கப் பட்டு வருவதே பொருந்தும்.

*தங்களால் நியமிக்கப் பட்டுச் சம்பளம் பெறும் உதவி ரிஜிஸ்ட்ரார்களைத் தவிர, சம்பள மில்லாத கௌரவ உதவி ரிஜிஸ்ட்ரார்களையும்* (Honorary Assistant Registrars of Co-operative Societies) *துரைத்தனத்தார் நியமித் திருக்கின்றனர். வண்டியின் ஐந்தாவது சக்கரத்தைப் போல, இது, இடையூறாகவே யிருக்கின்றது. கௌரவ உதவி ரிஜிஸ்ட்ரார்களுக்குத் தக்க அதிகார மில்லாமையும், செல்வாக் கில்லாமையுமே இதன் காரணம். சம்பளம் பெறுபவர்க் கிருக்கும் அந்தஸ்தும் அதிகாரமும் இவர்களுக்கும் இருந்தால் தான், இம்முறை பயன்படும்.*

*நல்ல பண்டங்களை மலிவா யுள்ள காலங்களில்; இடங்களில் மொத்த விலைக்கு வாங்கி, அங்கத்தினர்க்குச் சில்லரைக்கு விற்பதனால், கூட்டுற வாளிகளுக்குக் கனலாப முண்டு. ஆனால் இவ் வியாபாரம் சாமானியமாய் எல்லாரும் செய்யக் கூடிய தல்ல. இவ் வித வர்த்தகத்தில் பழகித்தேர்ந்தவரே இதைச் செய்தற் குரியவர்.*

*வீடுகள் கட்டுவதிலும் நெசவுத் தொழிலிலும் கூட்டுறவினால் பல சௌகரியங்கள் ஏற்படும். இவற்றைச் சார்ந்த முறைகளைப் பிற நாடுகளைப் பார்த்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.*

*கூட்டுறவு முறைகள் மேல் நாடுகளிலிருந்து நமக்கு வந்தன வல்ல. இந்து ஜன சமூகமும் ஊர் வாழ்க்கையும் கூட்டுறவையே அடிப்படையாக் கொண்டு, பல்லாயிரம் ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. வர்ண பேதங்களும் ஆசிரம பேதங்களும் ஹிந்து ஜன சமூகத்தில் கூட்டுறவியக்கத்தின் வழிப் பிறந்தனவே யாம். பிற்காலத்தில் தான் இவை சீரழிந்து கெட்டுப் போயின. வித்தைகளையும் கலை ஞானங்களையும் விருத்தி செய்து கொண்டு, பண்டைக் கால ஹிந்துக்கள், அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு பிறவிப் பேறுகளையும் கூட்டுறவினால் அடைந்து வந்தனர். 'ஒவ்வொருவனும் எல்லார்க்கு மாக, எல்லாரும் ஒவ்வொருவனுக்கு மாக உழைப்பது' என்பதே, சமூக அஸ்திபாரமா யிருந்தது. மேலை யாது நவ நாகரிகம், 'தன்பாடு' என்னும் சுயநய உணர்ச்சியைக் கொண்டு வந்து புகுத்திய பின்பு, போட்டியும் பொறாமையும் பெருகி, ஜன சமூகமானது, இன்ப அலைகள் மேலாக மட்டும் பரந்துள்ள துன்பக் கடல் போ லாகிவிட்டது. மேலையருமே இதை இப்பொழுது அறிகின்றனர். கூட்டுறவும் ஒத்துழைப்புந் தான் இதைச் சீராக்க வல்லன. பண்டை முறைகள் மீண்டும் பரவ வேண்டும். நான்கு வர்ணங்களும், அறிவு, ஆண்மை, செல்வம், உழைப்பு என்னும் நான்கையுமே குறிக்க வேண்டும். அறிவில் அமைந்தோனே அந்தணன்; ஆண்மையிற் சிறந்தோனே க்ஷத்திரியன், ஐசுவரியத்தில் மிக்கோனே வைசியன்; உழைப்பில் உயர்ந்தோனே சூத்திரன் என்றாகவேண்டும். அவரவர் யோக்கியதையையும் குண விசேஷங்களையும் பொறுத்த சௌகரியப் பிரிவுகளே இவை; மாற்றொண்ணாத பிறவிக் குறிகளல்ல. நாம் எல்லோரும் ஒரே கடவுளின் பிள்ளைக ளென்பதை மறந்து விட லாகாது. மேல் கீழ் என்னும் அதிகார தோரணையை விட்டு, எல்லோரும் பொது நன்மைக்காக ஒத்துழைப்போ மாக!*



# விகட விநோத விதூஷக

# வினா விடை

(81-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### யார் பெரியவர்?

**இராமன்**—*எங்கப்பா பொல்லாதவராக்கும்: அவர் பேரைச் சொன்னால், அழுற குழந்தையும் வாயை கப் சிப் என மூடும்.*

**கிருஷ்ணன்**—*ஹ்ஹும்! இம்மட்டுத்தானா! எங்கப்பா பேரைச் சொன்னால், தூங்குகிற குழந்தைகூட எழுந்திருந்து, காள் வாள் என அழுமே!*

### காரணப் பெயர்கள்

**மாணவன்**—*ஏன் சாமி அவனுக்கு வரகுண பாண்டியன் என்று பேர் வந்தது?*

**தமிழ்ப் பண்டிதர்**—*அவனுக்கு நீரிழிவு நோய்; அவன் வரகுச் சோறு தான் உண்பது.*

**மாணவன்**—*கரிகாலச் சோழனுக்கோ?*

**தமிழ்ப் பண்டிதர்**—*அவனுக்கு யானைக்கால் நோயுண்டு.*

**மாணவன்**—*சேரன் செங்குட்டுவன்?*

**தமிழ்ப் பண்டிதர்**—*அவன் மந்தம்; தம்பி இளங்கோவைப் போல் இல்லை. அவன் தந்தை, அவனை உதிரம்பொசியும் படித் தலையில் குட்டுவதுண்டு; அதனால் அப்பெயர்.*

### மிகப் பயந்தவள்

**மாமி**—*மாய்மாலக் கண்ணி மருமகளே! கோழிக் சறிக்குப் பதம் பாரடி.*

**மருமகள்**—*கொக்கோ என்குது, கொத்த வருகுது, அத்தே! நான் மாட்டேன்.*

### இயற்கை அறிவு

**உபாத்தியாயர்**—*ஆலின் இலை எப்படி இருக்கும்?*

**மாணவன்**—*புளியிலை போல் வேலியிற் படர்ந்திருக்கும்.*

:(o):

# பத்திராதிபர் குறிப்புக்கள்

(88-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## நீர்ப்பாசன மசோதா—The Irrigation Bill

இந்த மசோதா சட்டமாகு முன், சில விஷயங்களை மாற்றவும் விளக்கவும் வேண்டும். அவையாவன :— (1) நாட்டில் ஆங்காங்குள்ள கீழ் உத்தியோகஸ்தர்க்கு யதேச்சாதிகாரம் அதிக மிருக்கக் கூடாது. (2) ஸர்க்காருக்கும் குடிகளுக்கும் எவ்வித வழக்கு நேரினும், பொதுவான நியாய சபைகளில் நியாயத்தை நாடும் உரிமை இரு திறத்தார்க்கு மிருக்க வேண்டும். (3) குடியானவர் விரும்பினால், தம் புலங்களுக்குச் சொந்தத் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும் உரிமை யிருக்க வேண்டும். (4) நிலம் குடியானவர் உரிமையே, துரைத்தனத்தார்க் குரியதன்று என்பது, தெளிவாய் விளங்க வேண்டும். (5) மாகாணச் சட்ட சபையின் அநுமதி யின்றி, நீர் வரி நில வரிகளை உயர்த்தும் அதிகாரம் எவருக்கும் இருக்கக் கூடாது. இந்த மசோதாவை ஆராய்ந்து வரும் கமிட்டியார் இவற்றை மறக்க லாகாது.

கடன் பட்டும் இராப்பட்டினியா ? வைக்கத்தில் ஸத்யாக்ரகம் இன்னும் மும்முரமாய்த் தான் நடந்து வருகிறது. இதனிடையே, திருச்சிராப் பள்ளியில், கத்தோலிக் வகுப்பைச் சேர்ந்த கிறிஸ்தவர்க்குள், மேல் கீழ் என்னும் சாதி வேற்றுமை பற்றி, மடி பிடி மயிர் பிடி அடிதடி சண்டைகள் நடந்து, சிலர் கடுங்காயம் அடைந்ததாகத் தெரிகிறது. தனது முன்னோர் மதத்தைக் கைவிட்டுப், புதிதாகப் பிறிதொரு சமயத்தை ஒருவன் தழுவுவது, ஆத்ம லாபத்தையே கருதிச் செய்வது தான் பொருந்தும். எனினும், அப்படித் தழுவிய பின், தன் பழைய மதத்தில் உள்ளனவும் புதிய மதத்தில் இல்லாதனவு மான விலக்கங்களையும், அநாகரிகமும் அசௌகரியமு மான கோட்பாடுகளையும், புது மதக் கொள்கைப்படி கைவிட்டு, முன்னேற்ற மடைய முயலுவது இயல்பும் நன்மதியு மாகும். அப்படிச் செய்



யாது, காசிக்குச் சென்றபின் அங்கேயும் கட்டி யுழப்படும் கடாவைப் போல, முன் சங்கடங்களில் கிடந் துழலுவது முழு மூடத் தனமே யாகும். பிறவி பற்றிய சாதி வேற்றுமை இல்லாமையே, கிறிஸ்து மதத்துக்கும், சாதாரணமாய் வழங்கும் ஹிந்து மதத்துக்கு முள்ள வெளிப்படையான பேதமாகும். ஆதலின், திருச்சிக் கத்தோலிக் கிறிஸ்தவரின் செய்கை, வியப்பையும் நகைப்பையும் தருகின்றது.

ஹிந்துமதம் என்றாலென்ன ? அஹிம்ஸை வழிகளில் ஸத்தியத்தை ஆராய்ந்தறிய முயலுவது தான் ஹிந்து மதம் என்றும் ; கடவுளை நம்பாத ஒரு நாஸ்திகனையும் கூட, உண்மையை நாடி உழைப்பானாயின், ஹிந்து எனலாமென்றும், மகாத்மா காந்தி கூறுகிறார். ஹிந்து மதமானது, அசூயை யற்றது, எல்லை வரம்பற்ற மனத் தாராளத்துடன் எல்லா விதக் கொள்கைகளையும் தழுவியது அது, என்றும் சொல்கிறார். இதுவே, மற்ற அறிஞர் பலர் உள்ளக் கிடக்கையுமாம்.

“ பெண் கல்வி ”—இத்தலைப்பின் கீழ் யான் எழுதியுள்ள கட்டுரையை மற்றோர் பக்கத்திற் காணலாம். அதை அச்சேற்றிய பின், பிரிட்டிஷ் கல்விச் சங்கத்தார் (The British Board of Education), ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்விப் பயிற்சி விஷயத்தில் இருக்க வேண்டிய பேதங்களை ஆராய்ந்து தெளிதற்கென்றே ஏற்படுத்தியதும், கல்விபோதனமுறைகளில் மேதாவிகளாலானதுமான கமிட்டியாரின் சித்தாந்தம் வெளிவந்திருக்கிறது. அதன் கருத்துப் பின் வருமாறு :—இரு பாலார்க்கும் உள்ள வித்தியாசங்களால், கல்விப் பயிற்சியிலும் அவர்களுக்குள் வித்தியாசங்கள் இருக்க வேண்டியதன் அவசியம், எங்கள் விசாரணையில் தெளிவாய்த் துலங்கவில்லை. நாங்கள் விசாரித்த சாக்ஷிகளில், பிள்ளைகளுக்கும் பெண்களுக்குமுள்ள புத்தி வித்தியாசங்களைப் பற்றிச் சிலர் தத்துவங்கள் ஓதினர் ; அந்த வித்தியாசங்களை விட, ஒரு பிள்ளைக்கும் மற்றொரு பிள்ளைக்கும், அல்லது ஒரு பெண்ணுக்கும் மற்றொரு பெண்ணுக்கு முள்ள வேற்றுமைகளே அதிகம் என்று சிலர் கூறினர் ; பிள்ளைகளுக்கே சிறப்பான குண விசேஷமென்று ஒரு சாக்ஷி சொன்னதையே, அடுத்த சாக்ஷி, பெண்களுக்கே அது சிறப்பென்று சொன்னதையும் கேட்டோம். பல்லாயிரம் ஆண்டுகளாக ஆண்களும்

பெண்களும் வாழ்ந்து வந்தும், இன்னும் ஒரு பாலார் மற்றப் பாலாரை, அல்லது தம்மையுமே, நன்கறிந்து கொண்ட பாடில்லை—இவ்விரு பாலாரையும், நடு நிலையாய்ச் சீர்தூக்கி மதிப்பிட மூன்றாவது பாலார் எவருமில்லை—... தற்கால நிலைமையில், பிள்ளைகளையும் பெண்களையும் அவரவர் மனப்போக்குப் படிக் கல்வித் துறைகளில், ஆசிரியர் மேற் பார்வையில், பயில விட்டு விடுவதே உத்தமம்; அவ்வாறின்றி, பிள்ளைகளுக்கு வேறு பெண்களுக்கு வேறென்று, போதனை முறைகளையும் கல்விப் பயிற்சியையும் பாகுபடுத்திப் பிரிப்பது பெருங்கேடு விளைக்கும் என்பதே, எமது தீர்ச்சியான துணிவு.”

விதவா விவாகம்—இதற்கு உதவி செய்தற்கென்றே, லாகூரில் ஒரு சங்கம் ஏற்பட்டு, நம் நாட்டில் மற்றப் பிரதேசங்களிலும் உழைத்து வருகின்றது. இவ்வாண்டில் ஜனவரி 1உ முதல் ஏப்ரல் 30உ வரை, நான்கு மாதங்களில், மொத்தம் 371 விதவா விவாகங்கள் நடந்தன. அவற்றுள் சென்னை ராஜதானியில் இரண்டு தான். மகாத்மா காந்தி, பாலிய விதவைகளின் துயரத்தைக் கண்ணுற்றுச் சகியாதவராய், அவர்கள் மறுமணம் புரிவது தகுமென்று கூறி யிருக்கிறார். வதூவரர் இத்தனை வயதுக்குக் குறைந்தவரா யிருக்க லாகாது என்று வரையறுப்பது நலமென்பதும் அவர் அபிப்பிராயம். 1921-ம் ஆண்டு ஜன சங்கைக் கணக்குப் படி, 12 கோடி பெண்களில், கால் வாசிப் பேர், அதாவது மூன்று கோடி, விதவைகளா யிருக்கின்றனர். இந்தக் கைம் பெண்களுக்குள், ஒரு வயதுக் குட்பட்டவர், 1000 பேர்; 2 வயதுக் குள் 2000; 3 வயதுக்குள் 4000 ; 4 வயதுக்குள் 7000 ; 5 வயதுக் குள் 27,000 ; 10 வயதுக்குள் 2,85,000 ; பத்துக்குமேல் 15 வயதுக்குள் 15,20,000 பேர் ; 15 வயது முதல் 20-க் குள் 42,10,000 ; ஆக மொத்தம் இருபது வயதுக்குள், நமது புண்ணிய பூமியிலே, அறுபது லக்ஷத்து ஐம்பத்தாறாயிரம் விதவைக ளிருக்கின்றனர்.

---

## கதாரத்னாகரம்.

ஓர் இனிமையான மாதாந்தரப் பத்திரிகை.

1920ஷு ஜூன்மீ முதற்கொண்டு நடைபெற்று வருகின்றது. இப்பொழுது 6-வது வால்யம் நடந்து கொண்டு வருகின்றது. யாவரும் படித்துணருமாறு எளிய தமிழ் நடையில் நவ நவமான நாவல்களும், ரசிகமான கதைகளும், விநோத விசித்ரங்களும், யுக்தி தரும் துக்கடாக் கதைகளும், எழுதப்பட்டு வருகின்றது.

உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

சந்தா விகிதம்.

வருட சந்தா ரூ. 2. வெளி நாடுகளுக்கு ரூ. 3-8

மாதிரி காப்பி வேண்டுவோர்

அரையணா ஸ்டாம்பு அனுப்பவும்.

மானேஜர்,

“சுதேசமித்திரன்” லிமிடெட்,

சென்னை.

---



மத விஷயத்தில் நிர்ப்பந்தம்—மனிதனது மனச் சாக்ஷிக்கும் கடவுளுக்கு முள்ள நேர் சம்பந்த மாகும், மதம். அதில் பிறர் தலையிடுவது தகாது. ஒரு மனிதன் தவறான மத நம்பிக்கை கொண்டிருந்தால், அவனைக் கடவுள் நரகத்தில் ஆழ்த்தித் தண்டிப்பார் என்னும் பரந்த கொள்கையுமே தவறு; மனப் பூர்வமாய் நம்புவதொன்றன் பொருட்டு கடவுள் எவனையும் தண்டனை செய்யார்; அப்படிச் செய்தால் அவரே தவ றிழைப்பவர் ஆவர் என்பது தான், மேலான நவநாகரிக சித்தாந்தம். இப்படியிருக்க, கல்வி விருத்தி மதுபான விலக்கு முதலிய பல விஷயங்களில் இது வரை நற் பேரெடுத்து, மற்றத் துரைத்தனங்களுக் கெல்லாம் சிறந்த முன் மாதிரியாக விளங்கி வரும் போபால் துரைத்தனத்திலே, தம்மதம் விட்டு நீங்கும் மகமதியருக்குத் தண்டனை விதிக்கப்படு மென்று புதிதாக விதித்திருப்பதைக் கேட்க, வியப்புண்டாகிறது. இந்நாளில் இப்படியும் நடக்குமோ!

பத்திரிகைக் குறிப்பு:—பஞ்சாமிர்தத்தை நடத்துவதில் எனக்குப் பல வகையில் ஊக்க மளித்து உதவி புரிந்து வரும் பெரியோர்க்கு, என் மனமார்ந்த வந்தனங்கள் உரியன. பலர்க்கும் பயன் படும்படி பத்திரிகையின் வசன நடை மிக எளிதாயிருக்க வேண்டுமென்பதே என் கருத்து. அதனால், இப்பொழுது தமிழில் எழுதக் கூசும் மேதையர் பலர், தாராளமாய் விஷயதானஞ் செய்யலாகும். நான் கோக்கத் துணிந்த மாலையில் முதலாவது காசைக் கண்ணுற்ற அறிஞர் சிலர், உள் [illegible] உவந்து எழுதி விடுத்த

கடிதங்களும், ஒரு பழைய நண்பர் அனுப்பியுள்ள வாழ்த்துப் பாக்களும் எனக்கு ஊக்கத்தை அளிக்கின்றன. எல்லாரையும் திருப்தி செய்ய முயலுவோனுக்கு, தன் மகனோடும் கழுதையோடும் ஆற்றில் விழுந்த கிழவன் கதியே நேரும் அன்றோ? என் புத்திக்கும் பிறர் நன்மதிக்கும் ஏற்றபடி பத்திரிகையை மேன் மேலும் நன்றாக்குவது என் கடனாகும்; அவ்வேலையில் பொருட் குறைவினாலே எனக்குப் பெருங் கவலையும் தாங்க முடியாத நஷ்டமும் நேராதபடி காத்து உதவுவதைத் தமிழ் மக்கள் தங்கடனாக்கிக் கொள்ள வேண்டுகிறேன். அ. மாதவையர்.

---


## ஆசிரியர் அச்சுப் பிரசுராலயம்—புஸ்தகசாலை

எவ்வித அச்சுப்பிரசுரமும், புஸ்தகங்கள் எழுதுகருவிகள் விற்பனையும், தாகுவேலையும் செய்யும் இடம்.

எட்வர்டு எலியட் ரோடு, மயிலாப்பூர், சென்னை

**யாதானும் ஒரு வேலை கொடுத்துப் பாருங்கள்.**

## இப்பொழுதே புதிதாய் வெளி வந்தன

| | | | |
|---|---|---|---|
| இந்து பாக சாஸ்திரம் :—பி. வி. ஜகதீசையர் எழுதியது—திருத்திய இரண்டாம் பதிப்பு—Dr. ஸர் S. சுப்ரமணிய ஐயரும், பாரிஸ்டர் P. சுப்புராயனும் முகவுரை எழுதியது—பதார்த்தங்களின் குணங்களையும் விளக்குவது | 0 | 8 | 0 |
| பாரிஸ்டர் பஞ்சநதம் :—அ. மாதவையரியற்றிய நாடகம்—பத்திரிகைச் சந்தாதார்க்குப் பாதிவிலை. | 0 | 6 | 0 |
| செல்வ விருத்தி :—தி. சே. சுப்ரமண்ணிய ஐயர், M.A., L.T. இயற்றியது. | 1 | 0 | 0 |
| வேடிக்கைக்கதைகள்:— நா. ராமபத்ர தீக்ஷிதர் — | 0 | 4 | 0 |

## குசிகர் குட்டிக்கதைகள்

நமது ஸ்திரீகளும் இங்கிலீஷ் பழக்க மில்லாதவரும் அவசியம் படிக்கவேண்டும். படிக்கப்படிக்கத் தெவிட்டாது.

முதற்பாகம்—8 கதைகள்—விலை பத்தணா தான்.

வெளிபக்கத்தின் தொடர்ச்சி

இந்துசாதனம்—யாழ்ப்பாணம்—19-5-24—"இதில் இக்காலத்துக் குரிய அரிய வியாசங்களும் நாளு சங்கதிகளும் அறிவு விருத்திக்கும் தேச முன்னேற்றத் திற்கும் உரிய கதைகளும், தேசதொண்டு புரித லில் ஈடுபட்டு உழைக்கும் பல தலைவர்களால் வரையப்பட் டுள்ளன. இப்பத்திரிகை தமிழுலகத்துக்கு மிகவும் இன்றியமையாத தாகும்."

நவசக்தி—8-5-24—". பல தமிழ் நூல்களை யாத்துத் தமிழ் நாட்டை வளர்த்து வரூஉம் ஸ்ரீமான் மாதவையரைப் பஞ்சாமிர்தம் ஆசிரியராகக் கொண்டமை கவனிக்கற் பாற்று. அவர் ஆங்கிலப் புலமையொடு தமிழ்ப்புலமையும் நிரம்பப் பெற்றவர்; இனிய எளிய செந்தமிழ் எழுதுவோர் நமது தமிழ் நாட்டில் ஒரு சிலரே யுளர்; அவருள் ஸ்ரீமான் மாதவையர் ஒருவர். அவர் எப்பொருளையும் காய்தல் உவத்த லின்றி ஆராய்ந்து, தாங்காணும் உண்மையை அஞ் சாது வெளியிடுபவர் என்பதை நாம் செவ்வனே அறிவோம். தமிழ்ப் புலமையும் ஆங்கிலப் புலமையும், வேறு பல கலை அநுபவமும் பெற்ற ஒருவரால் நடாத்தப் படும் பத்திரிகையைத் தமிழ்நாடு ஆதரிக்க வேண்டுமென்று நாம் கூற வேண்டுவ தில்லை. ... எவர்க்கும் பயன் படும் குறிக் கொண்டு நிற்பது கவனிக்கத் தக்கது. . : பழனிப் பஞ்சாமிர்தமாகச் செய்யு மென்பதில் ஐயமில்லை. . . மனத்தைக் கவரத்தக்க கட்டுரைகள் பலமிளிர்கின்றன".

# The Authors' Press & Publishing House

PRINTERS, PUBLISHERS, BOOK-SELLERS,

EDWARD ELLIOT ROAD, MYLAPORE, MADRAS

Undertake All kinds of Printing and Other work

JUST PUBLISHED AND SOLD BY US

| | | | |
|---|---|---|---|
| KUSIKA'S SHORT STORIES—Part I—Revised edition—*By A. Madhaviah* 15 Stories | 0 | 12 | 0 |
| LIEUT. PANJU—A Modern Indian—An entrancing Novel—*By A. Madhaviah* | 1 | 0 | 0 |
| HINDU COOKERY—in Tamil—*P. V. Jagadisier*, Revised edition, with Forewords by Dr. Sir S. Subramania Iyer and Dr. P. Subbarayan, Bar-at-Law— | 0 | 8 | 0 |
| FUNNY STORIES—for Young and Old in Tamil | 0 | 4 | 0 |

## WIlL BE READY NEXT MONTH

Only a limited number of copies being printed—Register Your Order To-day or you may be late. PRICE ONE RUPEE.

*Excise & Liquor Control*—by Dr. John Matthai, University Professor of Economics. Printed on Feather-weight paper.

## Some Opinions On the First (April) Number.

*Mr. T. V. Seshagiri Iyer, ex-Judge, Madras High Court*—"Yours is just the kind of Magazine that is required. The articles are of varied interest, practical as well as scholarly. There is no pedantry, a point on which I lay great stress . . . I am satisfied. . ."

*Sjt. C. Rajagopalachariar-Salem*—"The journal is very good."

*Sir P. Ramanathan of Ceylon*—"It promises to be useful."

*The Hindu*—7-5-24—" Such a Magazine as this would be a great benefit to the Tamil people. . The style is throughout simple and readable. We have no hesitation in saying that Mr. Madhaviah has achieved a very high standard of excellence. . . The Magazine deserves to be in every Tamil Home. . ."

*Rev. H. A. Popley*—" ... It is a feast of good things and well bears out its title ... a vital contribution to the progress of the Tamil people.

*Rev. F. Kingsbury*—" . . . I wish that before long *Panchamritam* will be tasted by the young and the old, in many if not in all Tamil homes. . ."

*Mr. K. G. Seshier, ex-Judge, Travancore*—" . . read it with great interest . . has justified the naturally high expectations of those who know you . . attractive, readable and informing, and I hope it will find its way into a large number of Tamil homes."

*Mr. S. Satyamurthy*, M.L.C. :—" I like the Journal very much . . ."

*The Daily Express*—13-5-1924—" . . Unlike other Tamil Magazines in this country Mr. Madhaviah seems to be intent upon making his Journal a really well-got up, neatly printed, interesting and readable one. The subjects are varied and cover all points of view and the list of contributors makes one prepossessed. . ."

*Punditai Asalambikai Ammal*—"புத்துணவாகிய பஞ்சாமிர்த முதற்பதிப்பு வரப்பெற்றுச் சுவைகண்டின்புற்றேன். பழுதியெய்தாது கிட்டிய இப் பஞ்சாமிர்தத்தினை எவரே விரும்பார்?"

சுதேசமித்திரன்—5 5-24—"வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம் . . . என்னென்ன நயங்கள் காணலாமென்று எதிர்பார்த்தோமோ அந்த நயங்கள் எல்லாம் இம்முதற்காபியில் அமைந்திருப்பது பற்றி நாம் மிகவும் மகிழ்வெய்துகிறோம். எல்லாத் துறைகளையும் தழுவிய பத்திரிகைகள் தமிழில் இது வரை இல்லையென்றே சொல்லலாம். பஞ்சாமிர்தம் தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் இக்குறையை நீக்கக் கூடியது என்பது விளங்குகின்றது. தமிழ்ப் பெருமக்கள் துணை நிற்பாரென்று எதிர்பார்க்கிறோம்."

லோகோபகாரி—8-5-24—" . . பெயருக்கேற்ப அழகும் இனிமையும் பொருந்தி விளங்குகிறது . . . இப்பத்திரிகை உலகத்தில் தோன்றினமை தமிழ்மக்களின் பாக்கியமென்று சொல்லவேண்டும்."

உள் புறம் பார்க்க

PRINTED AND PUBLISHED BY A. MADHAVIAH
AT THE AUTHORS' PRESS AND PUBLISHING-HOUSE MYLAPORE, MADRAS.